விலை : 20.00
பக்கங்கள்:பதினாறு + பதினாறு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
ANCL
உலகெங்குமுள்ள நாடுங்கள்
WESTERN UNION
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 07 ஞாயிற்றுக்கிழமை (19.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 062

## தமிழ் மக்கள் பேரவை புலிகளை விட ஆபத்தானது
### கொக்கரிக்கிறது பொது பல சேனா

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பை விடவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் பேரவை மிகவும் ஆபத்தான அமைப்பு என பொது பல சேனா அமைப்பு கூறியுள்ளது.


கொழும்பு-புறக்கோட்டையில் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ள அங்கவீனமுற்ற இராணுவத்தினரை சந்தித்து ஆசிர்வாதம் வழங்கிய பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பிரிவினைவாதத்தை வெற்றிகொள்ள தீவிரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்து வெளியிடுகையில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின்

16 ம் பக்கம் பார்க்க...

## உழவு ஊர்தியுடன் மோதுண்டு மோ.சைக்கிள் கோர விபத்து
### இளைஞன் பலி; மற்றொருவர் படுகாயம்





15 ம் பக்கம் பார்க்க...

## இந்.வெளி.செயலர் இலங்கை வருகை

(யாழ்ப்பாணம்)

இந்திய வெளியுறவு செயலாளர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு அவர் நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

இலங்கை அரசின் அழைப்பின பேரில் அவர் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகையில், எதிர்வரும் 21ஆம் திகதி வரை அவர் நாட்டில் தங்கி இருப்பார் எனவும் தெரிவிக்

15 ம் பக்கம் பார்க்க...

## இராணுவம் சுட்டு வீழ்த்தினாலும்
# காணிக்குள் வீழ்ந்தே உயிரை விடுவோம்!
### நில மீட்பு போராட்டத்தில் கேப்பாப்பிலவு மக்கள் உறுதி



(முல்லைத்தீவு)கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் கடந்த 19 நாட்களாக விமானப்படை முன்பாக தமது காணிகளை விடுவிக்கக்கோரி உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதில் தேவையில்லாமல் காணிக்குள் உட்சென்றால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என்ற அச்சுறுத்தல் குறித்து கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள் தாம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானாலும் காணிக்குள் வீழ்ந்தே உயிரை விடுவோம் என உறுதியாகத் தெரிவித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

15 ம் பக்கம்

## மாணவர் மோதல்; வீடு சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த மாணவர்களிடையே இடம்பெற்ற குழு மோதலில் மாணவன் ஒருவன் காயமடைந்ததுடன் குறித்த மாணவன் தங்கியிருந்த வீடும் சேதமாக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கல்வியிலும்

15 ம் பக்கம் பார்க்க...

## காற்றில் பறக்கவிடப்பட்ட காணி விடுவிப்பு வாக்குறுதி
### இராணுவ ஆட்சியென சிவமோகன் எம்.பி சாடல்



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவது தொடர்பில் பிரதமர் வழங்கிய வாக்குறுதி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதாக சாடியுள்ள த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் கேப்பாப் பிலவு பிலவுக்குடியிருப்பு

15 ம் பக்கம் பார்க்க...

### சட்ட சபையில் கடும் கொந்தளிப்புக்கு மத்தியில்
## தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி



(சென்னை)

தமிழ்நாட்டில் புதிய முதலமைச்சராகப் பதவியேற்ற எடப்பாடி பழனிச்சாமி சட்டசபையில் கடும் கொந்தளிப்புக்கு மத்தியில், தமது அரசின் பெரும்பான்மை பலத்தை நிரூபித்துள்ளார்.

நேற்று காலை தமிழ்நாடு சட்டமன்றம் கூடிய போது, திமுக மற்றும் ஓ.பன்னீர்செல்வம் அணியினர் இரகசிய வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும், இல்லையேல் ஒரு வாரத்துக்கு வாக்கெடுப்பை ஒத்திவைக்க வேண்டும் என்றும் கோரினர்.

16 ம் பக்கம் பார்க்க...

## 13 கிலோ கஞ்சாவுடன் சந்தேக நபர் கைது

(மல்லாவி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள கைவேலிப் பகுதியில் 13.46 கிலோ கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் புதுக்குடியிருப்பு திம்புலிப் பகுதியைச் சேர்ந்த 40 வயதினையுடைய சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்த யாழ்ப்பாணப் பொலிஸார் சந்தேக நபரை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில்

15 ம் பக்கம் பார்க்க...

## ஆட்டோ சாரதியை தாக்கி ஆட்டோ, பணம் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வாடகைக்கு ஆட்டோவினை அமர்த்தி பிரயாணம் செய்த இனந்தெரியாத மூன்று பேர் ஆட்டோ சாரதியினை தாக்கிவிட்டு அவரிடம் இருந்த 12 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் ஆட்டோவினையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று காலை அச்சுவேலி தொண்டைமானாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

இனந்தெரியாத மூன்று பேர் நேற்று காலை 7 மணியளவில் யாழ். நகர் பகுதியிலிருந்து ஆட்டோ ஒன்றினை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர்.

இவர்கள் மூவரும் யாழ்.மாவட்ட

15 ம் பக்கம் பார்க்க...

## நில மீட்புப் போராட்டங்களில் அனைவரும் பங்கேற்க வேண்டும்
### மாவை சேனாதிராசா கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்க அஹிம்சை வழியிலான வன்முறைகளுக்கு இடமளிக்காத ஜனநாயக வழிப் போராட்டங்களில் அனைவரும் பங்கு கொள்ளவேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்

15 ம் பக்கம் பார்க்க...

## வேலையாட்கள் தேவை

எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் விற்பனை
மற்றும் REPAIR (INSTALATION) செய்யும்

கீழ் காணும் வெற்றிடம் உள்ளது

டிஷ் ஆண்டெனா பிற்றிங் வேலை தெரிந்த டெக்னீசியன்
(சம்பளம் 30,000/= கமிஷன், உணவு, தங்குமிடம் இலவசம்)

எலக்ட்ரானிக்ஸ் டெக்னீசியன்
(சம்பளம் 40,000/= உணவு, தங்குமிடம் இலவசம்)

உதவி விற்பனையாளர் (ஆண், பெண்)
(Counter, Sales only சம்பளம் 20.000/=)

ஆண்களாயின் உணவு, தங்குமிடம் இலவசம்

தொடர்பு கொள்ளவும்:- குமார் - 077 771 0785 (7986)


# மரண அறிவித்தல்

## லயன் கனகசபை துரைராஜா

(ஓய்வுநிலை மேலதிக அரச அதிபர் - கிளிநொச்சி மாவட்டச் செயலகம், உதவி அரச அதிபர் தென்மராட்சி பிரதேசம் சாவகச்சேரி - சத்தியமொழிபெயர்ப்பாளர்)

மதவடி ஒழுங்கை, ஈஞ்சடி, சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை துரைராஜா நேற்று முன்தினம் (17.02.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை,
ஈஞ்சடி, சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (சி-7597)

தகவல்:
குடும்பத்தினர்
077 662 2120

## இராணுவ மேஜர் உட்பட மூவர் கைது!

முன்னாள் ஊடகவியலாளர் கீத் நோயார் கடத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் இராணுவ மேஜர் ஒருவர் உள்ளிட்ட மேலும் இரண்டு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று கல்கிசை நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

2008 ஆம் ஆண்டு கடத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் தனது உயிருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை அடுத்து கீத் நோயார் தனது குடும்பத்துடன் வெளிநாட்டில் குடியேறியிருந்தார்.

த நேசன் பத்திரிகையின் இணை ஆசிரியரான கீத் நோயார் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணைகளை மேற்கொண்ட நிலையிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ)

# மரண அறிவித்தல்



## திருமதி ஆறுமுகம் அருளாம்பிகை

(வெற்றிலையூர் ஆறுமுகத்தின் மனைவி)

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் அருளாம்பிகை நேற்று (18.02.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தங்கமுத்து தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - தெய்வானை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் பாசமிகு மனைவியும், பரமேஸ்வரன், கனகாம்பிகை, காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் கமலாம்பிகை, விக்கினேஸ்வரன் (லண்டன்), வேதநாம்பிகை, குகேஸ்வரன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோன்மணி, ஆறுமுகம் (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்), சந்திரமதி, சுந்தரலிங்கம், கௌரி, சத்தியராணி, பவானி (மருந்தகவியலாளர் - காரைநகர் பிரதேச வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான தம்பையா, தங்கம்மா, சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற உமாதேவி, செல்வராணி மற்றும் இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மயூரன், கயூகரன், அகல்யா, நிரஞ்சினி, தனாகரன், குகநந்தினி, லோகானந்தன், கீதாஞ்சலி, கஜேந்திரன், வினோயினி, கஜானி, சசிதரன், அகிலன், ஜனகன், உமாகாந்தன், மாதுரி, திவாகரன், குயிலினி, சாரதா, தேனுசன், வித்தியாகர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை( 20.02.2017) திங்கட்கிழமை அவரது இடைப்பிட்டி இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இடைப்பிட்டி,
காரைநகர். (7997)

குடும்பத்தினர்.
077 175 4680

# மரண அறிவித்தல்கள்



## திருமலைச்செல்வம் சஞ்சிவ்

நவிண்டில் கரணவாய் வடக்கு சக்களாவத்தையை பிறப்பிடமாகவும், நவிண்டில் திருமகள் சோதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமலைச் செல்வம் சஞ்சிவ் நேற்று (18.02.2017) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நவிண்டில் சக்களாவத்தையை சேர்ந்த திருமலைச்செல்வம் - சியாமினி (செல்லா டிஜிட்டல் வீடியோ) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், பிரதீப், தனுஷ்கர் (நெல்லியடி ம.மா.வி), கிஷோர் (நெல்லியடி ம.மா.வி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பத்மலோசினி மற்றும் சிவகுமார் - ஜெயசோதி தம்பதிகளின் பேரனும், ஜெயக்குமார் (சுவிஸ்), சுபாசினி (சுவிஸ்), அன்னலட்சுமி (செல்வி- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான தவராஜா, செல்வராஜா, செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவிண்டில் எள்ளங்குள மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருமகள் சோதி வீதி,
நவிண்டில். (சி-7596)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 021 226 2262, 077 314 4808



## செல்லையா பாலசுந்தரம்

கரணவாய் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுந்தரம் நேற்று முன்தினம் (17.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுகந்தி அவர்களின் அன்புக் கணவரும், ஜனகன், ஜனனீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அபிதா அவர்களின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சிவஞானசுந்தரம் மற்றும் திருஞானசுந்தரம், சகுந்தலாதேவி, சிவபாதசுந்தரம், சிவசுந்தரம், சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாக்கியம், சறோஜினிதேவி, சாந்தினி, அச்சலிங்கம், சிவயோகம், வெண்ணிலா, அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2017) திங்கட்கிழமை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லன்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுந்தரவாசா, கரணவாய்
கிழக்கு, கரவெட்டி. (சி-7595)

தகவல்: குடும்பத்தினர்.
அ.திருக்குமரன் (மருமகன்) 077 604 0739

# தமிழக சட்டசபையில் அமளிதுமளி

## அதிரடிப் படையினர் குவிப்பு





(சென்னை)

தமிழக சட்டமன்றத்தில் அரசு மீதான நம்பிக்கை தீர்மானத்தை முதலமைச்சர் முன்மொழிந்தபோது, அமளியில் ஈடுபட்டதால் தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றும்படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

முதலமைச்சராக பொறுப்பேற்ற சசிகலா ஆதரவாளரான எடப்பாடி பழனிச்சாமி, நேற்று தனது பெரும்பான்மையை நிரூபிக்க ஏதுவாக சட்டசபை சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. முற்பகல் 11 மணிக்கு அவை கூடியதும், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை தீர்மானத்தை முன்மொழிந்து வாக்கெடுப்பு நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

ஆனால், இரகசிய வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து முழக்கமிட்டதால் வாக்கெடுப்பு தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இரகசிய வாக்கெடுப்பு கோரிக்கையை சபாநாயகர் தனபால் நிராகரித்தார்.

இதனால் சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டு தி.மு.க. எம்.எல்.ஏக்கள் முழக்கமிட்டனர். புத்தகங்களை கிழித்து எறிந்தனர்.

சபாநாயகர் இருக்கைக்கு முன்பு உள்ள மேசை உடைக்கப்பட்டு தலைகீழாக கவிழ்க்கப்பட்டது. மைக்குகள் உடைக்கப்பட்டன. ஒருகட்டத்தில் சபாநாயகரின் இருக்கை மீது ஏறவும் சில எம்.எல்.ஏக்கள் முயன்றனர்.

இதனால் அவையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது. இவ்வாறு எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டபோதும், எடப்பாடி பழனிச்சாமி தரப்பு எம்.எல்.ஏக்கள் அமைதியாக இருந்தனர்.

இதற்கிடையே, சட்டசபை வளாகத்தில் அசாதாரணமான சூழ்நிலை நிலவியதையடுத்து, அதிரடிப்படை பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

தலைமைச் செயலகம் செல்லும் சாலைகளும் மூடப்பட்டு பொலிஸ் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், ஒரு மணிக்கு மீண்டும் அவை கூடியது. அப்போது, அவையில் தி.மு.க. உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதம் குறித்து பேசிய சபாநாயகர் தனபால், அவையை நடத்த வேண்டிய கடமை தனக்கு உள்ளதாக தெரிவித்தார்.

இதையடுத்து நம்பிக்கை வாக்கெடுப்புக்கான தீர்மானத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் முன்மொழிந்தார்.

அப்போதும் தி.மு.க. உறுப்பினர்கள் அமைதியடையாமல் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அனைவரையும் வெளியேற்றும்படி சபைக் காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார். சட்டப்பேரவை மாண்புகளை குலைத்ததால் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஆனால், வெளியேற மறுத்து தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர். அவர்களை சபைக் காவலர்கள் வெளியேற்ற முயன்றனர். தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற மறுத்ததால், காவலர்களுக்கும் அவர்களுக்குமிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். சபாநாயகரின் ஒலிவாங்கி (மைக்) மீண்டும் உடைக்கப்பட்டது.

உறுப்பினர்களை வெளியேற்ற முடியாமல் அவைக் காவலர்கள் திணறினர். இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் பிற்பகல் 3 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. (இ-3)

## வாக்கெடுப்பு முறை எனது தனிப்பட்ட முடிவு; என் உரிமையில் யாரும் தலையிடக் கூடாது

### சபாநாயகர் தனபால் அறிவிப்பு

வாக்கெடுப்பு முறை எனது தனிப்பட்ட முடிவு, என் உரிமையில் யாரும் தலையிடக் கூடாது என்று சட்டப்பேரவையில் சபாநாயகர் தனபால் அறிவித்தார். சட்டப்பேரவையில் பலத்த அமளிக்கிடையே நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை எடப்பாடி பழனிச்சாமி முன்மொழிந்தார்.

சட்டப்பேரவையில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின், "இரகசிய வாக்கெடுப்பு மட்டுமே உண்மையான ஜனநாயகத்துக்கு வழிவகுக்கும். வேறொரு நாளில் நம்பிக்கை வாக்கெடுப்பு தொடங்க வேண்டும்" என்றார்.

ஸ்டாலின் கோரிக்கை சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டது.

ஓ.பி.எஸ். பேசுகையில், "கூவத்தூரில் எம்.எல்.ஏக்கள் அடைத்து வைக்கப்பட்டதை அனைவரும் அறிவர். மக்களின் குரல் பேரவையில் ஒலிக்க, சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொகுதிக்குச் சென்று வந்த பிறகே வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையின் காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.ஆர். ராமசாமியும் இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று சபாநாயகர் தனபால் கூறினார். மேலும், வாக்கெடுப்பு முறை எனது தனிப்பட்ட முடிவு, என் உரிமையில் யாரும் தலையிடக் கூடாது எனவும் அறிவித்தார். (இ-3)

## எம்.எல்.ஏக்கள் வெறியேறியதும் கூவத்தூர் விடுதி மூடப்பட்டது




சட்டசபையில் நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பிற்காக சசிகலா ஆதரவு எம்.எல். ஏக்கள் அனைவரும் கூவத்தூரில் இருந்து சென்னைக்கு புறப்பட்டதும், அவர்கள் தங்கியிருந்த சொகுசு விடுதி மூடப்பட்டுள்ளது. தமிழக முதலமைச்சராக சசிகலா பதவியேற்கும் வகையில், அ.தி.மு.க. சட்டமன்ற கட்சி தலைவராக தேர்வு செய்யப்பட்டார். ஆனால், ஆட்சியமைப்பதில் தாமதம் ஏற்பட்டதால், சசிகலாவுக்கு ஆதரவு அளித்து கையெழுத்திட்ட எம்.எல்.ஏக்கள் கூவத்தூரில் உள்ள தனியார் சொகுசு விடுதியில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், கூவத்தூரில் 11 நாட்களாக எம்.எல்.ஏக்கள் தங்கியிருந்த தனியார் சொகுசு விடுதி (கோல்டன் பே ரெசார்ட்) தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் சட்டமன்ற கூட்டத்தில் பங்கேற்பதற்காக சென்னை திரும்பியதையடுத்து, பராமரிப்பு பணிகளுக்காக விடுதியை மூடியிருப்பதாக நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ-3)

## ஸ்டாலின் உட்பட தி.மு.கவினர் குண்டுக்கட்டாக வெளியேற்றம்



(சென்னை)

தமிழக சட்டமன்றத்தில் அரசு மீதான நம்பிக்கை தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பை நடத்த விடாமல் அமளியில் ஈடுபட்ட தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவைக்காவலர்கள் குண்டுக்கட்டாக வெளியேற்றினர்.

முதலமைச்சராக பொறுப்பேற்ற எடப்பாடி பழனிச்சாமி, நேற்று தனது பெரும்பான்மையை நிரூபிக்க ஏதுவாக சட்டசபை சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது.

முற்பகல் 11 மணிக்கு அவை கூடியதும், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை தீர்மானத்தை முன்மொழிந்து வாக்கெடுப்பு நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

ஆனால், இரகசிய வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து முழக்கமிட்டதால் வாக்கெடுப்பு தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இரகசிய வாக்கெடுப்பு கோரிக்கையை நிராகரித்த தனபால், வாக்கெடுப்பை எவ்வாறு நடத்துவது என்பது சபாநாயகரின் உரிமை என்றும், அந்த உரிமையில் யாரும் தலையிட முடியாது என்றும் கூறியதால் எம்.எல். ஏக்களின் கோபம் மேலும் அதிகரித்தது.

சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டு தி.மு.க. எம்.எல்.ஏக்கள் முழக்கமிட்டனர். சபாநாயகர் இருக்கை மற்றும் அவரது ஒலிவாங்கி (மைக்) சேதப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக முதலில் பிற்பகல் ஒரு மணி வரையிலும், பின்னர் 3 மணி வரையிலும் அவை ஒத்திவைக்கப்பட்டது.

அத்துடன், அமளியில் ஈடுபட்ட தி.மு.க. எம்.எல். ஏக்கள் அனைவரையும் வெளியேற்றும்படி சபைக் காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார்.

ஆனால், வெளியேற மறுத்து தி.மு.க. உறுப்பினர்களை அவைக்காவலர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்ற முயன்றனர். இதனால், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். அவர்களை அவைக் காவலர்கள் குண்டுக்கட்டாக வெளியேற்றினர்.

வெளியேற மறுத்து தரையில் அமர்ந்து தர்ணா செய்த மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க. எம்.எல்.ஏக்களும் வெளியேற்றப்பட்டனர். பின்னர் ஸ்டாலின் உள்ளிட்ட அனைவரும் ஆடைகள் கலைந்த நிலையில், கவலை தோய்ந்த முகத்துடன் வெளியே வந்தனர்.

இந்த சம்பவங்களால் சட்டசபை வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (இ-3)

## குடும்ப ஆதிக்கத்தை எதிர்த்து வாக்கெடுப்பை புறக்கணித்தேன்

### எம்.எல்.ஏ. அருண்குமார் தெரிவிப்பு

அ.தி.மு.கவில் குடும்ப ஆதிக்கத்தை எதிர்த்து வாக்கெடுப்பை புறக்கணிப்பதாக கோவை வடக்கு தொகுதி எம்.எல்.ஏ. அருண்குமார் தெரிவித்துள்ளார். மேலும், கட்சியில் தான் வகித்துவந்த மாவட்டச் செயலாளர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று சனிக்கிழமை காலை கோவையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், எனக்கு பதவி, புகழ், பணம் ஏதும் முக்கியமில்லை. கட்சி மட்டும்தான் முக்கியம். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. இன்று, மக்களின் விருப்பப்படி நான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன். இந்த முடிவால் அணி மாறுகிறேன் என்ற பேச்சுக்கே இடமில்லை. அதிமுகவில் அணிகளுக்கு இடமில்லை.

எடப்பாடி பழனிச்சாமி முதல்வரானதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் கட்சியில் ஒரு குடும்ப ஆதிக்கத்தை அனுமதிக்கும் தலைமையின் முடிவில் எனக்கு உடன்பாடு இல்லை. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே நம்பிக்கை வாக் கெடுப்பை புறக்கணித்திருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# வீரர்களின் கிரிக்கெட் போர் சமநிலையில் முடிவுற்றது




வீரர்களின் போர் என அழைக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அணிகள் மோதும் 17வது பெரும் தொடர் துடுப்பாட்ட போட்டி சமநிலையில் முடிவுற்றது.

# ஹோலியை புகழ்ந்த வீரர்



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ், அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்காக முழு மூச்சில் தயாராகி வருகிறார்.

இந்நிலையில் அவர் அணித் தலைவர் விராட் ஹோலியை,



பந்து வீச்சாளர்களுடைய தலைவர் என புகழ்ந்து தள்ளியுள்ளார். மேலும் அவர் பந்துவீச்சாளர்கள் சுதந்திரமாக பந்து வீச ஊக்குவிப்பதுடன், அவர்களுக்கு ஏற்ற முறையிலேயே களத்தடுப்பை தேர்வு செய்வார்.

இந்த நிலையில் தாங்கள் எடுக்கும் முடிவு பயன்பெறவில்லை என்றால் மட்டுமே மாற்றுதிட்டத்தை வழங்குவார் என கூறியுள்ளார்.


அத்துடன் அணில் கும்ளே அவுஸ்திரேலிய வீரர்களை எதிர்கொள்வது மற்றும் பந்துவீச்சுக்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும் வோனர் ஓட்டங்களை குவிப்பது போல இந்தியாவில் செயற்பட ஒருபோதும் முடியாது, விரைவில் ஆட்டம் இழக்கச் செய்வது மட்டுமன்றி அவுஸ்திரேலிய வீரர்களுக்கு சவாலாகவும் இருப்போம், அத்துடன் வோனரை வீழ்த்துவது தான் எங்களின் இலக்காக இருக்கும் என அவர் கூறியுள்ளார்.

# சர்ச்சை மன்னன் ஸ்ரீசாந்த் கிரிக்கெட் வாரியத்துக்கு கடிதம்

## ஆயுள் தடையை நீக்கக்கோரி

சூதாட்ட சர்ச்சையில் சிக்கி விடுதலை செய்யப்பட்ட இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் கிரிக்கெட் வாரியத்திற்கு அதிரடி கடிதம் எழுதியுள்ளார்.



தன் மீதான ஆயுள்கால தடையை நீக்க கோரியே சர்ச்சை மன்னன் ஸ்ரீசாந்த் கிரிக்கெட் வாரியத்தின் புதிய நிர்வாகிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

2013-ம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியின் போது சூதாட்டத்தில் ஈடுபட்ட ஸ்ரீசாந்துக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமான பிசிசிஐ ஆயுள்கால தடை விதித்தது.

ஆயுள்கால தடை விதிக்கப்பட்ட ஸ்ரீசாந்த் உள்ளிட்டோரை டெல்லி நீதிமன்றம் 2015-ம் ஆண்டு சூதாட்ட வழக்கில் இருந்து விடுவித்தது.

இந்த நிலையில் தன் மீதான ஆயுள்கால தடையை நீக்கக்கோரி கிரிக்கெட் வாரியத்தின் புதிய நிர்வாகிகளுக்கு ஸ்ரீசாந்த் கடிதம் எழுதியுள்ளார். (க)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## மல்லாவி வர்த்தகர்கள் நாளை கடையடைப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு - பிலக்குடியிருப்பு மக்களினதும் மற்றும் புதுக்குடியிருப்பு மக்களினதும்

வாழ்வாதாரத்துக்குரிய காணிகளை மீட்பதற்காக அந்த பகுதி மக்கள் நடத்தி வரும் அறவழிப் போராட்டங்களிற்கு மல்லாவி வணிகர் கழகத்தினர் ஆதரவு தெரிவித்து தமது வர்த்தக நிலையங்களை மூடி அடையாள கண்டனப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

இக்கண்டன போராட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8 தொடக்கம் நண்பகல் வரை வர்த்தக நிலையங்களை மூடி நடத்தவுள்ளதாக மல்லாவி வணிகர் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (செ-15)

# பூங்காவில் அமைக்கப்பட்ட ஊஞ்சல் பாறி விழுந்ததில் சிறுவன் காயம்

(குருமன்காடு)

வவுனியா நகரசபைப் பொதுபூங்காவில் அமைக்கப்பட்டிருந்த ஊஞ்சல் ஒன்று அடியோடு பாறி விழுந்ததால் ஊஞ்சல் ஆடிய சிறுவன் ஒருவன் காயமடைந்துள்ளதுடன், அருகில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்கள் தெய்வாதீனமாக காயங்கள் ஏதுமின்றி தப்பியுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

10 மில்லியன் ரூபாய் நிதியில் புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட வவுனியா, பூங்காவீதியில் அமைந்துள்ள நகரசபை பொதுப்பூங்காவில் இரும்பு குழாய்கள் மூலம் பொருத்தப்பட்டு அமைக்கப்பட்டிருந்த மூன்று பேர் ஆடக்கூடிய நிரைகளைக் கொண்ட ஊஞ்சலில் மூன்று சிறுவர்கள் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்த போது அவ் ஊஞ்சல் அடியோடு பாறிச் சரிந்து விழுந்துள்ளது.


இதன்போது ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்த சிறுவன் நிலத்தில் விழுந்து அடிபட்டதுடன் அவ் ஊஞ்சலில் அகப்பட்டு காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

அதே ஊஞ்சல் இணைப்பில் ஆடிய இரு சிறுவர்கள் ஊஞ்சல் பாறி விழுந்த போது குதித்து தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றி தப்பியுள்ளனர்.

காயமடைந்த சிறுவன் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவன் ஆவான்.

இதேவேளை, இவ் ஊஞ்சல் அமைக்கப்பட்ட குழாய்கள் ஆழமாக புதைக்கப்படாததன் காரணமாகவே பாறி விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-250)

# இலங்கை - அவுஸ்திரேலிய 2வது இருபது - 20 இன்று



இலங்கை கிரிக்கெட் அணி மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியா சென்றுள்ளது. மெல்பேர்னில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இலங்கை 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா- இலங்கை அணிகள் மோதும் 2-வது 20 ஓவர் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு அவுஸ்திரேலியா பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில் இலங்கை அணி இன்றைய ஆட்டத்திலும் வென்று தொடரை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது. (க)

# பயிற்சி ஆட்டத்தில் ஆஸி முன்னிலை இந்தியா “ஏ” யும் வலுவான நிலையில்



பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 7 விக்கெட் இழப்பிற்கு 469 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இந்தியா ‘ஏ’ 4 விக்கெட் இழப்பிற்கு 176 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

இந்தியா ‘ஏ’ - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று நாட்கள் கொண்ட பயிற்சி ஆட்டம் நேற்று முன்தினம் மும்பையில் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா 5 விக்கெட் இழப்பிற்கு 327 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. மிட்செல் மார்ஷ் 16 ஓட்டங்களுடனும், வேட் 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று தொடர்ந்து விளையாடிய இருவரும் அரைசதம் அடித்தனர். மிட்செல் மார்ஷ் 75 ஓட்டங்களிலும், வேட் 64 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். அவுஸ்திரேலியா அணி 7 விக்கெட் இழப்பிற்கு 469 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது முதல் இன்னிங்சை இடைநிறுத்தியது.

பின்னர் இந்திய ‘ஏ’ அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. ஹெர்வாத்கர், பன்சால் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஹெர்வாத்கர் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து ஷ்ரேயாஸ் அய்யர் களம் இறங்கினார். பன்சால் 36 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

அய்யர் அதிரடியாக விளையாடினார். அவருக்குப்பின் வந்த பாவ்னே 25 ஓட்டங்களிலும், கப்டன் ஹர்திக் பாண்டியா 9 ஓட்டங்களிலும் வெளியேறினார்கள். ஆனால் அய்யர் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தார். 2-வது நாள் ஆட்ட முடிவில் இந்தியா ‘ஏ’ அணி 4 விக்கெட் இழப்பிற்கு 176 ஓட்டங்கள் எடுத்துள்ளது. அய்யர் 85 ஓட்டங்களுடனும், ரிஷப் பந்த் 3 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (க)

# கடற்புலிகள் தொடர்பாக பாகிஸ்தானில் பாடம் நடத்திய இலங்.கடற்படைத் தளபதி



பாகிஸ்தான் கடற்படையின் போர்க் கல்லூரியில் கடற்புலிகள் தொடர்பாகவும், அவர்களின் எழுச்சி, வீழ்ச்சி தொடர்பாகவும் விரிவுரை ஒன்றை நிகழ்த்தியுள்ளார் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன.

பாகிஸ்தானுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை லாகூரில் உள்ள பாகிஸ்தான் கடற்படையின் போர்க் கல்லூரிக்குச் சென்றிருந்தார்.

பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகள் மற்றும் இலங்கை கடற்படை உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் கடற்படை அதிகாரிகள், இந்த லாகூர் கடற்படை போர்க் கல்லூரியில் அதிகாரிகளுக்கான கற்கைநெறியை பயின்று வருகின்றனர். இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, 1995ஆம் ஆண்டில், இந்த போர்க் கல்லூரியில் பயிற்சிகளை பெற்றிருந்தார்.

இங்கு சென்ற இலங்கை கடற்படைத் தளபதி, பயிற்சி பெற்று வரும் அதிகாரிகள் மத்தியில், ' மரபுசாரா எதிரியுடனான இலங்கை கடற்படையின் போர் அனுபவங்கள்' என்ற பொருளில் உரையாற்றினார். மரபுசாரா எதிரியுடன் இலங்கை கடற்படை எவ்வாறு போரிட்டது, இந்த அச்சுறுத்தலை ஒரு மரபுசாரா கடற்படை எவ்வாறு எதிர்கொண்டது, மூன்று பத்தாண்டுளாக நீடித்த போரில் வெற்றியீட்டியது எப்படி என்று அவர் தனது உரையில் விரிவாக விளக்கிக் கூறினார்.

இதனை விரிவாக விளக்கும் வகையில், கடற்புலிகளின் வளர்ச்சி, விடுதலைப் புலிகளின் தற்கொலை தாக்குதல் அச்சுறுத்தல், இலங்கை கடற்படையின் பதில் நடவடிக்கை, தற்கொலை தாக்குதல்களை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள், சிறிய படகுகள் கருத்திட்டம் குறித்த ஆய்வும், அபிவிருத்தியும், விடுதலைப் புலிகளின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களின் அழிப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து இலங்கை கடற்படைத் தளபதி விளக்கமளித்துள்ளார். (இ-7)

# நாடு திரும்பினார் பிரதமர்



அவுஸ்திரேலியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் இரவு 11.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அந்த நாட்டின் டேய்கின் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது. சட்டம் மற்றும் நாட்டின் ஒற்றுமைக்காக ஆற்றிய சேவைக்காக பிரதமருக்கு இந்த கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.

இதேவேளை, அவுஸ்திரேலியா சென்ற பிரதமர் நேற்றைய தினம் சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டார் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## “கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்”

## நினைவில் நீங்காத ஐந்தாம் ஆண்டு

பிறப்பு 20 07 1980

இறப்பு 19 02 2012



### அமரர் யோண் கிளமன்ரைன்

அமைதியாய் ஐந்தாண்டு நகர்ந்து போனது
உமையிழந்து ஓர் யுகம்போல் ஆனது
நினைவில் உம் திருமுகம் நிழலாய் ஆடியது
கனவிலும் உம் அன்பு முகம்- காணமனம் ஏங்கியது
விண்ணுலகில் உம் ஆன்மா இன்பமாய் இளைப்பாற
மண்ணுலகில் இருந்து நாம் இறையருள் வேண்டுகின்றோம்.

27,சேமக்காலை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (7993)

நீங்கா நினைவுகளோடு
ஏங்கும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**திரு. விஸ்வரெத்தினம் வதனபாஸ்கரன் (பழம்)**

**யாழ். பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை)**

**மலர்வு:- 12.12.1974 உதிர்வு:- 14.02.2017**

யாழ்ப்பாணம், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Aubervilliers ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வதனபாஸ்கரன் (பழம்) 14.02.2017 அன்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வரெத்தினம்-சந்திரவதி (இலங்கை) தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சச்சிதானந்தம்-சந்திரமதி (இலங்கை) தம்பதிகளின் மருமகனும் சுசீலாவின் அன்புக்கணவரும் சஞ்சிகா, சுஜின், காவியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரி (இலங்கை), பிரபாகரன் (பிரான்ஸ்), சந்திரிகா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மருசன், யனிஸ்காவின் அன்பு மாமனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(7995)

தகவல்:- தம்பி (பிரபாகரன்)
TP. No. -003 365 257 2994/ 077 711 1016

## மரண அறிவித்தல்



**அமரர் சண்முகம் பிரபாகரன் (பிரபா)**

**உதிர்வு:- 03.05.1971 மறைவு:- 17.02.2017**

அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் அளவெட்டி மலைவேம்படி அபிஷா கட்டடப்பொருள் உரிமையாளருமாகிய சண்முகம் பிரபாகரன் (பிரபா) 17.02.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. திருமதி சண்முகம் சுபத்திரையின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் பரமேஸ்வரியின் அன்பு மருமகனும் கவிதாவின் அன்புக்கணவரும் அபிஷாயினி ,ர்ஜனா ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் பாஸ்கரன், பரராஜசிங்கம், முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ரணிதா, விஜிதா, சகிதா, திருக்குமார், கோமளேஸ்வரி, கலைமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19.02.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

மலைவேம்படி தெற்கு
மலைவேம்படி, அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
077 684 6293, 077 624 7543

(7992)

## இராசி பலன்

19.02.2017
(மாசி 07, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
அட்டமி பிற்பகல் 2.39 மணிவரை
அனுசம் முன்னிரவு 10.22 மணிவரை
சுபநேரம் 9.32-11.02 மணிவரை
இராகுகாலம் 05.02-6.32 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி, பரணி | | |
| | | | ராகு |
| | சந் சனி | குரு | |

**மேடம்:** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், பண வி[ர]யங்கள் கூடும் நாள், சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் கூடும், போசன சுகமுண்டு, பகைவர்கள் விலகுவர், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்:** சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப் புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பாதை புலப்படும் நாள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**தனுசு:** எடுத்த காரியத்தை நிறை வேற்றுவதில் சற்று அலைச் சல்கள் ஏற்படலாம், தேக நலனில் சில இடையூறுகள் ஏற்பட்டு அகலும், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம் உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்:** மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன நன்மையுண்டு.

**மீனம்:** எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

# வாள்வெட்டு; சமூக விரோதிகளை கைது செய்ய பொலிஸார் - அதிரடிப் படையினர் இணைவு

(யாழ்ப்பாணம்)

யாழில் வாள்வெட்டு சம்பவத்தில் ஈடுபட்டு வரும் சமூகவிரோத கும்பல்களை சேர்ந்தவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து முன்னெடுத்து வருவதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பல சமுதாய சீரழிவுகள் அதிகரித்துள்ள நிலையில் அண்மைக்காலங்களாக வாள்வெட்டுக்கலாசாரம் மேலோங்கியுள்ளது. அண்மையில் கந்தர்மடம் அரசடி பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு கடை ஒன்றிற்குள் புகுந்த சமூகவிரோத கும்பல் கடையின் மீது பெற்றோல் குண்டை வீசி அங்கிருந்தவர்கள் மீது வாள்வீச்சு தாக்குதலும் மேற்கொண்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் மட்டுமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனையோர் தலைமறைவாகியுள்ளனர்.

இந்த நிலையில் தலைமறைவாகியுள்ள ஏனைய நபர்களை கைது செய்வதற்கும், அதன் பின்னர் சித்தன்கேணி மற்றும் பல இடங்களில் ஈடுபட்ட சமூக விரோத கும்பல்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

யாழில் மீண்டும் திடீரென சமூகவிரோத கும்பல்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ள நிலையில், இதனை க் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸ், விசேட அதிரடிப்படை என்பன களமிறக்கப்பட்டும் பெருமளவில் நன்மை பயக்கவில்லை.

எனினும் ஒரு சிலர் பொலிஸாரின் செயற்பாடுகளினால் சில குழுக்கள் கைது செய்யப்பட்டுள்ளன.

இதில் கடந்த வாரங்களில் வாள்களுடன் 5 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை யாழ்.நல்லூர் அரசடியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை வாள்வெட்டில் ஈடுபட்டுவரும் முக்கிய நபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை. இவர்களை தேடி பொலிஸார் இரவு வேளைகளில் தமது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

விசேடமாக இரவு வேளைகளில் மோட்டார் சைக்கிளில் செல்லும் இளைஞர்கள் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர்.


ஆங்காங்கே விசேட அதிரடிப் படையினரும் கடமையிலிருந்து வருகின்றனர்.

இதேவேளை இராணுவத்தினரும் கடந்த சில நாட்களாக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## தாய்மொழித்தின விழா

யாழ்.தமிழ்ச்சங்கமும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்தும் சர்வதேச தாய்மொழித்தின விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். இதில் வரவேற்புரையை சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் சி.வன்னியகுலமும் வாழ்த்துரையை கல்லூரி அதிபர் தேவராணி நவரட்ணமும் நிகழ்த்துவர்.

தமிழ்மொழிக் கல்வியின் பயன்கள் என்ற பொருளில் சிறப்புரையை தமிழ்ச்சங்கப் பெருந்தலைவரும் தகைசார் வாழ்நாள் பேராசிரியருமாகிய அ.சண்முகதாஸ் ஆற்றுவார். கல்லூரி மாணவர்கள் வழங்கும் நான் யார்? என்ற பொருளில் அமைந்த நாடகமும் இடம்பெறும். பன்மொழிக் கல்வியின் ஊடாக "நிலைபேறான எதிர்காலத்தை நோக்கி" என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டுக்கான சர்வதேச தாய்மொழித்தினம் நாளை மறுதினம் 21 ஆம் திகதி உலகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)




## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக யாழில் 207 முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகள் தொலைபேசியின் ஊடாகவே கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட சிறுவர் விவகார பிரிவு வட்டாரங்கள் கூறியுள்ளன. கடந்த வருடம் ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் வரை யாழ்ப்பாணத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 207 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவ்வாறான 26 முறைப்பாடுகள் 1929 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும், 73 முறைப்பாடுகள் வேறு அலுவலக தொலைபேசி இலக்கத்தினூடாகவும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் இளவயது திருமணம் தொடர்பாக 12 முறைப்பாடுகளும், 3 உடலியல் ரீதியான துஷ்பிரயோக முறைப்பாடுகள் ,4 உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், 7 பாலியல் துஷ்பிரயோகம், 9 சிறுவர் அலட்சியம் தொடர்பான முறைப்பாடு, 4 குழந்தை தொழிலாளர்கள் தொடர்பான முறைப்பாடுகள், 2 வேறு விதமான முறைப்பாடுகள் என மொத்தமாக 73 முறைப்பாடுகள் தொலைபேசிகளினூடாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவது தொடர்பில் அறிந்தால் 1929 எனும் தொலைபேசி ஊடாக அறியத்தரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## காணிகளை விடுவிப்பதில் அரசிற்கு அக்கறையில்லை

## சஜீவன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மக்களுடைய காணிகளை விடுவிப்பதில் அரசுக்கு அக்கறை இல்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் உயர்பாதுகாப்பு வலயத்தில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள 1600 ஏக்கர் நிலங்களை நிரந்தரமாகச் சுவீகரிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயுக்க அண்மையில் வெளிப்படையாகத் தெரிவித்திருந்த கருத்துக்குக் கடுமையான கண்டனத்தை வலி. வடக்கு மீள்குடியேற்றச் சங்கத் தலைவர் ச.சஜீவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் தமிழ்மக்களின் காணிகளைத் தொடர்ச்சியாக அடாத்தாகச் சுவீகரிப்பதும் அந்தக் காணிகளை இராணுவத்தினர் தங்களுடைய நலன்களுக்காகப் பாவிப்பதும் தொடர்கதையாகவுள்ளது. வலிகாமம் வடக்கில் எங்கள் மக்கள் பரம்பரை பரம்பரையாக ஆண்ட உரித்துக் காணிகள் அனைத்தும் மீண்டும் எமக்கு வழங்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும்.

நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற தற்போதைய அரசாங்கம் பெயருக்கு மாத்திரமே அவ்வாறு செயற்படுகிறதோ என எண்ணுமளவுக்கு அதனுடைய செயற்பாடுகள் அமைந்துள்ளன. இலங்கை அரசாங்கத்தால் வலிகாமம் வடக்கில் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள 2000 ஏக்கர் நிலப் பகுதியில் 700 ஏக்கர் வரையான காணிகள் இன்னமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

ஆகவே, இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கும் ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தங்களுக்கு எதிரான தீர்மானங்கள் வராமலிருப்பதற்காகவே மீள்குடியேற்றம் என்ற போர்வையில் சில பகுதிகளை மாத்திரம் விடுவித்திருக்கிறது.

ஆகவே, இவ்வாறான சில காணி விடுவிப்புக்கள் சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு நாடகமே தவிர இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர்களின் முழுக் காணிகளையும் விடுவிக்க வேண்டுமென்பதில் அரசாங்கத்திற்கு உண்மையான அக்கறையில்லை எனவும் அவர் மேலும் சாடியுள்ளார். (இ-4)



கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் மரநடுகை விழிப்புணர்வு நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

## அரச சிறுவர் ஓவிய விழா

(யாழ்ப்பாணம்)

அரச சிறுவர் ஓவிய விழாவினை முன்னிட்டு உள்ளக அலுவல்கள் வட மேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச கட்புலக் கலை ஆலோசனைக்குழுவின் ஏற்பாட்டில் 5 வயது தொடக்கம் 18 வயது வரையானவர்களுக்கு ஐந்து பிரிவுகளாக ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் கலந்து கொள்ள விரும்புவோர் பிரதேச செயலகங்களுடன் 08.03.2017 இற்கு முன்னர் தொடர்பு கொள்ள முடியும். அந்த வகையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்கள் யாழ். பிரதேச கலாசார அதிகார சபையில் விண்ணப்பத்தையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றுடன் அரச ஓவிய சிற்ப விழாவினை முன்னிட்டு ஓவியம், சிற்பம், நிறுவல் சிற்பம், அச்சு விதி போன்ற போட்டிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் பங்குபற்ற விரும்பும் துறைசார்ந்தவர்களையும் தொடர்பு கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-51)

## விண்ணப்பங்கள் கோரல்

அரச அனுசரணையுடன் உயர்தரமான புகைப்படக் கலையினை உருவாக்கும் நோக்கில் அரச புகைப்பட விழாவிற்கான போட்டிப் பிரிவுகளிற்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

A வாழ்க்கை முறைகள் மற்றும் கலாசார அம்சங்கள்
B இயற்கை வனவாழ்வு மற்றும் நிலக்காட்சிகள்
C ஊடகத்துறை, செய்தி மற்றும் விளையாட்டு
D திருமண நிகழ்வுகள்
E திறந்த பிரிவு

என ஐந்து பிரிவுகளாக புகைப்படப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்கள் தத்தமது பிரதேச செயலகங்களுடனோ அல்லது மாவட்ட செயலகங்களுடனோ தொடர்பு கொள்ள முடியும் .புகைப்படங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்திகதி 2017.04.28 ஆகும். மேற்படி தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு பெறுமதியான பரிசில்கள், விருதுகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-51)

# உரிய நேரத்தில் பதிலடி கிடைக்கும்

## அரசுக்கு கோத்தா எச்சரிக்கை

அரசியல் பழிவாங்கல்களுக்கு நாட்டு மக்கள் உரிய நேரத்தில் தக்க பதில் கொடுப்பார்கள் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நேற்று முன்தினம் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் அவர் முன்னிலையாகியிருந்தார். இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## பிரிவினை நாட்டின் எதிர்கால செயற்பாட்டிற்கு தடையாகும்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படும் பிரிவினை நாட்டின் எதிர்கால செயற்பாட்டிற்கு தடையாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

பாரம்பரிய அரசியல் கலாசாரம் மற்றும் எண்ணங்களிலிருந்து விடுபட்டு அனைவரும் நாட்டின் நலன்கருதி திறந்த மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் என நேற்று முன்தினம் பிற்பகல் வெலிகம நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தென் மாகாண அரச அதிகாரிகளின் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரச சொத்துக்கள் மற்றும் வளங்களின் பயன்பாட்டின் போது தமது நிறுவனத்தின் சொத்துக்களை தமது தனிப்பட்ட சொத்தாக கருதி சில நிறுவனத் தலைவர்கள் செயற்படும் அதேவேளை நிறுவனங்களுக்கிடையே காணப்படும் போட்டித்தன்மை காரணமாக நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு எதுவித பாதிப்புக்களும் ஏற்படக்கூடாது எனவும் அபிவிருத்தி செயற்பாடுகளின்போது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முன்னர் நாம் மாற வேண்டும் என்றும், நாட்டிற்கும் மக்களுக்கும் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக்கொடுக்கும் அதேவேளை அரச சேவையிலும் தெளிவான மாற்றமொன்றினை ஏற்படுத்த அரச அதிகாரிகள் தயாராக வேண்டும் என்றும் தெரிவித்தார். (இ-3)




இணுவில் திருப்பதி
அருள்மிகு
திருவேங்கடேஸ்வரர் ஆலய
இலட்சார்ச்சனை விழா -2017
15.02.2017 - 24.02.2017 வரை

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.
4 ஆம் நாள் இன்று (18.02.2017) இலஷ்மி நரசிம்ம ஹோமம்-
தீயசக்திகளில் இருந்து விலகி லஷ்மி கடாட்சம் பெற.
சைவப்புலவர் - சைவநெறி சன்மார்க்கர் கா. கமலநாதன்
விடயம்- அடியவருக்கு அடியவரானார்
சொற்பொழிவு ஒருங்கமைப்பு
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபம், நல்லூர்.
திரு.சண்முகராஜா கணேசலிங்கம், தர்மகர்த்தா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
021 224 2300
(7960)



40 வருடங்களுக்கு மேலாக மக்களின்
நன்மதிப்பை வென்ற
"றோயல் குளுக்கோஸ்"
PACKED BY: ROYAL INDUSTRIES,
Colombo-13 TP:- 077 727 7670
தற்போது புதிய வடிவில்!!



இழந்த சக்தியை உடனடியாக
மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
"றோயல் குளுக்கோஸ்"
தொடர்புகளுக்கு
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:- 021 222 2567



பாராட்டி
வாழ்த்துகின்றோம்



ஜெயந்தகுமார்
கயஸ்ரன்
19.02.2017 இன்று
ஞாயிற்றுக்கிழமை பண்டாரநாயக்க
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
நடைபெறும் இலங்கை
தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின்
11 ஆவது பட்டமளிப்பு விழாவில்
B.Sc பட்டத்தை பெறும் எமது
செல்வப்புதல்வன் ஜெயந்தகுமார்
கயஸ்ரன் அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு இன்னும் பல
பட்டங்கள் பெற்று வாழ்வில்
உயர்வடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
வாழ்த்தும்: அப்பா, அம்மா,
அண்ணாமார், தம்பி
(7937)



## வேலையாட்கள் தேவை

எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் விற்பனை
மற்றும் REPAIR (INSTALATION) செய்யும்
எமது நிறுவனத்துக்கு கொழும்புக்கு வேலைக்கு
கீழ் காணும் வெற்றிடம் உள்ளது

- டிஷ் ஆண்டெனா பிற்றிங் வேலை தெரிந்த டெக்னீசியன் (சம்பளம் 30,000/= கமிஷன், உணவு, தங்குமிடம் இலவசம்)
- எலக்ட்ரானிக்ஸ் டெக்னீசியன் (சம்பளம் 40,000/= உணவு, தங்குமிடம் இலவசம்)
- உதவி விற்பனையாளர் (ஆண், பெண்) Counter, Sales only சம்பளம் 20,000/=
- ஆண்களாயின் உணவு, தங்குமிடம் இலவசம்

தொடர்பு கொள்ளவும்:- குமார் - 077 771 0785



கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:48
உயரம்: 5'9"
தகைமைதொழில்:MSc,விரிவுரையாளர்
தொ.இ: B/6957

பிறப்பு: 1984 NON RC
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6959

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 48 செவ் 4 இல்
தகைமை/தொழில்: மின்னியலாளர்
தொ.இ: B/6960

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 92 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்
தொ.இ: B/6961

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 39
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: AL
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6996

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 36 செவ் 7 இல்
உயரம்: 5'3'
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6997

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/தனியார்தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6992

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 40 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/150

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



யாழ்ப்பாணத்தில் புகைப்படக்கல்வி
தரமான புகைப்படங்களை எடுப்பதற்கு உகந்த கற்கை நெறியாகும்.



Sundays
9.00 am - 11.00 am
Commencement
26th February
Duration
1.5 months
Investment Rs:10,000/=

METROPOLITAN INSTITUTE
OF BUSINESS MANAGEMENT
Venue : Jaffna College Undergraduate Department,
4R4, Hospital Road, Jaffna.
Hotline: +94 77 661 5152 | E: info@mibm.lk
www.mibm.lk
MIBM
(சி-7592)

# பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாதென்றால் உடனடியாக இராஜினாமா செய்யவும்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

• தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாத அனைத்து அதிகாரிகளும் தமது பதிவிகளிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரட்சி நிலைமை காரணமாக விவசாயத்துறை எதிர்நோக்கும் தாக்கம் தொடர்பில் நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரி வித்துள்ளார்.

மண் அகழ்வது தொடர்பில் பல முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாகவும், இதற்கு அதிகாரி கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நான்கு மாதங்களுக்கு, மாதாந்தம் பத்தாயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்குமாறும் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (இ)

# அரச நிறுவனத்தில் கரும்புலிகள்

# எனது செயலாளர் பதவி இன்னும் சில தினங்களுக்கே நீடிக்கும்

## நிமால் போபகே கணிப்பு



(கொழும்பு)

"எனது செயலாளர் பதவி இன்னும் சில தினங்களுக்கே நீடிக்கும்" என ஊடக அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி நிமால் போபகே தெரிவித்துள்ளார்.

அரச தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் புதிய பணிப்பாளர் நாயகம் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே நிமால் போபகே இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

துசிர மலவ்தந்திரி பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சி அளிக்கின்றது. எனினும், அவருடன் இணைந்து செயற்படுவதற்கான காலஅவகாசம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இதனால் இது மகிழ்ச்சியானதும் கவலையானதுமான தருணமாகும். வாழ்க்கை என்பது வருகை மற்றும் செல்கை என்ற ஓர் வாசகம் உண்டு. அதன் அடிப்படையில் இந்த யதார்த்தங்களை நாம் எதிர்நோக்க பழகிக்கொள்ள வேண்டும்.

குறித்த அரச தொலைக்காட்சி நிறுவனத்தில் சில கரும்புலிகள் அதிகமாக இருக்கின்றார்கள் என கூட்டுத்தாபன தலைவர் ரவி ஜயவர்தன கூறியிருந்தார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. ரவி ஜயவர்தன கூறியவர்களில் நானும் உள்ளடங்குகின்றேன். இந்தக் கரும்புலி சில தினங்களில் விடை பெற்றுச் செல்லும் என நிமால் போபகே தெரிவித்துள்ளார். (இ-7)

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடகவியலாளர்களுக்கானதல்ல

## ஊடக அமைச்சர் கயந்த கூறுகிறார்

(கொழும்பு)


தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடகவியலாளர்களுக்கானதல்ல எனவும், எனினும் இதன் மூலம் ஊடகவியலாளர்களும் நன்மையடைய முடியுமெனவும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமையை நாட்டு மக்களுக்கு வழங்கும் உத்தியோகபூர்வ வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகை யில் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது புதிதாக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம். இதற்கு பழகுவதற்கு அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் காலமெடுக்கும். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் இதனை அரசாங்கம் நடைமுறைப் படுத்தாது கிடப்பில் போட்டுவிடும் என்றே கருதினார்கள். எனினும் அது தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் தகவல் வழங்கும் அதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தகவல் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டோம். சாதாரண அரசாங்கங்கள் இதனை நடைமுறைப்படுத்த தயங்கும். ஆகவே அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உங்களுக்கு பாரிய பொறுப்பு காணப்படுகின்றது.



தகவல் வழங்கும் அதிகாரிகளான உங்களை நான் அரசாங்கத்தின் தூதுவர்களாகவே காண்கின்றேன். அரச நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்துவது உங்கள் கடமை. ஆகவே இந்த சட்டத்தின் வெற்றி தகவல் வழங்கும் உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ3)

# புகலிடம் கோரிப் புறப்பட்ட 8 பேர் நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

நியூஸிலாந்தில் புகலிடம் கோரி படகுகளில் புறப்படவிருந்த 8 பேரை நீர்கொழும்பு, கதிரானப் பகுதியில் நேற்று முன்தினமிரவு கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். முல்லைத்தீவு, கல்முனை, மாரவில, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 23 வயது முதல் 42 வயது மதிக்கத் தக்கவர்களே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர். (இ-7)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 70 | 120 | 90 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 90 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 170 | 200 | 220 | 250 | 180 |
| தக்காளி | 40 | 60 | 40 | 50 | 60 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 70 | 80 | 60 |
| கோவா | 20 | 40 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 40 | 100 | 40 | 60 | 60 | 120 | 40 |
| பூசணி | 60 | 50 | 30 | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 80 | 50 | 40 | 80 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 110 | 100 | 100 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 160 | 160 | 240 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 100 | 80 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 60 | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 120 | 160 | 110 | 120 | 120 | 160 | 140 |
| லீக்ஸ் | 40 | 60 | 60 | 80 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 50 | 60 | 40 | 60 | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 150 | 160 | 130 | 140 | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 650 | 600 | 400 | 600 | 600 | 800 | 600 |
| போஞ்சி | 120 | 100 | 100 | 120 | 100 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 60 | 100 | 80 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 40 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 100 | 120 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 300 | 150 | 160 | 180 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 50 | 100 | 40 | 50 | 60 | 100 | 40 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 50 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 60 | 60 | 80 | 60 |


# வெசாக் நிகழ்வில் பங்கேற்க கொழும்புக்கு வருகிறார் மோடி

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.நா. வெசாக் தின கொண்டாட்டங்களில் பங்கேற்கவுள்ளதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி உறுதிப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை மேற் கோள்காட்டி சீன ஊடகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ளது. புத்த பெருமானின் பிறப்பு, ஞானோதயம் மற்றும் இறப்பு என்பவற்றை



நினைவுகூரும்நிகழ்வாக வெசாக்பண்டிகை கொண்டாடப்படுகிறது. (இ-7)

## மாதிரி முன்பள்ளியின் புதிய முகாமைத்துவக்குழுத் தெரிவு

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் புதிய முகாமைத்துவக் குழுத் தெரிவு அண்மையில் கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியில் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தலைவர் மு.ஜெகதேவன், செயலாளர் திருமதி பி.மதுராந்தகி, பொருளாளர் திருமதி ட.வேந்தினி, உப தலைவர் பா.அரியதாஸ், உப செயலாளர் திருமதி ஸ்ரீ. விஜிதா, நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி. ச. சுகந்தினி, திருமதி. அ. ரேணுகா, நலன் விரும்பி ந.வதனரூபன்,ஆலோசகர் தி.சரஸ்வதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

# பொலித்தீன் அகற்றும் பணியில் பாடசாலை மாணவர்கள்






உக்கலடையாத பொலித்தீன் பாவனைக்கு யாழில் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். நகரில் குவிந்துள்ள பொலித்தீன்களை அகற்றும் பணி நேற்று யாழில் நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சாரணர் படையினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது வீதிகளில் பரவிக் கிடந்த பொலித்தீன்களை அகற்றி நகரத்தை தூய்மை செய்திருந்தனர். (படங்கள்:- உ.சாளின்)








விளையாட்டின் மூலம் நட்புறவை ஏற்படுத்துவோம் எனும் தொனிப் பொருளில் முப்படையினரின் ஊர்வலம் நேற்றைய தினம் யாழ்.நகரில் இடம்பெற்றது.சர்வதேச ஆயுதம் தாங்கிய விளையாட்டு சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் முப்படையினரும் கலந்து கொண்டு சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் ஊர்வலத்தில் இணைந்து கொண்டிருந்தனர்.

## புத்தகக் கண்காட்சி

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கலாசார பெருமன்றத்தினால் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சி எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான 3 தினங்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இக்கண்காட்சியில் இந்திய, இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் வெளியிட்ட புத்தகங்களும் கவிதைத்தொகுப்பு நூல்களும் புத்தகக் கண்காட்சியில் விற்பனை செய்யப்படும். இக் கண்காட்சியில் வடபகுதியில் உள்ள வெளியீட்டாளர்களும், எழுத்தாளர்களும் தங்கள் புத்தகங்களை காட்சிப்படுத்தி சந்தைப்படுத்தலாம்.

முதல் நாள் எழுத்தாளர்களுடன் கலந்துரையாடலும் இடம்பெறும். ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 23.02.2017 ஆம் திகதிக்கு முன் 021 226 3263 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வரவை உறுதிப் படுத்தலாம் என பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-3-60)

## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

வடக்கு மாகாண அரசாங்கம் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி விநாயகர் மண்டபத்தில் நடைபெறும்.

இதில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வடக்கு சங்கத் தலைவி சசிகலா பவளலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

## போதனாசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பின்வரும் கற்கை நெறிகளை கற்பிக்கும் போதனாசிரியர்கள் வெற்றிடங்களுக்கான ஆட் சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. காய்ச்சி ஒட்டுபவர் (வெல்டர்), வெதுப்பக உற்பத்தியாளர், சமையலாளர், முன் பள்ளி ஆசிரியர் பயிற்சி, கட்ட நிர்மாண உதவியாளர், மின் மோட்டார் மீள் முறுக்குநர், நீர்க் குழாய் பொருத்துநர்.

கல்வித்தகைமை கா.பொ.த. சாதாரண தரத்தில் ஒரு அமர்வில் தமிழ் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், அத்துடன் தொழில் தகைமை இலங்கை மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப/தொழிற் பயிற்சி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில் தகைமை மட்டம்-5 (NVQ-5)பெற்றிருத்தல் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் குறித்த தொழிற்றுறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அனுபவம் குறித்த துறையில் ஆகக் குறைந்தது 01 வருடம் உள்நாடு அல்லது வெளிநாடு கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

அத்துடன் வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவர்கள் தங்கள் சுய விபரக் கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து உதவிப்பணிப்பாளர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 24.02.2017 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.(இ

## சாரதிக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரமின்றி மரப் பலகைகளை ஏற்றிச் சென்ற வடி ரக வாகன சாரதி ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

உடுப்பிட்டி பகுதியில் இருந்து பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது ஆலயத்தின் தேவைக்கு பலகைகள் எடுத்துச் செல்லப்பட்டதாக அவர் மன்றில் தெரிவித்ததையடுத்து ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் பலகைகளை ஆலயத்திற்கு வழங்குமாறு பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

### வாரம் ஒரு தகவல்

## பாம்பினைப் பற்றிய சிறுவன்

அந்தச் சிறுவன் தனது இளம் பருவத்திலேயே சுறுசுறுப்பும் அச்சமற்ற நெஞ்சமும் கொண்டிருந்தான். தனது தோழர்களோடு உல்லாசமாகப் பொழுது போக்குவதில் இவனுக்கு மிகவும் விருப்பம்.

ஒருமுறை பாம்பாட்டி ஒருவன் பாம்பினைக் கொண்டு வந்து விளையாட்டுக்காட்டிக் கொண்டிருந்தான். சிறுவனும் அவனது தோழர்களும் இந்த விளையாட்டைப் பார்த்துக் களித்துக் கொண்டிருந்தார்கள்.

என்ன அழகான பாம்பு இது! எவ்வளவு நீளம், எப்படி வளைந்து நெளிந்து ஆடுகிறது! இதன் மீது படிந்துள்ள நிறங்கள்தான் எவ்வளவு கவர்ச்சி! இவ்வாறெல்லாம் பாம்பினைப் பற்றிச் சிறுவன் எண்ணியெண்ணி வியப்புற்றான்.

அப்பாம்பைத் தன் கையில் பற்றிப் பிடித்து விளையாட வேண்டுமென்ற ஆசை அச்சிறுவனுக்கு. இந்த எண்ணம் அவனிடம் நாளுக்கு நாள் முறுகி வளர்ந்தது.

சில நாட்களின் பின்னர் அப்பாம்பாட்டி மீண்டும் அப்பாம்பை விளையாட்டுக்காட்டிக் கொண்டு வந்திருந்தான். இதைப்பார்த்த சிறுவன் அவன் அருகே சென்று வெடுக்கென அப்பாம்பைப் பற்றிப்பிடித்துத் தன் கையில் வைத்துக் கொண்டான்.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்கள் இதைக்கண்டு திடுக்கிட்டனர். இச்சிறுவனுக்கு அச்சம் என்பதே இல்லையா? அல்லது தன் உயிரைப்பற்றிய சிந்தனை இல்லையா? என அவர்கள் நினைத்தனர்.

நல்ல காலமாக அப்பாம்பு சிறுவனை எதுவும் செய்யவில்லை. சற்றுநேரம் அவன் பாம்பைக்கையில் வைத்துக் கொண்டு பின்னர் விட்டு விட்டான்.

இச்சிறுவன் யார் தெரியுமா? தமிழ்ப்பெரியார் திரு.வி.க.தான். அவரது சின்னஞ்சிறு பருவத்திலுள்ள நிகழ்ச்சியே இது.

கவிஞர் தே.ப.பெருமாள்



யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்துள்ள குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு துவிச்சக்கரவண்டி பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குட்பட்ட அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. குறித்த பிரிவு 24 மணித்தியாலயங்களும் தமது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இடங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் காலை யாழ்.தலைமை பொலிஸ் நிலையம் முன்பாக நடைபெற்றது. யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்தின பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இந்தப் பிரிவை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இதன்போது யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெலஸ்ன்லாஸ்ம் கலந்து கொண்டிருந்தார்.

(படங்கள்- உ.சாளின் )

# அரசு மீது தமிழ் சிவில் சமூகம் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கில் இராணுவ ஆக்கிரமிக்குட்பட்ட நிலங்களை விடுவிப்பதில் இலங்கை அரசாங்கம் காண்பிக்கும் மெத்தனப் போக்கிற்கும், நில விடுவிப்பு தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கும் உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களுக்கும் கேப்பாப்பிலவின் நில அபகரிப்பானது சிறந்த எடுத்துக்காட்டாகும் என தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன. நேற்று முன்தினம் விடுத்த அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கேப்பாப்பிலவில் நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அப்போராட்டத்திற்கு இதுவரையில் இலங்கை அரசாங்கம் எந்தவொரு பதிலையும் வழங்காமல் தட்டிக்கழிப்பதை கண்டித்தும், அம்மக்களின் நிலங்களை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து மீள மக்களுக்கே அந்நிலங்களை கையளிப்பதில் அரசாங்கம் காண்பித்து வரும் அசமந்த போக்கினை கண்டித்தும் இக்கூட்டறிக்கை வெளியிடப்படுகிறது.

இலங்கை வான்படை முகாம் ஆக்கிரமித்திருக்கும் தங்கள் நிலங்களை விடுவிக்கக்கோரி கேப்பாப்பிலவின் பிலவுக்குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் அந்நிலங்களுக்கு எதிர்ப்புறமாக கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக போராடி வருகின்றனர்.

ஜனவரி 31 ஆம் திகதி தங்கள் நிலங்கள் விடுவிக்கப்படும் என்று அதிகாரிகள் வாக்குறுதி வழங்கியதைத் தொடர்ந்து மக்கள் அன்று அங்கே சென்றிருந்தனர். எனினும் அத்திகதியில் அவர்களது நிலங்கள் விடுவிக்கப்படாது என்று அறிவிக்கப்பட தங்கள் நிலங்கள் மீளக் கையளிக்கப்படும் வரை தாங்கள் அவ்விடத்தை விட்டு நகரப் போவதில்லை என அறிவித்து மக்கள் முகாமுக்கு எதிர்ப்புறமாக வீதிக்கு அருகாமையில் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

வடக்கு- கிழக்கில் இராணுவ ஆக்கிரமிக்குட்பட்ட நிலங்களை விடுவிப்பதில் இலங்கை அரசாங்கம் காண்பிக்கும் மெத்தனப்போக்கிற்கும், நில விடுவிப்பு தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கும் உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களுக்கும் கேப்பாப்பிலவின் நில அபகரிப்பானது சிறந்த எடுத்துக்காட்டாகும். வடக்கு - கிழக்கில் தனியார் மற்றும் அரச காணிகள் உட்பட பெருமளவு நிலம் இராணுவக் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது. செழிப்பான பயிர் நிலங்கள் உட்பட தனியார் நிலங்களை ஆக்கிரமித்து பல பாரிய படை முகாம்கள் கேப்பாப்பிலவில் காணப்படுகின்றன. இராணுவமானது பிலவுக்குடியிருப்பைச் சேர்ந்த 84 குடும்பங்களின் வீடுகளின் அத்திபாரங்களை இடித்தும் அவர்களுக்கு சொந்த மான மரங்களை தரித்தும் எரித்தும் வருகின்றது என்ற தகவலறிந்து கவலை கொள்கின்றோம். பொறுப்பற்ற, கட்டுப்பாடற்ற இவ்வழிவு, பிலவுக்குடியிருப்பு மக்கள் மீண்டும் தமது சொந்த நிலங்களுக்கு திரும்பிய பின்னர் தம் வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கு தேவையான அடிப்படை தேவைகளை இல்லாதொழிக்கும் முயற்சியாகும். இராணுவத்தினர் கடந்த காலத்திலும், கடந்த ஆட்சியிலும் இவ்வாறான சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று வருடங்கள் மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்த பின்னர் 2012 இல் கேப்பாப்பிலவு மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மாதிரி மீள்குடியேற்ற கிராமத்தின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளது. மீன்பிடி மற்றும் விவசாயம் போன்ற வாழ்வாதாரங்களுக்கான வழிகள் பெரிதும் தடைப்பட்டே காணப்படுகின்றன.

இராணுவத்தினரால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் இரண்டு வருடங்களில் சிதைவுகள் தென்படுகின்றன. மாதிரி மீள்குடியேற்ற கிராமத்தில் குடியேற்றப்பட்ட, கேப்பாப்பிலவு பிரதேசத்தின் ஏனைய கிராமங்களை சேர்ந்த மக்களும் தமது சொந்த நிலங்களில் மீண்டும் குடியேற்றப்பட்ட வேண்டும் என கோரி நிற்கின்றனர். இவர்களது சொந்த நிலங்களும் இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் சீர்திருத்த நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில், தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளான நில மீட்பு மற்றும் இராணுவ நீக்கம் ஆகியவற்றில் போதியளவு முன்னேற்றம் காணப்படவில்லை என்பதை ஆழ்ந்த கரிசனையுடன் நாம் நோக்க வேண்டியுள்ளது. வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தனியார் மற்றும் அரச நிலங்களை ஆக்கிரமித்து காணப்படும் பாரிய இராணுவ முகாம்களை அகற்ற அரசாங்கம் முன்னின்று நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விடயங்கள் தொடர்பாக செயற்படுவதில் அரசாங்கம் காட்டிவரும் விருப்பின்மையும், நேர்மையின்மையும் நீதி, நல்லிணக்கம் மற்றும் பேண்தகு சமாதானம் ஆகியன உருவாகுவதை வெகுவாக பாதிக்கும்.

எனவே இலங்கை அரசாங்கத்தை நாம் கோரி நிற்பதாவது,

1. பிலவுக்குடியிருப்பு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவர்களின் நிலங்களை அவர்களுக்கு மீளக் கையளித்து, அவர்களுக்கு மீள்குடியேற்ற உதவி மற்றும் வாழ்வாதார உதவி வழங்க வேண்டும்.

2. வடக்கு கிழக்கில் இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் நிலங்களில் பண்புகளையும் வளங்களையும் அழிக்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாதென இராணுவத்திற்கு உத்தரவிட வேண்டும்.

3. வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பிற்குட்பட்ட சகல தனியார் மற்றும் அரச காணிகளை மீளக் கையளிக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்திட வேண்டும்.

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம், மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம், மனித உரிமைகளின் விருத்திக்கும் பாதுகாப்பிற்குமான நிலையம், யாழ். கத்தோலிக்க மறைமாவட்டத்தின் நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழு, யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மன்னார் பிரஜைகள் குழு, இலங்கையில் சமத்துவத்திற்கும் நிவாரணத்திற்குமான மக்கள், தமிழ் சிவில் சமூக அமையம், தமிழ் சட்டத்தரணிகள் அமையம் ஆகிய இணைந்தே மேற்படி அறிக்கையை விடுத்துள்ளன. (இ-4)



அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக விளையாட்டு மற்றும் உளநல மேம்பாட்டு தேசிய வார நிகழ்வு அண்மையில் யாழிலுள்ள வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் வடமாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் அ.நீக்கொலஸ்பிள்ளை, மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் கு. பிரபாகரமூர்த்தி மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அலுவலர்களின் உடல்நல மேம்பாடு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் உடற்பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதுடன் ஆரோக்கியமான அரச அலுவலர்கள் ஊடாக வினைத்திறனும் விளைதிறனும் பயனுறுதியும் மிக்க அரசாங்க சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் பி.முகுந்தனால் செய்முறை விளக்கங்களும் பயிற்சியும் வழங்கப்பட்டன. (இ-3)

# ஐந்தாவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது உணவுத் தவிர்ப்பு

## பங்கேற்றவர்கள் சுழற்சி முறையில் நேற்று மாற்றம்





(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு மையப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேற்றக் கோரியும் கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக நேற்று மக்களின் போராட்டம் 16 ஆவது நாளாகவும் சூழற்சி முறையிலானஉணவுத்தவிர்ப்புபோராட்டம் ஐந்தாவது நாளாகவும் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சூழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை ஏற்கனவே உணவு இன்றி நீராகாரம் அருந்தாது போராட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு பதிலாக வேறு மூவர் உணவுத் தவிர்ப்பில் குதித்துள்ளனர். (2-281)




# மகா சிவராத்திரி விழா

(மன்னார்)

திருக்கேதீச்சர ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறுமென ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உபதலைவர் அறிவித்துள்ளார். (2)



கொழும்பில் குண்டு வீசச் சென்ற விடுதலைப் புலிகளின் விமானங்களில் ஒன்று கொழும்பில் வீழ்ந்துள்ள நிலையில் அதை மீட்டு எடுத்து காட்சிப் பொருளாக வைத்துள்ள படையினர்.

(படம்:- மல்லாவி செய்தியாளர்)

# கூராய், தென்னியங்குளம் பகுதிகளில் 6 மில்லியனில் அபிவிருத்திப் பணிகள்

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தின் நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி எதிர்காலத்தை மேம்படுத்தும் பிரதான நோக்கில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் திட்டத்திற்கு அமைவாக 2017 ஆம் ஆண்டின் மீன்பிடி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதியின் கீழ் மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கூராய் கிராமத்தின் நன்னீர் மீன்பிடி சங்கத்திற்கும், முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தென்னியங்குளம் நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்குமாக மீன்சந்தைகள் அமைப்பதற்கு இரண்டு கிராமங்களுக்கும் தலா 3 மில்லியன் வீதம் 6 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மன்னார் கூராய் கிராமத்திற்கு கடந்த 16ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் நேரடியாகச் சென்ற வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் குறித்த கிராமத்தின் மக்களை சனசமூக நிலையத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.



அதனைத் தொடர்ந்து குறித்த மீன்சந்தை அமைக்க மக்களது கருத்துடன் பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும் வகையில் கூராய் குளத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் பார்வையிட்டனர்.

இச் சந்திப்பில் மன்னார் மாவட்ட நன்னீர் மீன்பிடி மேற்பார்வை உத்தியோகத்தர் எஸ்.மைக்கல் கொலின், திட்டத்தை நடைமுறைப் படுத்தும் மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர்எஸ்ரகுநாதன், திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்த குழுவினரே அங்கு சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அங்கு மக்கள் அமைச்சருடன் உரையாடுகையில்,

தமது வீதி தொடர்பாகவுள்ள பாரிய சிரமத்தை அமைச்சருக்கு தெளிவுபடுத்தினர்.

அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு பதிலளித்த அமைச்சர்,

வீதிக்கான வேலைகள் ஐ ரோட் திட்டத்தினூடாக எதிர்வரும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும்.

தொடர்ந்து மீன்பிடியாளர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டமாக இரண்டு கிராமங்களுக்கும் தலா 3 மில்லியன் பெறுமதியான மீன்சந்தைகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (2-15)

# இராணுவத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீளவும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை

(பரந்தன்)

வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு அரசு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் அரசு தோல்வி கண்டுள்ளது. அதற்காக உருப்படியான வேலைத்திட்டத்தை இதுநாள் வரைக்கும் அரசு மேற்கொண்டதாக தெரியவில்லை என ஜே.வி.பியின் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட அவர் மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் விடயத்திலும் அரசின் நடவடிக்கைகள் தோல்வி அடைந்துள்ளது. யுத்தத்தை காரணம் காட்டி இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் மீளவும் தமிழ் மக்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்த விடயத்தில் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்ததாககாணமுடியவில்லை. இதனால் இந்தப் பிரச்சினை மேலும் மேலும் உக்கிரமடைந்த பிரச்சினையாக காணப்படுகிறது

கடற்றொழில் விவசாயிகளின் பிரச்சினைகள் பெரிய பிரச்சினையாக காணப்படுகிறது. குறிப்பாக எமது கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக எமது கடல் வளங்களை சூறையாடுவதோடு, எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு இதுவரை நாளைக்கும் அரசு அங்கேயும் இங்கேயும் காய்களை நகர்த்தியிருக்கிறதே தவிர அந்தப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவில்லை. கடற்றொழிலாளர்களின் பிரச்சினையில் முன்னைய அரசு போன்றே தற்போதைய அரசும் நடந்து கொள்வதனை காணக் கூடியதாக உள்ளது.

அது மாத்திரமல்ல இந்தியாவுக்கு அடிபணிந்த இந்தியாவின் வார்த்தை ஜாலங்களுக்கு செவிமடுக்கின்ற அரசாகவும் இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு அடிபணிந்த அரசாகவும் இந்த அரசாங்கம் காணப்படுகிறது.

வட பகுதியில் மக்கள் இவ்வாறு பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்ற நிலையில் தென்பகுதியில் மக்களுக்குச் சொந்தமான வளங்களை வெளிநாட்டுக்கு தாரை வார்க்கின்ற நடவடிக்கையில் அரசு ஈடுப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் இருக்கின்ற 15 ஆயிரம் ஏக்கர் காணி வெளிநாட்டுக்கு தாரை வார்க்கின்றது. அது மாத்திரமன்றி அம்பாந்தோட்டை துறைமுகம் வெளிநாட்டுக்கு தாரைவார்க்கின்றது.

இவ்வாறு மக்களுக்குச் சொந்தமான காணிகளை, வளங்களை நீண்டகால குத்தகைக்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அரசு தாரை வார்க்கின்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது.

இவ்வாறு நாடு முழுவதும் மக்கள் பொதுப் பிரச்சினையை எதிர்கொள்கின்ற போது மக்கள் தனித்தனியாக போராட்டங்களை நடத்துவதனை விடுத்து வடக்கு,கிழக்கு, தெற்கு, மேற்கு என அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து ஒரு பொதுவான போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என அவர் கூறினார். (2-312)








கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் கல்லூரி அதிபர் மு.இரவீந்திரன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி த.ஜெகதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

# ‘தேவையில்லாமல் உட்செல்லத் தடை’ விமானப்படை காட்சிப்படுத்திய எச்சரிக்கைப் பலகை மாற்றம்



நேற்று முன்தினம்

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு - பிலவுக்குடியிருப்பு மக்கள் கடந்த 19 நாட்களாக விமானப் படை முகாம் முன்பாக கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் நாளுக்கு நாள் ஆதரவு தெரிவித்து வலுப்பெறும் நிலையில் தமக்கான வாழ்வுரிமை காணிகள் கிடைக்காது விடின் தடைகளையும் தாண்டி தங்களின் காணிகளினுள் செல்ல வேண்டி வரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் தமது படை முகாம் வேலி ஓரமாக எச்சரிக்கை அறிவித்தல் பலகை ஒன்றை காட்சிப்படுத்தி இருக்கின்றார்கள்.

அதில் இது விமானப் படையினரின் காணியாகும். தேவையில்லாமல் உட்செல்லத் தடை என்றும் தேவையில்லாமல் சென்றால் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகுவீர்கள் என்றும் எழுதப்பட்ட அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தமது நிலத்தில் இராணுவத்தினர் சுதந்திரமாக வாழ்ந்து வரும் நிலையில் தாம் வெயில், மழை, பனியில் 19 ஆவது நாளாக தொடர்ந்து போராடி வரும் நிலையில் இவ்வாறான எச்சரிக்கை பலகை மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளது.

எனினும் நேற்றைய தினம் அதேயிடத்தில் இருந்த எச்சரிக்கை பலகை அகற்றப்பட்டு “இது விமானப் படைக்கு சொந்தமான காணி. தேவையில்லாமல் உட்செல்லத் தடை” என்ற வாசகம் தாங்கிய புதிய அறிவித்தல் பலகை ஒன்று இராணுவத்தினரால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமது சாத்வீக போராட்டம் காணிகளினுள் கால்கள் பதியும் வரை நிறுத்தப்படாது என்ற உறுதியான மன வைராக்கியத்துடன் மக்கள் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

முடிவு காணாது போராட்டக் களத்தில் இருந்து நகர மாட்டோம் என்ற திட்டத்துடன் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.



நேற்று

இந்த அறிவித்தல் பலகை தம்மை அச்சுறுத்தவே எனவும் தெரிவிக்கின்றனர். (2-281)




## கிளிநொச்சியில் கர்ப்பவதிகள் இருவருக்கு பன்றிக்காய்ச்சல்

### பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு கிளி.மாவட்ட சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு கர்ப்பவதிகள் பன்றிக்காய்ச்சல் எனப்படும் H1N1 இன்புளுவென்சா நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது சுகாதார அமைச்சின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தினால் நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் துறையினர் அவசர அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து இதுவரை மூன்று குழந்தைகள் உட்பட அறுவர் பன்றிக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே கிளிநொச்சிப் பிரதேசத்தில் பன்றிக்காய்ச்சல் மிக விரைவாகப் பரவி வருவதை உணர்ந்துகொண்டு மக்கள் கூடும் இடங்கள், கோவில் திருவிழாக்கள், சந்தைகள், பேருந்துப் பயணங்கள், புகையிரதப்பயணங்கள், இந்தநோயினால் பாதிப்புற்றோரைப் பராமரித்தல் என்பவற்றை கர்ப்பவதிகள் தவிர்ப்பதால் இந்த நோய்த்தொற்றுவதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

சாதாரண வைரசுக் காய்ச்சலிலிருந்து இந்த H1N1 வைரசுக்காய்ச்சலினை வேறு பிரித்து அறிவது கடினமாகும். தகுந்த ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ சேவையும் விசேட வைத்திய நிபுணர்களது நேரடிக் கண்காணிப்புமே H1N1 வைரசுக்காய்ச்சலினை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கு அவசியமாகும்.

எனவே எந்தவொரு கர்ப்பவதிக்கோ அல்லது பிரசவித்த தாயாருக்கோ காய்ச்சல் ஏற்படின், உடனடியாக காய்ச்சல் ஏற்பட்ட முதலாவது நாளிலேயே அவர் அருகில் உள்ள அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தவொரு கார்ப்பவதியோ அல்லது பிரசவத்தின் பின்னரான தாயாரோ காய்ச்சல் ஏற்பட்டவுடன் அருகிலுள்ள அரச வைத்தியசாலையை நாடவும். அங்கிருந்து மாவட்ட பொது வைத்தியசாலைக்கு உங்களை பாதுகாப்பாகவும் உடனடியாகவும் அழைத்துவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நோயின் அறிகுறிகள்

சளிக்காய்ச்சல், தடிமன், தொண்டைப் புண், மூக்குச் சளி, தலையிடி, உடல்நோ

நோயின் அபாய அறிகுறிகள்

அதிகூடிய காய்ச்சல், மூச்சுவிட முடியாமை, நெஞ்சுநோ, மறதிக்குணம், நெஞ்சுப்படபடப்பு, வலிப்பு, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படும். எனவே தற்போதைய சூழலில் அலட்சியமாக இருந்து விடாது உடனடியாக உரிய சிகிச்சையை பெற்று உயிராபத்துக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட சுகாதார துறையினர் அவசர அறிவித்தலை விடுத்துள்ளனர். (2-312)

## கேப்பாப்பிலவு மக்களின் பிரச்சினை நியாயமானது தென்பகுதி மக்களுக்கு தெளிவுபடுத்துவேன்

### பத்தேகம சமித்த தேரர் உறுதி

கேப்பாப்பிலவு மக்கள் போராட்டம் நியாயமானது எனத் தெரிவித்துள்ள தென் மாகாண சபை உறுப்பினர் பத்தேகம சமித்த தேரர் மக்களின் பிரச்சினையை தென் பகுதி மக்களுக்கு தெளிவுபடுத்துவதாகவும் உறுதியளித்துள்ளார்.

தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த இரு வாரங்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாப்பிலவு மக்களை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய பத்தேக சமித்த தேரர் உள்ளிட்ட குழுவினர் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே பத்தேகம சமித்த தேரர் இந்த விடயத்தை தெரிவித்ததோடு, கேப்பாப்பிலவு மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண தம்மாலான பங்களிப்பையும் வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த நாட்டில் கடந்த காலங்களில் சிங்கள மக்கள் தனியாகவும், தமிழர்கள் தனியாகவும் போராட்டங்களை முன்னெடுத்தனர். அவரவர் தனித்தனியாக வாழ்ந்தனர்.

எனினும் எங்களைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் சிங்கள மக்களின் பிரச்சினைகளையும், சிங்கள மக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒன்றிணைந்து பேசி பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.

தனித்தனியாக இனவாத அடிப்படையில் செயற்படுவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. கடந்த காலங்களில் இந்த தவறுகளே நடந்தேறின.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை இனவாத அடிப்படையில் நோக்கக்கூடாது.

30 வருட யுத்தத்தின்போது அனைவரும் பாதிக்கப்பட்டோம். அனைவரும் தோல்வியடைந்தோம். வெற்றிபெற்றவரென்று யாருமில்லை. இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை வழங்க முடியாது. வடக்கில் ஒரு கருத்தையும் தெற்கில் ஒரு கருத்தையும் வெளியிட என்னால் முடியாது.

இந்த மக்கள் பாரிய பிரச்சினைக்கு முகம்கொடுத்திருப்பதை நான் அறிவேன். எனினும் தகவல் பரிமாற்றத்தில் தமிழ், சிங்கள மக்களிடையே பாரிய இடைவெளி காணப்படுகின்றது.

இனவாதத்தை இரண்டு பக்கங்களிலும் நிராகரித்து மக்களோடு இணைந்து செயற்பட வேண்டுமென்பதே எனது நிலைப்பாடு. இந்தப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி, பிரதமருக்கு தெளிவுபடுத்த நான் முயற்சிக்கின்றேன்.

எதிர்காலத்தில் இலங்கை பிரஜைகளாக ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். கடந்த காலத்தில் நடைபெற்ற தவறு எதிர்காலத்தில் நடைபெறாத வகையில் செயற்பட வேண்டும்.

சில இனவாத அரசியல்வாதிகளைப் போல் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. நடுநிலையாக தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையை நாம் நிச்சயம் தெற்கிற்கு எடுத்துச்செல்வோம். எங்களால் முடியுமான உதவிகளை நாம் செய்வோம். அனைவருக்கும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆகவே தீர்வுகளை பெற்றுக் கொள்ள அமைதியாக செயற்பட வேண்டும் என்றார். (2-312)

## புதையல் தோண்டப்பட்டதாக அடையாளம்; பொலிஸார் திடீர் ரோந்து நடவடிக்கை

### வேப்பங்குளம் பகுதியில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியாவில் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் வேப்பங்குளம் பகுதியில் திடீர் ரோந்து நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு 10.30 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணிவரையும் அப்பகுதியில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை அப்பகுதி மக்கள் சிறிது பதற்றம் அடைந்ததாக தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு வேளை தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கருகில் துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

மேலும் இப்பகுதியில் விடுதலைப் புலிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பணம் இருப்பதாக கருதப்பட்டு இனம் தெரியாத நபர்களால் மயானத்தில் புதையல் தோண்டப்பட்டிருக்கலாம் என எண்ணப்படுகிறது.

இதேவேளை புதையல் தோண்டப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்பட்டதாக அறியப்படுகிறது. அதிகாலை வரை பொலிஸார் சோதனை நடவடிக்கையில் இருந்ததால் அப்பகுதியில் சற்று பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. (2-250)

பாவத்துக்கு பல கருவிகள் உண்டு. அவற்றுக்கு எல்லாம் பொருத்தமான கைபிடி ஜனநாயகம்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அந்தப் பழனிச்சாமியும் இந்தப் பழனிச்சாமியும்

தமிழகத்தின் அரசியல் சூழமைவைப் பார்க்கும் போதெல்லாம் கடவுளே அம்மா ஜெயலலிதா உயிரோடு இருந்திருக்கலாமே என்று எண்ணுவதைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை.

அந்தளவுக்கு தமிழகத்தின் அரசியல் மிக மோசமாகப் போவதைக் காண முடிகிறது.

தமிழகத்தின் முதலமைச்சராக ஓ. பன்னீர் செல்வம் இருந்திருந்தால் அதிமுகவின் ஆட்சி அதிகாரம் அடுத்து வரும் நான்கு ஆண்டுகளுக்கு அசையாமல் நகர்ந்திருக்கும்.

சிலவேளைகளில் ஜெயலலிதாவின் ஆட்சியை விடவும் பன்னீர்ச்செல்வத்தின் ஆட்சி அபாரம் என்று சொல்லுமளவில் நிலைமை இருந்திருக்கலாம்.

ஆனால் அந்தச் சந்தர்ப்பத்துக்கு இடமில்லை என்பதாக எல்லாம் முடிந்து போனது.

இப்போது பழனிச்சாமி தமிழகத்தின் முதலமைச்சராகியுள்ளார். சட்டசபையில் தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதில் இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதற்கு சட்டசபையின் சபாநாயகர் அனுமதி மறுத்ததால், நேற்றைய தினம் தமிழக சட்டசபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரும் திமுகவின் செயல் தலைவருமான ஸ்ராலினை சட்டசபையில் இருந்து காவலர்கள் வலுக்கட்டாயமாகத் தூக்கிச் செல்வதைப் பார்த்தபோது,

உலகின் முதல்நிலை ஜனநாயக நாடு இந்தியா என்பது மெல்லக் காதில் ஒலித்துக் கொண்டது.

அட! இதுகூட ஜனநாயகம்தான் என்று எடுத்துக் கொண்டால், ஸ்ராலினின் சேட் கிழிக்கப்பட்டதும் ஜனநாயகமா என்ற கேள்வி எழும்.

அட! அன்று திமுகவின் ஆட்சியில் கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது செல்வி ஜெயலலிதாவின் ஆடை சட்டசபையில் வைத்துக் கிழிக்கப்பட்டது தெரியாதா?

மேலாடை இன்றி ஜெயலலிதா அன்றைய தமிழக ஆளுநர் அலெக்ஸாண்டரிடம் ஓடிச் சென்று முறையோ! இது தகுமோ! என்று கூச்சலிட்டார் அல்லவா?

அன்று அவருக்கு, இன்று ஸ்ராலினுக்கு. அவருக்கும் இவருக்குமாக சட்டை கிழிக்கப்பட்டால் அதுவே ஜனநாயகம்; அதுவே அறம்; அதுவே நீதி என்று எடுத்துக் கொள்வதில் என்ன தவறு என்று யாரேனும் கேட்டால் அதுவும் சரிதான் என்று சொல்வதைத் தவிர வேறு வழி ஏதுமில்லை.

இருந்தும் சட்டசபையில் வைத்து செல்வி ஜெயலலிதாவின் ஆடை களைந்த சம்பவம் அன்றைய முதல்வர் கருணாநிதிக்கு ஏற்புடையது.

ஏனெனில் அவர் ஒரு கலைஞர். பல திரைப் படங்களுக்கு கதை, வசனம் எழுதியவர்.

அந்தக் கதை வசனங்களில் கதாநாயகியின் ஆடைகளை வில்லன் களைவதான நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில் சட்டசபையை ஒரு நடிப்பிடமாக்கி கலைஞர் கருணாநிதி ஆடை களையும் படலத்தை அரங்கேற்றினார் எனலாம்.

ஆனால் இன்று முதலமைச்சர் பழனிச்சாமி, பழனிச்சாமி என்றால் தன் ஆடைகளைக் களைந்து கோவணத்துடன் ஊர் விட்டே யாருமற்ற மலையில் குடியமர்தல்தான் நடக்க வேண்டும்.

ஆனால் இங்கு பழனிச்சமி மற்றையவர்களின் ஆடைகளைக் களையவும் கிழியவும் செய்துள்ளாரே! இது எந்த வகையில் பொருந்தும்.

அட! அன்று அந்த பழனிச்சாமி அப்படிச் செய்தார். இன்று இந்தப் பழனிச்சாமி மற்றையவர் ஆடைகளைக் களைந்து மலைக்கு அனுப்புவார்.

அவ்வளவுதான் எதுவாயினும் நடப்பது என்ன என்பதை இன்னும் பொறுத்திருந்து பார்ப்பதுதான் எங்களுக்கு நல்லது.

## அரிசிக்கான உச்ச சில்லறை விலைகள்

(கொழும்பு)

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் அரிசிக்கான உச்ச சில்லறை விலைகளை (MRP) வர்த்தமானியில் உடனடியாக பிரசுரிக்கும் படி கட்டளை பிறப்பித்துள்ளார்.

அதன் பிரகாரம் வர்த்தமானியில் நேற்று முன்தினம் நள்ளிரவு பிரசுரிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு அரிசி வகைகளுக்கான உச்ச சில்லறை விலைகள் இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி - 1 கிலோகிராம் 72 ரூபாய் (மாற்றமில்லை).

உள்நாட்டு உற்பத்தி நாட்டரிசி - 1 கிலோகிராம் 80 ரூபாய். இறக்குமதி செய்யப்பட்ட பச்சை அரிசி - கெக்குலு 1 கிலோகிராம் 70 ரூபாய் (மாற்றமில்லை).

உள்நாட்டு உற்பத்தி பச்சை அரிசி - கெக்குலு 1 கிலோகிராம் 78 ரூபாய்.

இறக்குமதி செய்யப்பட்ட சம்பா - (கீரி மற்றும் சூதுரு சம்பா தவிர்ந்தவை) 1 கிலோகிராம் 80 ரூபாய் (மாற்றமில்லை)

உள்நாட்டு உற்பத்தி சம்பா - (கீரி மற்றும்சூதுருசம்பா தவிர்ந்தவை) 1 கிலோகிராம் 90 ரூபாய்.

மேலதிகமாக அரிசி இறக்குமதி வந்திருப்பதாகவும் அதனால் அரிசி தட்டுப்பாடு என்ற கேள்விக்கே இடமில்லாமல் போய்விட்டதாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

பாவனையாளர்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக அரிசி விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் பற்றி முறைப்பாட்டை செய்ய 1977 என்ற விசேடமாக தொலைபேசி இலக்கம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் நாட்டிலுள்ள அரிசி விற்பனையில் ஈடுபட்டுள்ள வியாபார நிலையங்களை கண்காணிக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 250 உத்தியோகத்தரகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கசிப்புடன் கைதானவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம்

(கரணவாய்)

கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டது. 2015ஆம் ஆண்டு கசிப்புடன் கைது செய்யப்பட்ட அல்வாயைச்சேர்ந்த நபர்பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட போது அவர் தலைமறைவாகியிருந்தார்.

கடந்த 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவரைக் கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் மறுநாள் பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றில் முற்படுத்திய போது நீதிபதி நளினி கந்தசாமியால் 15,000 ரூபா அபராதம் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. (இ-3,60)

## கடல்சார் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அதிகரிப்பு

### பிரதமர் ரணில் அச்சம்

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் முன்னர் இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்புலியை விட தற்போது கடல் சார் தீவிரவாதிகளின் செயற்பாடு அதிகரித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேறகொண்ட பிரதமர் நேற்று முன்தினம் அங்கு நடந்த நிகழ்வில் பங்கேற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கடல் சார் தீவிரவாதிகள் கப்பலை கொள்ளையடிக்கும் அளவிற்கு தற்போது பல அட்டகாசங்கள் அதிகரித்துள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை விட இவர்கள் அதிகளவில் தந்திரோபாயங்களை மேற்கொண்டு கப்பலை கடத்துவதாக கூறினார்.

இந்த நிலையில் தற்போது இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பிற்கு விசேட பொறிமுறை தயாரிக்கப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கஞ்சாவுடன் கைதான மூன்றுபேருக்கு மறியல்

(கரணவாய்)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை வரைவிளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிபதி பா. சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை வல்வெட்டித்துறைத் துறைப் பொலிஸாரால் 113. 700 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான உத்தரவினைப் பெற்று விசாரணை செய்ததன் பின் நேற்று முன்தினம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித் துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்கள் மூவரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (இ-3,60)

## இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்

இன்று நமக்குத் தரப்படும் பைபிள்பகுதியில் இயேசு 'கண்ணுக்குக் கண்", 'பல்லுக்குப் பல்"என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக்கன்னத்தில்அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் என கூறுவதைக் நாம் பார்க்கின்றோம்.

'கண்ணுக்குக் கண்", 'பல்லுக்குப் பல்"என்ற இந்த பைபிள்வரிகளை சற்று நோக்குவோமானால்: இயேசு பிறப்பதற்கு முற்பட்ட காலத்திலும், இயேசு வாழ்ந்த காலத்திலும் மக்கள் குழுக்களாக


### பரமபிதா காட்டிய பாதை

வாழ்ந்தபோது, ஒரு குழுவில் உள்ளவர் மற்றொரு குழுவில்உள்ளவருக்கு தீங்கு செய்தால், அது பெரும் சண்டையாகமாறி, இரண்டு குழுக்களுக்கும் பெரும் உயிர்ச் சேதமும், சொத்துச் சேதமும் ஏற்பட்டுவிடுகின்ற நிலைமையே அன்று காணப்பட்டது. அதுதான் 'கண்ணுக்குக் கண்", 'பல்லுக்குப் பல்"- இதன்படி ஒரு குழுவில் உள்ளவர் மற்றொரு குழுவில் உள்ளவரைத் தாக்கினால், பாதிக்கப்பட்டவருக்கும், அவரைத் தாக்கியவருக்கும் இடையே மட்டும் வழக்குத் தீர்க்கப்படும். ஒரு மனிதனுக்காக குழுக்கள் தங்களிடையே சண்டையில் ஈடுபடாது, பாதிக்கப்பட்டவருக்கு ஒருகண் போயிருந்தால், அவரைத் தாக்கியவருக்கும் அதே தண்டனை கொடுக்கப்படும். இயேசு வாழ்ந்தபோது இதுதான் மக்களிடையே ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. இதனைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு ஒரு புதிய ஒழுங்கைக் கொண்டு வருகிறார் இயேசு.

இயேசு இப்போதுமற்றொரு நிலைக்கு மக்களை அழைத்துச்செல்கிறார். இதன்படி, பகைவருக்கும் அன்பு என்ற பழைய ஏற்பாட்டின் கட்டளைக்கு புத்து யிர் கொடுக்கிறார். இது புதி யது அல்ல மாறாக, புதுமை யானது.

இந்த வேளையில் படித்ததில் பிடித்து என் மனதில் ஆழமாய் பதிந்துவிட்ட ஒரு செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். 2005 ஆம் ஆண்டு கார்த்திகையில், **Ahmad Khatib**- அகமட் கரிப் என்ற பாலஸ்தீனிய சிறுவன் ஒருவன் இஸ்ரயேல் வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் வைத்து விளையாடிக் கொண்டிருந்த பொம்மை துப்பாக்கியை உண்மைத் துப்பாக்கி என்று நினைத்த வீரர்கள் அகமட் கரிப்பை சுட்டனர். இஸ்ரயேல் வீரர்கள் தங்கள் தவறை உணர்ந்ததும், உடனே அச்சிறுவனை இஸ்ரயேல் பகுதியில் இருந்த ஒரு வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். அவனது பெற்றோரையும் அழைத்துச் சென்றனர். அங்கு அகமட் கரிப்பை காப்பாற்ற முடியவில்லை. அந்த நேரத்தில் அவனது பெற்றோர் ஓர் அற்புதம் செய்தனர். கொல்லப்பட்ட தங்கள் மகன் - அகமட் கரிப்பின் உடல் உறுப்புகளைத் தானம் செய்ய முன்வந்தனர். அவர்கள் அந்த உறுப்புக்களின் தானத்தை இஸ்ரயேல் பகுதியில் இருந்த வைத்தியசாலையிலேயே செய்தனர்.

இதனைக் கேள்விப்பட்ட பாலஸ்தீனியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பலர் கோபமடைந்தனர். ஆனால், கட்டாயம் வேறு பல பாலஸ்தீனியர்கள் மகிழ்ந்திருப்பர். தங்கள் மகனைக் கொன்றது இஸ்ரயேல் படைவீரர்கள் என்று தெரிந்தும், அந்தப் பகுதியிலேயே தங்கள் மகனின் உறுப்புக்களை அவர்கள் தானம் செய்தது பழி தீர்ப்பதில் ஓர் உயர்ந்த வகை. **Ishmael- Ablah**- இஸ்மாஎல்- அப்லா என்ற அந்த சிறுவனின் பெற்றோர் எளிய மக்கள். அந்தப் பெற்றோர் எடுத்த முடிவைப்பற்றி பத்திரிகை



யாளர்கள் கேட்டபோது, அவர்கள் சொன்னது: 'எங்கள் மகனின் உறுப்புக்கள் வழியே வாழப்போகும் இஸ்ரயேல் மக்கள் இனிமேலாகிலும் சமாதானத்தை விரும்புவார்கள் என்ற நம்பிக்கையில் தான இந்த உறுப்புகளை நாங்கள் தானம் செய்தோம்" என்று தெரிவித்தனர்.

கணக்குப் பார்த்து பழி தீர்க்கும் உலகை விட, பழி தீர்ப்பதில் ஓர் உயர்ந்த வகை என நாம் இங்கு குறிப்பிட்ட நல்ல செயல் வழியாக, பழிகளைத்தீர்ப்பதில் நம் உலகை நாம் வளர்ப்போம். திருவள்ளுவான் கூற்றாகிய: 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்."என்பதனையும்மனதில் நிறுத்தி அன்பையே நம் வாழ்வின் அடித்தளமாக கொள்வோம்.

**ம.பிரான்சிஸ்க்**
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# Northern challengers உதைபந்தாட்டம் மயிலங்காடு ஞானமுருகன் வெற்றி







வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் Northern Challengers உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (17-02-2017) அன்று நடைபெற்ற சுப்பர் 8 சுற்றின் இரண்டாவது ஆட்டத்தில் மன்னரர் கில்லரி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல்கணக்கில் சுப்பர் 8 சுற்றில் தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது. (க)

# ஜோசப் வாஸ் நகர் ஐக்கியத்தை வீழ்த்தியது இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம்




வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக Northern Challengers Cup என்ற மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

(16.02.2017)அன்று நடந்த சுப்பர் 8 சுற்று லீக் போட்டியில் இளவாலை யங்கென்றீஸ்சை எதிர்த்து மன்னார் யோசப் வாஸ் நகர் ஐக்கிய அணி மோதியது.

முதல் பாதியில் இரு அணிகளும் போராடிய போதும் கோல் எதுவுமின்றி முடிய 2ஆம் பாதி ஆட்டத்தில் விரைவான பரிமாற்றங்களினூடாக யங்கென்றிஸ் அணி 43 ஆவது நிமிடம் அனோஜன் கோல் போட மீண்டும் 55 ஆவது, 58 வது நிமிடங்களில் தனேஸ், மதுசன் ஆகியோர் கோல் போட இளவாலை யங் கென்றிஸ் அணி ஜோசப் வாஸ் நகர் ஐக்கிய அணியை 03:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# இந்துக் கல்லூரிக்கெதிரான பயிற்சி ஆட்டத்தில் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி முன்னிலை

யாழ். இந்துக் கல்லூரி கொழும்பு-பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிகளுக்கு இடையிலான எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ள இந்துக்களின் மாபெரும் துடுப்பாட்ட போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் சென்ஜோன்ஸ் வீரர்களின் பந்துவீச்சில் சுருண்டது யாழ். இந்துக் கல்லூரி.

நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணி சென் ஜோன்ஸ் கல்லூரி அணியினை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. முதலாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 36.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 132 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் சென் ஜோன்ஸ் அணிசார்பாக தேவபிரசாந் 33 ஓட்டங்களையும்,ஜெனி பிளமிங் 28 ஓட்டங்களையும்,கபில்ராஜ் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாக துவாரகன் 8ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளையும்,சிவலக்சன் 9 ஓவர்கள் பந்துவீசி 43 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும்,சந்துரு 12 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றிக்கொண்டனர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 32.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 73 ஓட்டங்களை மாத்திரம் பெற்று முதலாவது இனிங்சில் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னடைவை சந்தித்தது. துடுப்பாட்ட வரிசையில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பாக கயானன் 30 ஓட்டங்கள், சந்தோஷ் 15 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக பந்து வீச்சில் யதுஷன் 10 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும்,நிசாந்துயன் 9 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றி தமது சிறப்பான பந்து வீச்சினை வெளிப்படுத்தியிருந்தனர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்சினை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 22 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து 121 ஓட்டங்களை பெற்று பலமான நிலையில் உள்ளனர். ஆடுகளத்தில் துலக்சன் 76 ஓட்டங்களுடனும், தேவபிரசாந் 34 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதுள்ளனர். (க)

# விளையாட்டுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

அரியாலை 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு வட மாகாண ரீதியில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றம் கொண்ட மென்பந்தாட்டம் A, B பிரிவினருக்கான கரப்பந்தாட்டம், தாச்சிப்போட்டி, வலைப்பந்தாட்டம் என்பவற்றுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் குழுத்தலைவர் ந.சுதேஸ்குமாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உதைபந்தாட்ட சம்பியனாகியது இமையாணன் அ.த.க.பாடசாலை



மாகாண மட்ட 14 பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் இமையாணன் அ.த.க. பாடசாலை சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. அண்மையில் நடைபெற்ற போட்டியில் முதல் சுற்றில் இருதயக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, சிவகுரு கல்லூரியையும் இறுதிப்போட்டியில் கொற்றாவத்தை பாடசாலையையும் வீழ்த்தி சம்பியனாகியது இமையாணன் அ.த.க.பாடசாலை. (க)

# இலங்கை 16 மற்றும் 19 வயதின் கீழ் கூட்டு உதைபந்தாட்ட அணியில் யாழ்.வீரர்கள் மூவர்

ஜப்பான் கால்பந்து சம்மேளனம் இலங்கை கால்பந்து சம்மேளனத்துடன் இணைந்து முதல் முறையாக நடத்தும் 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான ஜப்பான் - தெற்காசிய கால்பந்து சுற்றுப்போட்டி அடுத்த மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ளது. ஜப்பான், இலங்கை, நேபாள் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளின் அணிகள் பங்கு கொள்ளும் இந்த தொடர் மார்ச் மாதம் 11ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பு ரேஸ் கோர்ஸ் அரங்கில் இடம்பெறவுள்ளது.

எதிர்கால விளையாட்டு வளர்ச்சியை முக்கியமாகக் கருத்தில் கொண்டு "நாளைய தினத்திற்கான விளையாட்டு" என்ற கருப்பொருளில் ஜப்பான் அரசாங்கம் இந்த சுற்றுத் தொடரை ஏற்பாடு செய்துள்ளது. குறித்த போட்டித் தொடர் 16 வயதின் கீழ்ப்பட்டவர்களுக்கான போட்டிகளாக இருந்தாலும், அதில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதாவது தொடரில் பங்கு கொள்ளும் ஜப்பான் 16 வயதின் கீழ்ப்பட்ட அணியில் அந்நாட்டின் மிகப்பெரிய போட்டி தொடரான J லீக்கில் (ஜப்பான் பிரீமியர் லீக் ) விளையாடும் வீரர்கள் சிலர் அங்கம் வகிக்கின்றனர். எனவே அவர்களின் திறமை சிறந்த முறையில் இருக்கும் என்ற காரணத்தால் ஏனைய மூன்று நாடுகளின் அணிகளிலும் (இலங்கை, நேபாள், பூட்டான்) 19 வயதுக்குட்பட்ட வீரர்கள் 5 பேரை இணைத்துக் கொள்ளுமாறு ஜப்பான் கேட்டுள்ளது.

32 வீரர்களை கொண்ட இலங்கை அணியில் வடக்கு மாகாணத்தினை பிரதிநிதித்துவப் படுத்தி, புனித ஹென்ரியரசர் கல்லூரி வீரர்களான ஜீட் சுமன் P.றெக்சோன் மற்றும் யாழ்.மகாஜன கல்லூரி வீரனான ரவிகுமார், தனுஜன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள். (க)

### காற்றில் பறக்கவிடப்...

விடுவிப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் மீள பெறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பில் காணிகளை விடுவக்குமாறு வலியுறுத்தி தொடர் போராட்டம் மற்றும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் நேற்றுக் காலை பத்து மணிக்கு புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் நில மீட்பு போராட்டம் தீவிரமடைந்து வரும் நிலையிலும் தீவு மறுக்கப்படும் நிலையிலும் இவ்வாறான சம்பவங்களை சிந்திக்கும் போது இந்த மண்ணில் இராணுவ ஆட்சி இடம்பெற்று வருகின்றதா? என எண்ண தோன்றுகிறது.

ஆட்சியாளர்கள் எடுக்கும் எந்த முடிவுகளையும் இராணுவம் ஏற்கவில்லை. எனவே இராணுவ அதிகாரம்தான் அரசியலில் செயற்படுத்தப்படுகின்ற உண்மை வெளிப்படுகிறது.

காணி அதிகாரம் என்பது 13 ஆவது திருத்தம் மூலம் வட மாகாண சபைக்குள்ளது என வெளியுலகிற்கு அரசாங்கம் தெரிவித்து வரும் நிலையில் தற்போதைய சம்பவங்கள் மூலம் வட மாகாண சபையின் அதிகாரம் பூச்சியம் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-281)

### நில மீட்புப் போராட்ட...

பினருமான மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை வருமாறு,

சென்ற பல நாட்களாக முல்லைத்தீவில் அஹிம்சை வழியில் ஜனநாயக வழிகளில் அரசுப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் சொந்த நிலங்களை மீட்கவும் அந்த நிலங்களில் மீளக் குடியேறி வாழ்வதற்குமான உரிமை மறுக்கப்பட்ட மக்கள், போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இனவிடுதலைப் போராட்ட காலங்களில் துன்பமான துயரமான இழப்புக்களையும் அனுபவித்த .மக்கள் திடசங்கற்பம் கொண்டு நடத்தும் போராட்டங்களை நாம் ஆதரிக்கின்றோம்.

ஒரு திட்டமிட்ட அடிப்படையில் அனைவரும் ஒருங்கிணைந்து இலக்கை எட்டும் வரை போராடுவது நியாயமானதேயாகும். இப்போராட்டங்களில் அமைதியான அஹிம்சை வழியிலான வன்முறைகளுக்கு இடமளிக்காத ஜனநாயகவழிப் போராட்டங்களில் நாம் பங்கு கொள்ள வேண்டும்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்து அதற்குச் சொந்தமான மக்களை மீளக் குடியமர்த்துவோம் என ஜனாதிபதியும் அரசும் வாக்குறுதி அளித்து இரண்டு வருடங்களாகிவிட்டன.

இக் காலத்தில் ஒருசிறு முன்னேற்றம் ஏற்பட்டதே தவிர மக்கள் நிலங்கள் பெருமளவில் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இவ்விடயங்களில் 2012, 2013, 2014, 2015ஆம் ஆண்டுகளில் இலங்கை உட்பட அங்கத்துவ நாடுகளினால் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட ஐ.நா.மனித உரிமை தீர்மானங்கள் பெருமளவில் நிறைவேற்றப்படாமல் அரசும் ஜனாதிபதியும் இழுத்தடிப்புச் செய்து வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மக்களைப் போராட அரசு நிர்ப்பந்திப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஜனாதிபதியும் அரசும் உடன் நேரடியாகத் தலையிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்க வேண்டும் என்றும் அந்த மக்களை மீளத் தங்கள் நிலங்களில் குடியேற்ற வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றோம். அனைத்துத் தரப்பு மக்கள், சிவில் அமைப்புக்கள் நிலமீட்புக்காகப் போராட்டங்களில் ஈடுபடுவதையும் வரவேற்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தலைவர்களும் பாராளுமன்றத்திலும் நேரடியாகவும் ஜனாதிபதியிடமும் அரசிடமும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்க வேண்டுமென வற்புறுத்தி வருகின்றனர்.

பாராளுமன்றத்தில், முல்லைத்தீவில் இடம்பெறும் போராட்டங்கள் தொடர்பிலும் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வந்து விவாதித்துள்ளனர். ஆனாலும் விடிவு இல்லை. எனவே மக்கள் போராட்டங்களை நில ஆக்கிரமிப்புக்கு எதிராக மக்களின் சொந்த நிலங்களை விடுவித்து மீளக்குடியிருப்புக்குரித்தான மக்கள் வாழ்வுரிமைப் போராட்டங்களை ஆதரிப்போம் அப்போராட்டங்களின் பங்காளர்களாவோம்.

இத்தகைய போராட்டங்களை நடத்தியும் பங்களிப்புச் செய்தும், ஆதரித்தும் வந்த வரலாற்றைக் கொண்ட நான், சென்ற திங்கள் 09.01.2017 அன்று நினைவிழக்கும் வரையிலான கொடிய நோயொன்றினால் நீண்ட நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததனால் நான் பங்கு பற்ற முடியவில்லை என எனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி நோயிலிருந்து தேறுவதற்கு மருந்து உட்கொண்டு வருகின்றேன். மருத்துவர்களின் ஆலோசனைப்படி நடக்க வேண்டியுள்ளது. இருப்பினும் நான் விரைவாகத் தேறி வருகின்றேன்.

இத்தகைய போராட்டங்களை ஆதரிக்கின்றேன். விரைவில் போராட்டங்களில் பங்கெடுக்க முடியும் என நம்புகின்றேன். அதனாலும் இவ்வறிக்கையை வெளியிடுகின்றேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

### உழவு ஊர்தியுடன்...

வடமராட்சி குஞ்சர்கடை, விழுந்த ஆலடிப் பகுதியில் புகைப்படக் கலைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், இரு சக்கர உழவு ஊர்தியுடன் மோதுண்டு கோர விபத்துக்குள்ளானதில் புகைப்பட கலைஞர்களில் ஒருவர் பலியானதுடன் மற்றையவர் படுகாயங்களுக்குள்ளானார்.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் திருமால்சோதி வீதி, நெல்லியடியைச்சேர்ந்த திருமலைச்செல்வன் சஞ்சீவ் (வயது-23) என்பவர் பலியானதுடன் வடமராட்சிக் கிழக்கைச் சேர்ந்தவரும் புற்றளை புலோலி தெற்கில் வசிப்பவருமான கணேசலிங்கம் லம்போசியன் (வயது - 19) என்பவர் படுகாயங்களுக்குள்ளானார்.

மரணமடைந்த இளைஞனின் தந்தையார் நெல்லியடி நகரில் புகைப்படக் கலையகத்தினை நடத்தி வரும் நிலையில் அதில் வேலை செய்யும் மற்றைய இளைஞருடன் சேர்ந்து இருவருமாக சென்று கொண்டிருந்த போது இக் கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

குஞ்சர் கடைப் பக்கமாக இருந்து நெல்லியடியை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த இரு சக்கர உழவு ஊர்தியுடன் வேகமாக மோதியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறினர்.

இதில் சுயநினைவிழந்த இருவரும் வீதியால் பயணித்த பஸ் வண்டியில் ஏற்றப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது சஞ்சீவ் என்ற இளைஞர் மரணமடைந்ததாக கூறப்பட்டது.

மற்றைய இளைஞர் தொடர்ந்தும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இரு சக்கர உழவு இயந்திரத்துடன் சாரதியை தடுத்து வைத்துள்ள நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

### 13 கிலோ கஞ்சாவுடன்...

ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள கைவேலிப் பகுதியில் பதுங்கி இருந்த போது கேரளக் கஞ்சா பொதிகளுடன் வந்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

இதன்போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபரையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-15)

### மாணவர் மோதல்...

2ஆம் 3ஆம் வருட மாணவர்களுக்கிடையே மேற்குறித்த மோதல் இடம்பெற்றுள்ளதாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்றைய தினம் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகில் உள்ள பகுதியில் மேற்குறித்த சம்பவத்தில் காயமடைந்த 2ஆம் வருட மாணவன் தங்கியிருந்த வீட்டுக்கு சென்ற 3ஆம் வருட மாணவர்கள் 6 பேர் குறித்த மாணவனை சரமாரியாக தாக்கியதுடன் அவர் தங்கிருந்த வீட்டின் யன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கி விட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் காயமடைந்த மாணவன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-9)

### ஆட்டோ சாரதியை...

செயலகம் வல்லைவெளி, தொண்டைமானாறு என அனைத்து இடத்துக்கும் பிரயாணம் செய்துவிட்டு இறுதியாக தொண்டைமானாறு செல்லும் வழியில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் வைத்து ஆட்டோ சாரதியை துணியால் முகத்தை மூடிவிட்டு அவரை தாக்கியதோடு அவரிமிருந்து 12ஆயிரம் ரூபாய் பணத்தையும் ஆட்டோவையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறையிட்டதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

### இந். வெளி. செயலர்...

கப்படுகின்றதனால் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை அவர் நாட்டில் தங்கி இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவு செயலாளர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரின் இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நாட்டின் உயர்மட்ட அதிகாரிகளை அவர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பாதுகாப்பு ஊழியரை தாக்கிய ஆட்டோ சாரதிக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியரை தாக்கிய முச்சக்கரவண்டி சாரதியை எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை அவரது கடமையை செய்ய விடாது முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் தொடர்ந்து இடையூறு செய்து வந்துள்ளார்.

யாழ்.நகரின் வெளிப்புறத்தில் வைத்து கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாதுகாப்பு உத்தியோகத்தரை குறித்த முச்சக்கர வண்டி சாரதி தாக்கியுள்ளது.

இதுதொடர்பில் தாக்குதலுக்கு இலக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் பொலிஸில் முறையிட்டிருந்தார்.

இதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் குறித்த முச்சக்கர வண்டி சாரதியை கைது செய்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில் அவரை எதிர்வரும் 2ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-30)

### காணிக்குள் வீழ்ந்தே...

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள், விமானப்படை பிடித்து வைத்துள்ள தமது காணியை விடுவிக்க கோரி நேற்று பத்தொன்பதாவது நாளாகவும் கடும் இராணுவம் மற்றும் விமானப்படை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இரவு பகலாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். எரிக்கும் வெயிலிலும் கொட்டும் பனியிலும் போராட்டத்தை முன்னெடுத்து வருவதால் பலர் சுகவீனமடைந்துள்ளனர்.

மக்களுடைய போராட்டம் தீவிரமடைந்து வரும் நிலையில், விமானப்படையும் தமது முன்னரங்குகளை பலப்படுத்தி வருகின்றமையை காணமுடிகின்றது. எனினும் மக்கள் விமானப்படையின் அச்சுறுத்தல்களுக்கு பயப்படாமல் தொடர்ந்தும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். எனினும் சில தினங்களுக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் தமது போராட்டம் வேறு திசைக்கு திரும்பும் எனவும் அந்த மக்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்களும் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நாளை காலை ஒரு மணிநேர போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தமது காணிகளை விடுவிப்பதாக கூறி இராணுவமும் அரச அதிகாரிகளும் எம்மை ஏமாற்றுகின்றனர் என குற்றஞ்சாட்டி தமது காணி விடுவிப்பு தொடர்பான உறுதியான திகதியை வழங்குமாறு கூறி அங்குள்ள விமானப் படை முகாம் முன்பாக கடந்த 31 ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த போராட்டத்தை நிறுத்துமாறு பல தரப்பினர் கோரிக்கை விடுத்த போதிலும் உறுதியான பதில் கிடைக்கும் வரையில் தமது போராட்டம் தொடரும் என அறிவித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்போது பல சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இனியும் தாம் ஏமாற முடியாது என கூறி தொடர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த குடியிருப்பாளர்களின் பிள்ளைகள் கடந்த பல நாட்களாக பாடசாலை செல்லாத நிலையிலும், வீதிகளில் சமைக்கப்படும் சுத்தமற்ற உணவுகளையும் உண்ட வண்ணம் கடும் பனியில் படுத்துறங்கி வருகின்றனர்.

இதனால் அவர்களது உடல் நிலை வேகமாக பாதிப்படைந்து வருகின்றது. மேலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் வயோதிபர்களாக காணப்படுவதால் அவர்களது உடல் நிலையும் காலநிலையால் வெகுவாக பாதிப்படைந்து வருகின்றது.

இது தவிர தொடர்ந்தும் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

நேற்றும் நேற்றுமுன்தினமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை விமானப் படையினர் காணிக்குள் தேவையில்லாமல் உட்சென்றால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காவீர்கள் என அறிவுறுத்தல் மூலம் அச்சுறுத்தியுள்ளனர்.

எனினும் போராட்டத்தில் உறுதியான மக்கள் தாம் காணிக்குள் செல்லும்வரை தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் தாம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானாலும் தமது காணிக்குள் வீழ்ந்தே உயிரை விடுவோம் எனவும் தெரிவித்துள்ளனர். (செ-4)



## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன் பேணும் அமைப்பின் அலுவலகமும் தையல் பயிற்சி நிலையமும் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள அலுவலக முன்றல் குட்செட் வீதியில் இடம்பெறும்.

மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், நல்லூர் பிரதேசசபை பிரதான முகாமை உதவியாளர் சி.தயாபரன், கௌரவ விருந்தினராக தேனு கஞ்சிய உரிமையாளர் தி.சிறி மோகனதாஸ் மற்றும் J/120 பிரிவின் கிராம சேவையாளர் திருமதி கு.பிரதாபராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

## தமிழக முதலமைச்சர்...

எனினும், அதற்கு சபாநாயகர் தனபால் அனுமதிக்கவில்லை. திறந்த வாக்கெடுப்பே நடத்தப்படும் என்று அறிவித்தார்.

இதற்கு எதிராக திமுகவினர் சபாநாயகரை முற்றுகையிட்டனர். இதையடுத்து சபாநாயகர் பேரவையை 11 மணி வரை ஒத்தி வைத்தார்.

அப்போது திமுக உறுப்பினர்கள் சபாநாயகரை பிடித்து இழுத்து, அவரது நாற்காலியை சேதப்படுத்தினர். சபாநாயகரின் மேசை தள்ளி வீழ்த்தப்பட்டதுடன் ஒலிவாங்கியும் பிடுங்கியெடுக்கப்பட்டது.

சபாநாயகரை பெரும் போராட்டத்துக்குப் பின்னர், சபைக் காவலர்கள் மீட்டுச் சென்றனர்.

மீண்டும் சபை 11 மணிக்கு கூடிய போது, அவையில் குழப்பம் விளைவித்த திமுகவினரை வெளியேற்ற சபாநாயகர் உத்தரவிட்டதுடன் மாலை 3 மணி வரையில் பேரவையை ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடுவதற்கு முன்னர் அங்கிருந்த எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட திமுக உறுப்பினர்கள் பலவந்தமாக தூக்கிச் செல்லப்பட்டு வெளியேற்றப்பட்டனர். இதன்போது, தாம் தாக்கப்பட்டதாகவும் சட்டை கிழிக்கப்பட்டதாகவும் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதையடுத்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சபையை விட்டு வெளிநடப்பு செய்தனர்.

இந்த நிலையில், மாலை 3 மணியளவில் மீண்டும் சபை கூடிய போது, அதிமுக சார்பில் தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர் உள்ளிட்ட 124 உறுப்பினர்கள் மாத்திரம் அமர்ந்திருந்தனர்.

இதையடுத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது, எடப்பாடி பழனிச்சாமி கொண்டு வந்த நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆதரவாக 122 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஓ.பன்னீர்ச் செல்வம் தலைமையிலான அணியைச் சேர்ந்த 11 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

இதனால், பெரும்பான்மை பலத்துடன் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுக அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தார்.

அதேவேளை, தாம் சட்டசபையில் இருந்து வெளியேற்றப்பட்டதை கண்டித்து சென்னை மெரீனா கடற்கரையில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் போராட்டம் நடத்தியிருந்ததுடன் அவர்கள் கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தமிழ் மக்கள்...

செயற்பாடுகளை விடவும், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் பேரவை மிகவும் பயங்கரமானது. பிரபாகரன் இருந்த காலத்தில் எமக்கான அச்சுறுத்தல் என்னவென்று தெரிந்தது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மிகவும் தீவிரமாக சர்வதேச ரீதியில் அவர்களது பிரிவினை வாதத்தை வெற்றிகொள்ள செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். தெற்கில் அரசாங்கம் ஆட்சி செய்துகொண்டிருப்பதாக கூறினாலும் வடக்கில் அரசாங்கத்தின் ஆட்சி நடைபெறவில்லை. வடக்கில் சிங்களவர்களின் வாழ்வதற்கான உரிமை இல்லாமல் போயுள்ளது. கிளிநொச்சி உள்ளிட்ட இடங்களில் வாழ்ந்த, சிங்களவர்களை துரத்தியடிக்கின்றனர்.

பிரதமர் மற்றும் ஜனாதிபதி காரியாலயத்தில் இருந்து அனுப்பும் சிங்கள மொழியிலான கடிதங்களைக் கூட குப்பைத் தொட்டிக்குள் போடும் நிலைமை வடக்கில் காணப்படுகின்றது. இராணுவம் மீட்டெடுத்த இந்தப் பூமியை பத்திரம் ஒன்றில் எழுதிக் கொடுக்க இந்த நாட்டு மக்கள் தயாரில்லை. இராணுவம் இருக்கும் வரை அது கனவிலும் நடைபெறாது என ஞானசார தேரர் குறிப்பிட்டார். (செ-11)


### வீடு/கடை வாடகைக்கு தேவை

கல்வி நிலையம் ஒன்றுக்கு கணணி மற்றும் ஆங்கில வகுப்புக்கள் நடாத்துவதற்கு வீடு அல்லது கடை வாடகைக்குத் தேவைப்படுகிறது. யாழ்.நகருக்கு அருகாமையில் அல்லது யாழ். நகரின் பிரதான வீதி ஒன்றுக்கு அருகில் அமைந்திருப்பின் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
0779713221
(7991)

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம் (C-7565)

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-7588)

### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 22.01.2017 அன்று இறைபதம் எய்திய எமது இதய தெய்வம்

அமரர்

**பொன்னையா இராசரத்தினம்**

(பிரபல சைக்கிள் மெக்கானிக்)

பிறப்பு: 01.11.1952 இறப்பு: 22.01.2017

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 20.02.2017 திங்கட்கிழமை அதிகாலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கடற்கரை மடத்தில் இடம்பெற்று அஸ்தி கரைக்கப்படும். மறுநாள் 21.02.2017 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரண கிரியை நடைபெறும். இவ்விரு கிரியைகளிலும் தாங்கள் பங்குபற்றி அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்*

இங்ஙனம்:- குடும்பத்தினர்
இ. கங்கைமைந்தன் (மகன்)
பொறுப்பதிகாரி, இ.போ. ச. (வட)
ம.பே. நிலையம், யாழ்ப்பாணம்.

கனுவில்
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.
(7994)

### எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress
(சி-7590)

### NEW TREND CERAMIC



Wall / Floor Tiles, Glass Block
Brand Sanitary Ware And
Bathroom Set.

Address :
424, K.K.S. Road,
Jaffna.

Phone : 021 492 357
Mobile : 077 458 4659
Email : moorthysithra@gmail.com
(சி-7594)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### Tourist Hotel வேலைவாய்ப்பு
### Treatooo Hotels (Pvt) Ltd

யாழ்., மட்டக்களப்பு, நுவரெலியா ஆகிய எமது உல்லாச விடுதிகளில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு சமையல்காரர், ரூம் போய், தோட்ட வேலைக்காரர் தேவைப்படுகின்றனர்.
உணவு, தங்குமிடம் இலவசம். கவர்ச்சிகரமான சம்பளம்.

அழையுங்கள்:-0767781017 (சி-7570)

### உடனடி வேலைவாய்ப்பு

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத்தில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு அச்சக வேலை தெரிந்தவர்கள் மற்றும் பழக விரும்புபவர்களும் அத்துடன் விக்டோரியா வீதியில் இயங்கும் மல்ரி சொப் ஒன்றிற்கும் (குளிரூட்டப்பட்டது) வேலையாட்கள் தேவை. (பெண்கள்)

மாநகர சபைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0773920797
(7982)

### மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்து புத்தகங்களுக்கும் 10% - 30% வரையான விசேட விலைக்கழிவுகள்
இடம் : முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி, முல்லைத்தீவு
காலம் : 16.02.2017 - 22.02.2017 வரை

ஏற்பாட்டாளர்கள் : யாழ்.புத்தகசாலை
22, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7568, 077 834 9507
(சி-7578)

### காணி வாடகை/ குத்தகைக்கு

மானிப்பாயில் 10 பரப்புக் காணி வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு.
யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
0756156979, 0771772359
(7998)

### Venus Enterprises

இல .110, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.
Office :- 021-2217744. 0772487172
venusroslk@gmail.com



12 LPH · 25 LPH · 50 LPH · 100% தூய்மையான குடிதண்ணீர்

உங்களினதும் உங்கள் குழந்தைகளினதும் ஆரோக்கியமான வாழ்வுக்கான தூய்மையான குடிதண்ணீர்
● உங்கள் வீட்டு கிணற்றுத்தண்ணீரையே நல்ல தண்ணீராக மாற்றித்தரும்.
● வீட்டுக்கு மட்டும் அல்ல தேநீர் விடுதிகள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள், அலுவலகங்கள், என்பவற்றிற்கான எல்லாவிதமான இயந்திரங்களும் உண்டு.
● இலவசமாக தண்ணீர் பரிசோதனை செய்து தரப்படும். (TDS) Total dissolved Solids.

VENUS AQUA
RO SYSTEMS
விற்பனைக்கு பிந்தியசேவை.
(C-7587)

### கண்டி மரக்காலை தளபாடம் விற்பனை நிலையம்

உள்நாட்டு, வெளிநாட்டு மரப்பலகை, வீட்டு தளபாடம், கதவு நிலை, கதவுகள், யன்னல்கள் மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P : 0777405037
0776658193

54 - 60 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(நீதிமன்றுக்கு முன்பாக)
(சி-7573)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 105

வள்ளுவர் ஆண்டு 2048 19.02.2017 தொலைபேசி : 021 222 3378





## நிலத்தை மீட்கும் அறவழிப்போர் தொடர்கிறது...



## சட்டசபை சண்டை சபையானது

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

கோப்பாப்பிலவு மக்களின் போராட்டத்திற்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவது என்ற தீர்மானத்தை மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் வாசிக்க அதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

கேப்பாப்பிலவு மக்கள் தங்களின் வாழ்விடங்களையே கேட்கின்றனர்.

இதனை வழங்குவதற்கு நல்லாட்சி பின்னடிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

என்ர சொந்த நிலத்தைத் தரமறுப்பவர்கள் தமிழர்களுக்கு எப்படி உரிமை தரப்போகினம். விதானையார் விசுவலிங்கத்தின் ஆதங்கம் மாநாட்டில் எதிரொலித்தது.

விதானையாரின் கருத்து எடுத்த எடுப்பிலேயே ஆலடியில் சூடு பிடிக்க வைத்தது.

**கங்காணி:** அதுசரி விதானையார் கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் எங்கட எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கடுமையான எச்சரிக்கையை இலங்கை அரசுக்கு தெரிவிக்கலாமல்லோ.

**வாத்தியார்:** என்ன எச்சரிக்கை. எதிர்க்கட்சி தலைவர் பதவியை இராஜினாமா செய்வன் என்றோ?

**கங்காணி:** வாத்தியார் இது நடக்கிற காரியமோ! எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஒன்று போதும் என்ர சீவிய காலத்திற்கு போதும் என்று நினைக்கிறவர்கள் பதவியை இராஜினாமா செய்வன் என்று உச்சரிப்பினமோ?

நான் சொல்ல வாறது என்னவெண்டால், கேப்பாப்பிலவு மக்களின்ர காணிகளை உடனடியாக விட மறுத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உண்ணாவிரதம் இருப்போம்.

நல்லாட்சிக்கான ஆதரவை விலக்குவோம். இப்படி ஏதாவதொரு எச்சரிக்கையை விடுக்கிறது தானே!

**விதானையார்:** கங்காணி யார் உங்களுக்கு இன்னும் எங்கட அரசியல் தலைமை பற்றி தெரியல்ல என்பதை நான் உணர்கிறன்.

போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று சொன்ன எங்கட அரசியல் தலைமை எங்களுக்காக ஏதும் கதைக்குமோ?

**மூப்பர்:** அப்ப எங்கட கூட்டமைப்பின்ர நிலைப்பாடு என்ன?

**பண்டிதர்:** மூப்பர் கூட்டமைப்பின்ர நிலைப்பாடு என்ன என்று கேட்காதீங்கோ. தமிழ்த் தேசியக்



## கேப்பாப்பிலவு மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு

கூட்டமைப்பு என்பது இப்ப இரண்டு பேரின்ர கட்டளையில தான் இயங்குது.

அதால கூட்டமைப்பு என்று பொதுப்படச் சொல்றது அவ்வளவு பொருத்தமாக எனக்குத் தெரியல்ல.

**வாத்தியார்:** கூட்டமைப்பின்ர கொழும்புத் தலைமையின்ர நிலைப்பாடு விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்தியது பிழை. அவர்களுக்கு தமிழ் மக்கள் உதவுகரமாக இருந்தது மகா பிழை.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களின் போராட்டம், அவர்களின் கோரிக்கை என அனைத்துமே தவறான முறையில் நடந்துள்ளன.

ஆகையால் தமிழர்கள் அமைதியாக இருக்க வேண்டும். இலங்கை அரசுடன் சேர்ந்து போய் அவர்கள் தருவதை வேண்ட வேண்டும் என்பதுதான் கூட்டமைப்பின்ர நிலைப்பாடு.

**சாத்திரியார்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

அண்மையில கொழும்பில நடந்த விழா ஒன்றில கலந்து கொண்டு உரையாற்றிய மந்திரனார்,

மட்டக்களப்பில நடந்த எழுகதமிழ் எழுச்சிப் பேரணி ஓர் உணர்ச்சிப் பேரணி. இது கிடைக்கின்ற தீர்வையும் இல்லாமல் செய்யும் என்று சொல்லியிருக்கிறார்.

**மூப்பர்:** பதவி ஆசை அப்படிச் சொல்ல வைக்குது.

**பண்டிதர்:** மூப்பர் நான் சொல்லுறன் இந்த நல்லாட்சியும் தமிழர்களுக்கு எதுவும் தராது.

இதுதான் உண்மை.

இந்த உண்மை கூட்டமைப்புக்கும் நன்கு தெரியும். இருந்தும் தன்ர காலத்திற்குள்ள தமிழர்களுக்கு ஏதோ ஒரு தீர்வை எடுத்துக் கொடுக்க வேணும் என்று சம்பந்தர் ஐயா விரும்புகிறார்.

ஆனால் அது நடக்குமெண்டு நான் நம்பல்ல.

**கங்காணி:** அதுசரி பண்டிதர் ஐயா தமிழக அரசியல் படுகிற பாட்டைப் பார்த்தியளோ!

**பண்டிதர்:** ஜெயலலிதாவின்ர மரணத்தோட இந்திய தேசத்தின் மூன்றாவது கட்சி என்று சொல்லக்கூடிய அ.தி.மு.கவிற்கு ஏற்பட்ட சோதனைகளைப் பார்த்தியளோ? எப்பவும் எனக்குப் பின் யார் என்பதைச் சொல்லி வைக்க வேணும். மரணம் யாருக்கும் எந்த நேரமும் வரலாம். ஆகையால் அரசியலில இருக்கிற தலைவர்கள் தங்களுக்குப் பிறகு கட்சியின்ர தலைவர் யார் என்பதை அறுதிபட தெரியப்படுத்தி விட வேணும்.

இதைச் செய்யாததால தானே இன்றைக்கு அ.தி.மு.க. அல்லோலப்படுகுது.

**சாத்திரியார்:** அதுசரி பண்டிதர் நாங்கள் தமிழ்நாட்டு அரசியலைப் பற்றி சொல்லுறம். ஏன் எங்கட சம்பந்தர் ஐயா தனக்குப் பிறகு யார் எண்டு ஏதும் சொல்லி வைச்சிருக்கிறாரோ இல்லைத்தானே!

**வாத்தியார்:** நாங்கள் உயிரோட இருக்கும் வரைக்கும் ஆளுவம், பதவியில் இருப்பம். நாங்கள் இல்லாத காலத்தில கட்சி எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற மனநிலையில இருக்கிறவியள் தங்களுக்குப் பிறகு அடுத்த தலைமை யார் என்பதை ஒருபோதும் தெரியப்படுத்தாயினம்.

**விதானையார்:** உண்மை தான். சம்பந்தன் ஐயாவுக்கும் வயது போகுது. சாவுக்கு மூப்பு, இளமை கிடையாது. எண்டாலும் முதுமை என்பது மரணத்தை நெருங்குகிற ஒரு காலம் தானே!

ஆகையால சம்பந்தர் ஐயாவும் தனக்குப்பிறகு அடுத்த தலைவர் யார் என்பதைச் சொல்லத் தவறினால் கூட்டமைப்பு என்ற பெயர் அவரோட போய்ச் சேரும் என்பதுதான் உண்மை.

**சாத்திரியார்:** எல்லாம் விதிப்படி தான் நடக்கும்.

**விதானையார்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள் எல்லாம் விதிப்படி எண்டால் இந்த ஆலடி மாநாடும் தேவைப்படாதெல்லோ!

**சாத்திரியார்:** விதானையார் நான் அந்தக் கருத்தில சொல்லல்ல. ஓ.பன்னீர்செல்வம் சசிகலாவோட இருந்திருந்தால் அவர் சிறை செல்ல இப்ப ஓ.பி.எஸ். தானே முதலமைச்சர்.

**வாத்தியார்:** அப்ப ஓ.பி.எஸ்க்கு முதலமைச்சர் சிறைக்குப் போனால் தான் பதவி கிடைக்கிற பலன் எண்டு சொல்லுறியள்.

(ஆலடியில் சிரிப்பு )

**பண்டிதர்:** ஏதோ! எங்களைப் பொறுத்தவரை பன்னீர்செல்வம் அமைதியான, ஆடம்பரம் இல்லாத மனிதராகத் தெரிகிறார்.

அவரைத் தொடர்ந்தும் முதலமைச்சராக வைத்திருந்தால் நான்கு ஆண்டுகள் அ.தி.மு.கவின்ர ஆட்சி நடப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

ஏதோ நடக்கிறதைப் பார்ப்பம்.

**கங்காணி:** 13.02.2017 ஆம் திகதி வடமாகாணத்தில் கத்தி சாணை பிடிக்கிறதில மிகத் திறமையானவர் என்ற பெயர் பெற்ற எழுதுமட்டுவாழைச் சேர்ந்த தம்பு யோகராசா காலமானார். அவரின்ர இறுதிக் கிரியையில கலந்து கொள்ள வேணும் என்பதற்காக 16.02.2017 அன்று யாழ். மாவட்டத்திலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்கள் எல்லாம் பூட்டப்பட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தி இருக்கினம்.

இந்தச் செய்தி யாருக்கும் தெரியுமோ?

**வாத்தியார்:** கங்காணியார் நானும் அறிந்தனான். ஒரு சிறந்த வேலையாளிக்கு வழங்கப்பட்ட உன்னதமான கௌரவம் இது.


சாணை பிடிக்கிறதில அவருக்கு நிகர் எவரும் இல்லை.


தன்ர தொழில தெய்வமாக போற்றிச் செய்த தம்பு யோகராசா அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அத்தனை சிகை அலங்கரிப்பு நிலையங்களும் பூட்டப்பட்டன என்றால் அது ஒரு சாதாரண காரியம் அல்ல. உண்மையில இது எங்கட மக்கள் சமூகத்தின் நன்றியுணர்வை காட்டுகிறது.

நாங்களும் ஆலடியில அவருக்கு அஞ்சலி செலுத்துவம். இப்படி வாத்தியார் கூற அனைவரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்த அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# வடக்கு-கிழக்கு இணைவு தீர்மானிப்பது ஹக்கீமா?





## கூட்டமைப்பின் போக்கு தமிழ் மக்களுக்கு விரோதமானது

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவருவதற்கு முன்னதாக அரசியலமைப்புச் சீர்திருத்தம் எவ்வாறாக அமையும் என்பதை ஓரளவுக்கு அனுமானிக்க முடிகின்றது.

இந்த அனுமானத்தில் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தமிழ்மக்களுக்கு எதனையும் தரப்போவதில்லை என்பது உறுதியாயிற்று.

இந்த உண்மைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்குத் தெரியுமாயினும் இவ்வளவும் போதும் என்ற நினைப்போடு அவர்கள் இருக்கிறார்கள் என்பதே நிஜம்.

ஒரு பெரும் மண் மீட்புப் போரை நடத்தி அந்த உரிமைப்போராட்டத்தில் தங்களை ஆகுதியாக்கிய எத்தனையோ தமிழ் இளைஞர், யுவதிகளின் தியாகங்கள் அனைத்தும் பெறுமதியற்றவையாக ஆக்கப்படுவதில் தமிழ் அரசியல் தலைமை மிகவும் உறுதியாக இருக்கிறது. இழப்பு என்றால் என்ன என்பது பற்றி இம்மியும் தெரியாதவர்களை தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தால் இதுவே நிலைமையாகும் என்பது இந்த உலகிற்கு நல்லதோர் பாடமாகும்.

எது எவ்வாறாயினும் இன்றைய தமிழ் அரசியல் தலைமை என்பது இலங்கை அரசுடன் இணங்கிப் போய் தங்களின் பதவிகளையும் சுகபோகங்களையும் காப்பாற்றுவதை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றதேயன்றி தமிழ் மக்கள் தொடர்பில் அவர்கள் சிறிதேனும் சிந்தித்திலர்.


இந்த உண்மைகள் பல தடவைகள் பலரால் உரைக்கப்பட்டு விட்டது. சுணை கெட்டவர்களுக்கு இவை எதுவும் வேலை செய்யப் போவதில்லை என்பதால் அது பற்றிப் பேசுவதை ஒத்தி வைக்கலாம்.


அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவந்தால் அது இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையும். இதோ! தீர்வு வருகிறது. தமிழ் மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்றெல்லாம் கூறிவந்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் முஸ்லிம் தலைவர்களுடன் இணங்கிப் போவதிலும் மும்முரமாக இருந்தார். இரா.சம்பந்தர் மற்றும் அவரோடு கூட இருப்பவர் என்ற இவ்விருவருக்கும் தமிழ் மக்களைத் தவிர மற்றைய எல்லோரையும் பிடிக்கும் என்பதே இன்றைய நிலைமை.

தமிழ் மக்களைக் கண்டால், அவர்கள் தங்களைச் சந்தித்து தங்கள் பிரச்சினைகளைக் கூறினால் இவர்களுக்கு வருகின்ற கோபம் சொல்லுந்தரமன்று. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள், முஸ்லிம் அரசியல் தலைமை என்றால் போதும். அவர்கள் மீது அலாதிப்பிரியம். அதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது சம்பந்தர் மிகுந்த விசுவாசம் கொண்டுள்ளார். தவிர வடக்கில் இருந்து முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகள் வெளியேற்றியமை மிகப் பெரிய குற்றம். அது தொடர்பிலும் விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டவர் கூட்டமைப்பின் முக்கிய புள்ளி என்பது தமிழ் மக்கள் நன்கு அறிந்த விடயம். இதற்கு அப்பால் வடக்கில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியமையை ஆண்டுதோறும் நினைவுகூரும் முஸ்லிம் அரசியல் தரப்புகளின் நிகழ்வுகளில் முன் ஆசனத்திலும் மேடையிலும் அமர்ந்திருந்து அவர்களுக்கு வக்காளத்து வாங்குபவர்கள் கூட்டமைப்பின் அரசியல் தலைமை என்பதும் தெரிந்த விடயம்.

வடமாகாணத்திலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியமை ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம் என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த உண்மையை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் ஏற்றுக்கொண்டிருந்தார். இப்போது நாம் கேட்பதெல்லாம் தமிழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களில் இருந்து பேரினவாத ஆட்சியாளர்களால் வெளியேற்றப்பட்டனரே இது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியாதா? அந்த நினைவுகளை மீள் பார்வைக்குட்படுத்தும் நிகழ்வுகளை கூட்டமைப்பு ஏற்பாடு செய்ததா? இன்று வரை வலி. வடக்கு மக்கள் முழுமையாக தங்கள் வாழ்விடங்களில் குடியமர முடியாமல் உள்ளனர். முல்லைத்தீவு கேப்பாப்பிலவு- பிலவுக்குடியிருப்பு மக்கள் வீதியில் நின்று போராடுகின்றனர். இவையெல்லாம் இருக்கும் போது முஸ்லிம் அரசியல் தலைமையோடு சேர்ந்து தமிழர்களுக்கு எதிராகக் கூட்டமைப்பு கருத்துத் தெரிவிப்பது ஏன்? என்று சிந்தித்த வேளை, முஸ்லிம் அரசியல் தலைமையுடன் சேர்ந்து- இணங்கிப் போவதன் மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைக்க சம்பந்தர் முயற்சிக்கிறாரோ என்று எம் பேதை மனம் நினைத்ததும் உண்டு.

ஆனால் இது எதுவும் இல்லை என்பது இப்போது முடிவாயிற்று. வடக்கையும் கிழக்கையும் இணைக்கமுடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார். வடக்கும் கிழக்கும் இணைவதா அல்லது பிரிவதா என்பதைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் யார் கொடுத்தது என்பதுதான் தெரியாமல் உள்ளது.





சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வருவது நீண்ட காலம் நடக்கின்ற அட்டூழியம். ஆனால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்கள் தமிழ்மக்களுடன் சேர்ந்து சிறுபான்மை இனத்தின் பலத்தை அதிகரிக்க வேண்டிய நேரத்தில், ஆட்சியாளர்களுடன் சேர்ந்து தமிழ்மக்களுக்கு எதிராகச் செயற்படுவது நியாயமானதா என்பதை முஸ்லிம் மக்களே சிந்திக்க வேண்டும். வடக்கையும் கிழக்கையும் இணைக்கமுடியாது என்று அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் கூறமுடியுமாக இருந்தால், இதைக் கூறுவதற்கு நீ யார் என்று கேட்கின்ற துணிவு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு உண்டா? என்பதே இன்றைய கேள்வி.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களின் பிறந்த தின நினைவு குறித்து வடமராட்சியில் நடந்த நிகழ்வொன்றில் கூட்டமைப் பால் அழைக்கப்பட்ட அமைச்சர் ஹக்கீம் உரையாற்றினார். அந்த உரையில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்ற கோரிக்கையை தமிழ் மக்கள் கேட்கக்கூடாது என ஹக்கீம் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

அவர் அவ்வாறு கூறியது சம்பந்தரது நிலைப்பாடு என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதனை உறுதி செய்வதாக அமைச்சர் ஹக்கீமின் தொடர் நடவடிக்கைகள் இருப்பதைக் காண முடிகின்றது.

ஆக, தமிழ்மக்களின் நிலைமை மிக மோசமாகி வருவதை உணரமுடிகின்றது.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் எங்களுக்கு எதுவுமில்லை; வடக்கு கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கு அறவே இடமில்லை; ஐ.நா.சபையின் முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்காக இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.

இந்நிலைமைகள் நடப்பதற்கு மூலகாரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த உண்மைகளின் மத்தியில் தமிழ்மக்களுக்கு அரசியல் தலைமை என்ற ஒன்று இல்லாமல் இருந்திருந்தால் கூட தமிழர்களுக்கு நல்லது நடப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

எதுவாயினும் தமிழ் அரசியல் தலைமை தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியது மட்டுமன்றி தமிழ் இன விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவதால் தமிழ் மக்களின் அடுத்த கட்டப் பணி புதிய அரசியல் தலைமைக்கான ஆயத்தமாகவே இருக்க வேண்டும். ஆணித்தரமான புதிய அரசியல் தலைமை தமிழர்களுக்கு உருவாகாமல் விட்டால் நிலைமை மிகவும் மோசமாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.


விதுரன்




# கஞ்ச மகா பிரபு

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

சின்ன சுத்தியலுடன் அவரும் அவனுடன் சேர்ந்து இரும்புத் துண்டை அடித்தார். களைப்பு அடைந்த அவன் சுத்தியலால் அடிப்பதை நிறுத்தினான். "ஐயா! என்னால் முடியவில்லை" என்றான். உழவனைப் பார்த்து அவர், "இன்னும் சிறிது நேரம் சுத்தியலால் அடித்தால் போதும். அழகான கலப்பை கிடைக்கும் உதவி செய்" என்றார். பெரிய சுத்தியலை எடுத்தான் உழவன். அதனால் இரும்புத் துண்டை ஓங்கி அடிக்கத் தொடங்கினான். களைப்பு அடைந்த அவனும் அடிப்பதை நிறுத்தினான். நீண்ட நேரம் சுத்தியலால் வலிமையாக அடித்ததால் இரும்புத் துண்டு சிறியதாகிவிட்டது. அதை மேலும் கீழும் புரட்டிப் பார்த்தார். உதட்டைப் பிதுக்கிய அவர், "என்ன இரும்புத் துண்டைக் கொண்டு வந்திருக்கிறாய். மட்டமான இரும்பு. இதில் கலப்பை செய்ய முடியாது. வேண்டுமானால் ஒரு கோடரி செய்து தருகிறேன். பல பரம்பரைக்குத் தொடர்ந்து அது உழைக்கும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார். "சரி கோடரியே செய்து தாருங்கள்" என்றான் அவன். மீண்டும் அந்த இரும்புத் துண்டை உலைக்களத்தில் போட்டுத் தீ மூட்டினார் அவர். பழுக்கக் காய்ந்த அந்த இரும்பை உதவியாளும் அவரும் சேர்ந்து சுத்தியலால் அடித்தனர். சிறிதுநேரம் சென்றது. அடிப்பதை நிறுத்திய அவர் இரும்புத் துண்டைப் பார்த்தார். மிகவும் சிறியதாக இருந்தது அது. "இதில் கோடரி செய்ய முடியாது. கூர்மையான அழகான சுத்தி செய்து தருகிறேன். இதுபோன்று வேலைப்பாடு அமைந்த சுத்தி யாரிடமும் இருக்க முடியாது. என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார். "ஏதாவது செய்யுங்கள்" என்று கடுப்புடன் சொன்னான் உழவன். பழையபடி அந்த இரும்பை நெருப்பில் போட்டு எடுத்து அவரும் உதவியாளும் அடித்தார்கள். அந்த இரும்பு மெல்லியதாக ஆகிவிட்டது. அதைப் பார்த்த அவர் "நீ கொண்டு வந்த இரும்பு மிக மோசம். அதில் ஒரு ஊசி தான் செய்ய முடியும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார். நடந்ததை எல்லாம் பார்த்து வெறுப்படைந்த உழவன், "எதையாவது செய்து தாருங்கள்" என்றான். அந்த இரும்புத் துண்டை சுத்தியலால் தட்டி ஊசி போல ஆக்கினார் ஜம்பு. மகிழ்ச்சியுடன் அதைக் கையில் எடுத்த அவர், "இந்த ஊசி சாதாரண ஊசி அல்ல. அருமையான ஊசி. நீண்டகாலம் உழைக்கும் ஊசி. இதைப்போன்ற அழகான ஊசியை இதுவரை யாரும் உருவாக்கி இருக்க முடியாது" என்று அதை உழவனிடம் தந்தார்.



"நான் இதற்காக அதிக கூலி கேட்கமாட்டேன். நான் உழைத்த உழைப்பு உனக்கே தெரியும். ஐந்து வெள்ளிப் பணம் கொடு. அது போதும்" என்றார். "ஒரு காசுகூடப் பெறாத ஊசி இது. பெரிய இரும்புத் துண்டை வீணாக்கியதோடு ஐந்து வெள்ளிப் பணமா கேட்கிறாய்? அந்தப் பணத்திற்கு பத்துப் புதிய கலப்பைகளையே வாங்க முடியுமே. என்னை ஏமாற்றவா நினைக்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று உள்ளத்திற்குள் கருவினான் அவன்.

"இப்பொழுது என்னிடம் வெள்ளிப் பணம் ஏதும் இல்லை. என் வீட்டில் ஏராளமாக நெல் உள்ளது. அங்கு வாருங்கள். பத்து வெள்ளிப் பணத்திற்கு உரிய நெல்லைத் தருகிறேன்" என்றான் அவன். மகிழ்ச்சி அடைந்த அவர், "நீ முன்னால் செல். நான் வண்டியுடன் பின்னால் வருகிறேன்" என்றார். உலைக்களத்தைப் பூட்டிவிட்டு வண்டியில் அமர்ந்தார் அவர். வண்டியோட்டி வண்டியை உழவனின் வீட்டின் முன் நிறுத்தினான். வண்டியோட்டியைப் பார்த்து "நான் இந்தக் காலி சாக்கு மூட்டைகளுடன் உள்ளே செல்கிறேன். நீ இங்கிருந்தபடியே உள்ளிருந்து வரும் பேச்சுக் குரலைக் கவனி. சாக்கு மூட்டைகளில் எல்லாம் நெல்லை நிரப்பும் அவன் "போதுமா' என்று கேட்பான். நீ உடனே "போதாது, நானும் வேலை செய்திருக்கிறேன். என் பங்கையும் அவரிடம் தாருங்கள் என்று குரல் கொடு" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அவரின் வருகைக்காக உழவனும் அவன் உறவினர்களும் கோபத்துடன் காத்திருந்தனர். அவர் உள்ளே நுழைந்ததும் எல்லாரும் அவரைப் பிடித்து இழுத்தனர். வலிமை கொண்ட அளவுக்கு அவரை உதைத்தனர். வலி பொறுக்க முடியாத அவர், "ஐயோ! என்னை விட்டு விடுங்கள் போதும்" என்று அலறினார். வெளியே இருந்த வண்டியோட்டி, "போதாது! போதாது! என் பங்கையும் சேர்த்து அவரிடம் கொடுங்கள்" என்று உரத்த குரலில் கத்தினான். "கேட்டீர்களா? இன்னும் இவனை உதையுங்கள்" என்றான் உழவன். எல்லாரும் சேர்ந்து அவரை மேலும் அடித்து உதைத்தனர். உடலெங்கும் காயத்துடன் பரிதாபமாக முனகியபடி வெளியே வந்தார் அவர். வண்டியோட்டி உதவி செய்யத் தடுமாறியபடி வண்டியில் அமர்ந்தார்.

"அய்யா! எங்கேய்யா. நம்ம மூட்டை. நான் போய் வாங்கி வரவா?" "டேய்! வண்டியை விடு. சீக்கிரம் இங்கிருந்து புறப்பட வேண்டும். கொல்லனாக இருந்தால் இப்படி அடி உதை கிடைக்கும் என்பதை அறியாமல் போனேனே! என் வாழ்நாளிலேயே இப்படி வேதனைப்பட்டது கிடையாது. இனி இந்த வேலையே வேண்டாம்" என்று அலறினார் செல்வந்தர்.

**பிள்ளைகளே! பார்த்தீர்களா? பொறாமை, பேராசை, கஞ்சத்தனம், கர்வம் இவையனைத்தும் உள்ள ஒருவரால் பிறருடைய தொழில் திறமையைப் பெற்றுக் கொள்ள முடியாது.**

## சிந்தனை துளிகள்

★ பகைவரையும் நண்பனாக கருது. பண்பாளனால்தான் உலகை வயப்படுத்த முடியும்.

★ ஆசைகள் வளர வளர அவனுடைய தேவைகள் வளர்ந்து கொண்டே போகும்.

★ எவ்வளவு குறைவாகப் பேச முடியுமோ அவ்வளவு குறைவாகப் பேசு.

★ மரண பயம் வாழ்நாளைக் குறைத்து விடும்.

★ கோபத்தில் வெளிவரும் வார்த்தைகள் அர்த்தமற்றவை.

★ அதிகம் வீணாகிய நாட்களில் நாம் சிரிக்காத நாட்கள்தான் அதிகம்.

★ கவனியுங்கள் உங்கள் எண்ணங்களைக் கவனியுங்கள். அவைகளே வார்த்தைகளாக வருகின்றன.

★ உங்கள் வார்த்தைகளைக் கவனியுங்கள். அவைகளே செயல்களாக ஆகின்றன.

★ உங்கள் செயல்களைக் கவனியுங்கள். அவைகளே பழக்கமாகின்றன.

★ உங்கள் பழக்கங்களைக் கவனியுங்கள். அவைகளே உங்கள் நடத்தையாகின்றன.

★ உங்கள் நடத்தையைக் கவனியுங்கள். அவைகளே உங்களுடைய எதிர்காலத்தை நிச்சயிக்கின்றன.

(தொடரும்)





**வியாசர் பதில்கள்**

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் தொடர்கிறதே?

**கரி — இணுவில்**

உங்கள் வீட்டில் சின்னம்மா தொல்லை யாமே?

அம்மம்மா. ஆமாம்மா ஆமா! நிம்மதியாப் படுத்தெழும்ப முடியல்ல, ஆசையா பாயாசம் குடுக்க முடியல்ல, சாப்பாட்டில பருப்புக்கறி ஊத்தி சாப்பிட முடியல்ல. எதைச்சாப்பிட்டா லும் ஏதோ பச்சயா மிதக்கிற மாதிரியே இருக்கு. என்னவாக இருக்கும் என்று என் நண்பனிடம் கூறினேன். சின்னம்மா என் கின்ற அந்த அன்பான உறவு முறைக்கே கேடுவைத்துவிட்டார்கள் என்று புலம்பினான்.

**வர்ணிகா — இருபாலை**

சின்னம்மாவின் தீர்ப்புப்பற்றி?

தர்மம் வெல்லும் என்பதற்கு நல்ல உதா ரணம்.

**ஜென்சிகா — இருபாலை**

வாழ்வின் அனுபவங்கள் பற்றி?

ஒரு பாரிய கல்லொன்றைப் பிளப்பதற்காக ஆங்காங்கே ஆப்புகளைச் செருகி அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அடி கொடுக் கிறார் ஒரு பெரியவர். பார்ப்பவர்களுக்கு இந்தப் பெரிய கல்லை இப்படி அடித்து எப்படி உடைக்க முடியும் என்ற கேள்வியே எழும். ஆனால் அந்தப் பாரிய கல் சொற்ப அடிகளி லேயே உடைந்து சிறுசிறு துண்டுகளாகி விடு கிறது. எங்கு எங்கு ஆப்பு வைத்து எப்படி அடித்தால் கல் பிளக்கும் என்பதுதான் அனு பவம். அதுபோல்தான் வாழ்க்கையும் தோல்வி யிலிருந்து மீளவும், சோதனைகளைத் தாண்ட வும் அவற்றில் மூழ்கி எழும்போதுதான் புரியும்.

**ஜனார்த்தனன் — மறவன்புலோ**

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இலங்கை தோற்றதன் காரணம்?

அனுபவமில்லாத,வெளிநாட்டுச் சூழலில் விளையாடி பழக்கமில்லாத வீரர்கள் இப்படி பல மன உளைச்சலுடன் தான் எம் வீரர்கள் களமிறங்கினார்கள். பந்துவீச்சு நன்றாக எடுபட்டது .ஆனால் துடுப்பாட்டத்தில் நாம் தவறு செய்துவிட்டோம்.அநேகமான வீரர்கள் ஒரே மாதிரியான பந்துவீச்சுக்கு பலமுறை ஆட்டமிழந்து சென்றார்கள். போட்டியைப் பார்த்தவர்கள் இதை அவதானித்திருப்பார்கள். ஒரே மாதிரியான தவறை மீண்டும் மீண்டும் விட்டது தான் தோல்விக்கு முக்கிய காரணம்.

**நித்திலன் — பண்டத்தரிப்பு**

சிங்கம்-3 பைரவாவை முறியடித்து விட்டதா?

நான்கு நாட்களில் சிங்கம் -3 நூறு கோடியை தொட்டுவிட்டது.

## குண்டுப் புரளி பற்றி?

**அருண் — யாழ்ப்பாணம்**

தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக வியாசரை நியமித்தால் எப்படியிருக்கும்?

அதற்கென்ன நான் தயார். நான் பதவியேற் கிறேன். சசிகலாதான் இப்போது உள்ளே இருக்கிறாரே. அதனால் எந்தப் பயமும் இல்லாமல் உண்ணலாம், உறங்கலாம், ஊழ லின்றி ஆட்சி செய்யலாம்.

**பாமி — மானிப்பாய்**

ஜல்லிக்கட்டில் நீங்கள் எத்தனை காளை களை அடக்கினீர்கள்?

போம்மா நீவேற. இங்க கட்டின மாட்டையே அடக்க முடியேல்ல . இதில கட்டாத மாட்ட அடக் கனுமாக்கும். ஜல்லிக்கட்டில் காளை அடக்கிற வனும் தாலிக்கட்டில் தன் மனைவியிடம் அடங்கித்தான் ஆக வேண்டும். இது எழுதா (தலை) விதி.

**குறுந்தகவல் (SMS)**

**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**

**021 567 1532**

**கருணாமூர்த்தி — கிளிநொச்சி**

தமிழன் பொறாமைக்காரர் என்று சுப்பிர மணியசுவாமி சொல்கிறாரே?

அது ஒரு முருகன் பெயர். அவன் ஒரு தமிழ் கடவுள் என்பதை மறந்து பேசிக்கொண்டிருக் கிறார்.

**வி.என்.குமார் — பருத்தித்துறை**

சாதனைக்கும் சோதனைக்கும் என்ன வித்தியாசம்?

சாதனைக்கு வேதனை மருந்து.
வேதனைக்கு சாதனை விருந்து.

**சயன் — யாழ்ப்பாணம்**

குண்டுப் புரளி பற்றி?

ஒரு படத்தில் கவுண்டமணி கூறுவார். அப்பா சாமி நடிப்பென்றால் நடிப்பு உலகமகா நடிப் புடா சாமி என்று. அந்தச் செய்தியைப் பார்க் கும் போது இந்தக் கவுண்டரின் வசனம்தான் நினைவுக்கு வந்தது. என்ன செய்ய எல்லாம் தமிழரின் தலைவிதியென்று தலையில் அடித்துக்கொள்வதைவிட வேறெதுவும் செய்துவிட முடியாது.

## ஜல்லிக்கட்டில் நீங்கள் எத்தனை காளைகளை அடக்கினீர்கள்?

**கோபிகா — முழங்காவில்**

ஏழையா? பணக்காரனா நல்லவர்கள்?

கொடுக்கும் பணக்காரனும் சிரிக்கும் ஏழை யும் அழகோ அழகு.

**பகி — கிளிநொச்சி**

கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் தொடர்கிறதே?

பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டது, சமாதா னம் மலர்ந்து விட்டது, இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் எவரும் அச்சமின்றி வாழ லாம் என்ற அறிவிப்புக்கள் வெறும் அறிவுப் புக்கள் தான். தம் சொந்த நிலத்தை மீட்க இன்று மக்கள் சக்தியாக வெளிவந்திருக்கி றார்கள். இந்த மக்கள் சக்தியை அடக்க எத் தனையோ முயற்சிகளை மேற்கொள்கிறார் கள். தன் சொந்த நிலத்தில் வாழக் கேட்கக் கூட தமிழனுக்கு உரிமை இல்லையா? ஆயுத மேந்தினான் அதில் தோற்கடிக்கப்பட்டான். இன்று அறவழிப் போராட்டத்தில் குதித்துள் ளான். நிச்சயம் இது வெற்றி பெறும் என்று திடம் கொள்வோம்.

**காஜ் — பருத்தித்துறை**

காதலைப் பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?

அந்தக் கறுமத்தைப் பற்றி என்ன சொல்வது. காதல் எனும் பாவத்தைச் செய்து திருமணம் எனும் சிறைக்குள் அடைக்கப்பட்டு இன்றுடன் ஐம்பது வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் விடுதலையும் கிடைக்கவில்லை, விமோசன மும் கிடைக்கவில்லை.

**துவா — கொக்குவில்**


மாகாண சபை அமைதியாகி விட்டதே?

அதுதான் எனக்கு பயங்கர சொக். பயந்து விட்டார்களா அல்லது மறந்து விட்டார்களா? ஏன் இந்த அமைதி, அடக்கம் என்பது புரியவில்லை. இருந்தாலும் அவதானமாக இருக்கவேண்டும். புலி பதுங்கினால் பாயும். நரி பதுங்கினால்...

**நிருஸ் — சங்கானை**

உறவுகள் எப்படிப்பட்டது?

உறவுகள் நூலினால் நெய்யப்பட்ட சேலை யைப் போன்றது. சின்னக் கிழியல் ஏற்பட்டு விட்டாலும் அன்பென்ற நூலினால் தைத்து இணைத்து விடவேண்டும். இல்லை யேல் அது மேலும் மேலும் விரிசலடைந்து விடும்.



# கவிதைக் கலசம்

## வலிமை

விரலின் பிடியை
மறந்த
உன் பார்வையின் பரப்பில்
தெரிவதென்னவோ
ஏற்கனவே
எழுதப்பட்ட
விதியின் வலிமைதானோ!

## புரிதல்

உன் பார்வையின்
புனிதம்
அறியுமா
இந்த
புரிதல் இல்லா பிரபஞ்சம்

## புதையல்

குளமீன்
ரகசியங்கள்
கடல் மீன்
அறியாதது போல்
உன் பார்வைக்குள்
புதையலாய்
கிடப்பது
கைப்பிடியும்
களவாடப்படும்
என்பதுவோ

தேன் நிலா
நல்லூர்

## பாதையில்

நீ பயணிக்கும்
பயணங்கள் எல்லாம்
உன் உயர்வுக்கு
உவந்தளித்த சுவடுகள்...!
அங்கே பள்ளங்களும்
பாதை தவறுதலுக்கான
உபாயங்களும் காத்திருக்கும்
அபாயங்களின் வரவேற்பு
உன் தியாகத்தை
சிறழிக்கத் துடிக்கும்...
பொய்மையும் புரளியும்
பசுமையாய்த் தெரியும்
செங்களிமிடக் காத்திருக்கும்
தங்கச் சரிகைகள்
மாயவலைகளின் மறு வடிவம்
பொறுமை பொக்கிஷமுனக்கு
உணர்வுகள் ஒற்றுமைப்பட்டாலே
உடலும் ஒத்துழைக்கும்
அவதானங்கள் கூட அலட்சியம் தரும்
கவனமாய் நட...
மரணம் மௌனத்தோடு
விழித்திருக்கும்...
ரசனையில்லா ரணங்களை –நீ
செய்ய நேரிடும்
மனிதநேயம் உன்னோடு
கூடிப்பிறந்த குழந்தை
நினைவிலிருந்து
முன்னேறு முடிவுகள் உன்னை
முழுமைப்படுத்தி முழு மனிதனாக்கும்
வெளித்தெரியாமல் போனாலும்
வெற்றியுடன் வாழ்வாங்கு வாழ்வாய்

த.பருத்திதாசன்

## வரையப்படாத சாசனம்

பாறை மோது மலைச்சாரல்
உலர்வாடை நாசி தழுவும்
தாழை மலர்வாசம்
பேழைக்குடில்ப் படலை திறந்தே
காலை கடலைப் பிளந்துண்டி
தேடிக் கொணர்ந்தே
உயிர் வளர்த்தார்
மாருதம் ஆழி பொருத
மாண்டே மற்றை விடியலில்
மீண்டுங் கடல் குதிப்பாரவர்க்கே
நீலக்கடல் நீளமும் சொந்தம்
நெற்றி வேர்வை உடனே
அவர் நேத்திரப் புனலும்
கலந்தே கடலினுக்குப்பிட்டார்
அவர்க்கே ஆழக்கடல்
அனைத்தும் சொந்தம்
சாசனம் தேவையில்லை
சத்தியமிஃதே

கோகர்ணன்
கருணையம்பதி

## அடுத்த தேர்தல் வரும்தானே!

எம் பாட்டன் முப்பாட்டன்
பரம்பரை பரம்பரையாய்
வாழ்ந்த நிலம்
எம்மை நாம் ஆண்ட இனம்

யார் வந்தார்
இடையில் யார் நுழைந்தார்
ஏப்பிடித்து பார் வளர்த்து
பெருமை கண்ட தேசமிது– இன்று
வீதியிலே நிற்கிறது

மண்மீட்கப் போரிட்டோம்
வல்லரசுகள் வதைத்து நசுக்கின
இப்போதும் தொடர்கிறோம்
அறவழியில்....

எம் நிலம் மீளும் வரை
நாம் தூங்கமாட்டோம்
பின்வாங்கமாட்டோம்
எவர் சமரசத்தையும்
ஏற்கமாட்டோம்

அவர்களை எதிர்க்க
எமக்குப் பயமில்லை
ஏனெனில்
எமக்கு முதுகில் புண்ணில்லை

வாக்குறுதிகளை விட
வாங்கியவற்றிற்காய்
வாய்மூடியிருக்கும் ஜீவன்களே
அடுத்த தேர்தல் வருமே

அப்போது தெரியும்
வாய்மூடியிருக்கும்
எங்களின் பலம்

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 341



## வழிப்பறிக் கொடுமை

பலமிழந்த முதியவர்
கையிருந்த பெட்டியை
பறித்துக் கொண்ட
பாவி நீ யாரோ
வேர்வை சிந்தி உழைத்த
பொருள் யாவும் பறிபோக
மனமுடைந்து வாடும்
மனிதர் நிலை பாரும்
கொள்ளையும் கொலையும்
நாட்டிலே இன்று
கோழைகள் செய்யும்
கொடுமைகள் காணீர்
கொள்கையுடையோர்
கொதித்தெழுந்து
தீமையகன்று நன்மை வளர
திடசங்கற்பம் பூணுவோம்
திரண்டெழுந்து வாரீர்

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி.

## அவதானம் தேவை நண்பா!

வழிப்பறிதான் மலிந்துவிட்ட
தொல்லையிது கண்டீர்
கிழட்டுப் பிசாசு ஒன்று முகம் காட்டாது
கிலிகொள்ள வைப்பதுவோ
கேடு கெட்ட செயலிதுவோ
சந்துபொந்து மூலை முடக்கெங்கும்
கண்டிப்பும் அவதானமும்
தேவை நண்பா

அபிதமாலிகா
சங்கானை

## பறிக்கமுடியும் உழைக்க முடியாதா?

உடலில் பலமிருக்க
உள்ளத்தில் பலமில்லையோ?
உழைப்பதற்கு
பறித்துண்டு வாழ துணிவிருக்கு
உழைத்துண்டு வாழ
துணிவில்லையோ?
வயோதிபரின் பொருள்
களவாடும்
வாலிபமே வெட்கமில்லையா? உனக்கு
பறிக்கத் தெரிந்த உனக்கு
உழைக்கத் தெரியாதா என்ன?
உழைத்து வாழ்ந்திடு ஊர்
போற்றும் உத்தமனாய்

எளிமைக்கவி றொபின்
புன்னாலைக்கட்டுவன்

## இடர்கொண்டு வழி

தவம் ஒன்றைப் பெற்று
வயோதிபம் முற்றி
தெருவில் தள்ளாடும் கிழவன்
செல்களை இழந்து
கண் பார்வை மங்கி
கலாசாரம் தழுவிய கிழம்
பணமதை பையில் சுமந்து
மறு சந்ததியின் வாழ்வை
கனவாக எண்ணியலையும்
ஏழைக்கிழத்தின் உழைப்பை
திருடன் நயப்பாது உகந்ததோ!

சு.சுருதீகா
யா/வ.ம.க.

## அறியாமை

பறி கொடுத்தவர் பதறித் தவிக்க
எடுத்தவர் சடுதியாய்
எகிறி ஓடி மறைவதும்
அடிக்கடி நடக்கும் காரியமாகிவிட்டது
பிடிபடுவதைவிட மிகுதிப் பொருள் தொகை
போதைப்பொருட்கள்
விலையாகிப் போவதால்
வழிப்பறி போன்றவையும்
கலையாகிப் பெருகிவிட்டது
நெறிமுறைகள் மாறி
வெறியாகி வளர்வதற்கு
வழிகாட்டல் இன்மையும்
அறியாமையும் காரணம்
பின் விளைவுகள் பயங்கரம்

க.நாகராசா, நுணாவில்

## உறிஞ்சிகள் கவனம்!

இயற்கையை உறிஞ்சி, உறிஞ்சி
இயற்கையை வஞ்சித்து, வஞ்சித்து
இயற்கையை துஷ்பிரயோகம்
செய்ய, செய்ய
பணமே உறிஞ்சிப் பொருளாகி
உயிராகிவிட
பண்பாடுகள், விழுமியங்கள்
எஞ்சாது போகிறது!
முதியோர்களை மதியாத
சில இளையோரால்
கதியற்றவர்களாகி
நீக்கதியாகிவிடும் நிலை
காட்சிப்படுத்தப்பட்டுள்ளது
முதியோர்கள் தம் பாச உறவுகளின்
வதிவிடங்களில் தங்கி
இறுதிக்காலம் வரை
வாழ்கின்ற முதியோர்களுக்கு
உறவுகளே பாசமும்
கவசமுமாகிவிடுகின்றனர்


சி.சுகிர்தமலர், உரும்பிராய்

## விழிப்போடிருங்கள்

பாதையிலோ வண்டியிலோ
செல்லும்போது நாம்
கையிலே கொண்டு போகும்
பையிலே கவனம் வேண்டும்
எந்நேரமும் திருடன் வந்து
அபகரித்துப் போகலாம்
நாம் சேமித்த பொருட்களை
உழைத்து வாழத் தெரியாத
ஊதாரிகளிடம் இழந்திடாது
விழிப்போடிருந்தால்
வழிப்பறிப்பைத் தடுத்திடலாம்
நம்கையே நமக்குதவி

துரை, தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல் –342



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 22.02.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பயமுறுத்தும் நாய்கள்

"குரைக்கிற நாய் கடிக்காது" என்று பழமொழி சொன்னாலும், நாய்னா பயப்படுற கோஷ்டி இங்கே அதிகம். குரைக்கிறதை விடுங்க. இதோ... இந்த நாய்களெல்லாம் முறைச்சாலே முழி பிதுங்குமாம். அந்தளவுக்குப் பயமுறுத்தும் நாய்களில் சில...

## American Bulldog




பார்க்கவே படுபயங்கரமாக இருக்கும் தெற்கு அமெரிக்காவைச் சேர்ந்த நாய் இனங்களுள் ஒன்றுதான் "அமெரிக்கன் புல்டோக்". டென்மார்க், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இந்த வகை நாய்களை வளர்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஃபேமஸ் கார்ட்டூனான "டொம் அண்ட் ஜெர்ரியில்" இடம்பெற்றிருக்கும் "ஸ்பைக்" மற்றும் "டைக்" இந்த இன நாய்களை மையமாக வைத்து சித்திரிக்கப்பட்ட கதாபாத்திரங்கள்தாம். ஆனால், அதில் காட்டுவதுபோல் காமெடி டாக் இல்லை இது. இந்த வகை நாய்களிடம் கொஞ்சம் உஷாராகத் தான் இருக்க வேண்டும்.

## Bandog



இந்த நாய்க்குச் சொந்த ஊர் "இங்கிலாந்து". பழைமையான இனத்தைச் சேர்ந்த நாய்களுள் ஒன்று தான் "பான்டாக்". நாட்டின் பல்வேறு இடங்களில் இந்த இன நாய்களை வளர்க்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாய் வளர்க்கும் சொந்தக்காரரைத் தவிர யாருக்கும் அடங்காது. இரவு நேரத்தில் ஏதேனும் இடத்தைப் பாதுகாப்பதற்காக இந்த இன நாய்கள் வளர்க்கப்பட்டு வந்தன. வாலை ஆட்டுகிறது என்பதற்காக அருகே சென்றால், ஆயுசு முடிந்துவிடும். ஓங்கிக் கடித்தால் ஒன்றரை கிலோ காலியாம்.


## Dogo Argentino



பார்த்தால் வெகுளியாக, அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் நாய் வகைதான் "டோகோ ஆர்ஜென்டினோ". பால் வடியும் முகத்தை நம்பி ஏமாந்துவிடக் கூடாது. இந்த வகை நாய்களை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தி வந்தனர். இதன் வம்சாவளியாக கிரேட் டேன், பொக்ஸர், பொயின்டர் என்ற பல நாய் வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம்.


'பாட்ஷா' படத்தில் சுப்பர் ஸ்டார் ரஜினி அருகில் ஒரு காட்சியில் இடம்பெற்றிருக்கும் நாய்தான் .

## Wolfdog



சாம்பல் நிறத்தில், பார்க்க ஓநாய் போல் தோற்றம் கொண்டிருக்கும் உல்ஃப்டாகின் சொந்த ஊர் அமெரிக்கா. இதில் "ஜெர்மன் ஷெப்பர்ட்", "சைபீரியன் ஹஸ்கி", "அலாஸ்கன் மல்ம்யூட்ஸ்" எனப் பலவகைகள் உள்ளன. ஓநாய் எப்படி ஊளையிடுமோ அதே போல் ஊளையிடுவது இதனுடைய தனித்துவ குணங்களில் ஒன்று. இதன் வகைகளுள் ஒன்றான சைபீரியன் ஹஸ்கி பனிப் பிரதேசங்களில் வண்டியிழுக்கப் பயன்படும். பார்க்க அழகாக இருக்கிறது என்று அருகே சென்று கொஞ்சினால், உயிர்ப் பிச்சை கேட்டுக் கெஞ்சும்படி ஆகிவிடும் மக்களே!

## Boerboel



திடமான உடற்கட்டைக் கொண்டுள்ள இந்தப் பயலின் சொந்த ஊர் "தென் ஆபிரிக்கா". பார்க்க அப்பாவி போல் முகம் இருந்தாலும் ஆபத்துமிகுந்த நாய் வகைகளுள் ஒன்றுதான் "போயர்போயல்". பிரான்ஸ், மலேசியா, மொரீஷியஸ், பெர்முடா போன்ற நாடுகளில் இதை வளர்க்கத் தடை விதித்துள்ளனர். இதற்கு முறையாகப் பயிற்சியளித்தால் ஊரோடு ஒத்துப்போகும் தன்மையுடையது. இதற்குப் பிடிக்காத முறையில் சீண்ட நினைத்தால், வேரோடு செத்துதான் போக வேண்டும்.



## Neapolitan Mastiff

கன்றுக்குட்டி போல் தோற்றம் கொண்டிருக்கும் இன வகை நாய்தான் "நீயாபோலிடன் மாஸ்டிஃப்". முகம் சாதுவாக உள்ளதால், இதைச் சாதாரணமாக எடைபோட்டு விடக் கூடாது.

வளர்ந்து பருவத்தை எட்டினால் இதனுடைய எடை 60 முதல் 70 கிலோ வரை இருக்கும். தனியார் வீட்டைப் பாதுகாப்பதற்காக வளர்க்கப்பட்டு வந்த நாயிடம் தனியாக சிக்கினால் சின்னா பின்னம் தான்.



## Pit Bull

இதன் உருவம் மிக மிகச் சிறியது ஆனால், பாய்ந்தால் தொண்டையைக் கவ்வும் அளவுக்கு மிகவும் வலிமை வாய்ந்த நாய்.

இதன் சொந்த ஊர் "அமெரிக்கா". இந்த 'பிட்புல்' வகை நாய்களை பொலிஸ், இராணுவம் போன்ற இடங்களில் பயன்படுத்தி வந்தனர்.

இதனிடம் நட்பாகப் பழகினால் உயிரைக்கூடக் கொடுக்கும் அளவுக்கு மிகவும் பாசமான நாய்.

இருந்தாலும் சில நாடுகளில் இந்த வகை நாய்களுக்குத் தடை விதித்துள்ளனர்.

# ஆட்டம் காணும் அ.தி.

ஆணிவேரை இழந்த மரம் போல அ.தி.மு.க தொண்டர்கள் தற்போது தத்தளிக்கிறார்கள். எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட, ஒன்றரை கோடி தொண்டர்களைக் கொண்ட கட்சியின் எதிர்காலம், நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு பன்னீர்செல்வம் - சசிகலா இடையே அதிகாரச் சண்டையில் சிக்கி தவித்துக் கொண்டு இருக்கிறது. ஓட்டுநர் இல்லாத ரயிலுக்கும், பஸ்ஸுக்கும் மாற்று ஓட்டுநர் கிடைப்பார்கள்... ஆனால் இன்ஜினே இல்லாவிட்டால்..? அதுபோலத்தான், ஜெயலலிதா மறைவால், தலைமை இல்லாத நிலையில், திக்குத் தெரியாமல் அ.தி.மு.க தொண்டர்கள் தவிக்கிறார்கள்.

அரசியல் வாரிசும், அ.தி.மு.கவும்!

அ.தி.மு.கவை எம்.ஜி.ஆர் தொடங்கி, மக்கள் ஆதரவோடு அரியணை ஏறினாலும் தனக்குப் பின்னால் யாரையும் தனது அரசியல் வாரிசாக அடையாளப்படுத்தாமல் அவர் மறைந்தார். அதே நிலைதான் மீண்டும் ஒருமுறை அந்தக் கட்சிக்கு ஏற்பட்டு, மறுபடியும் தொண்டர்களுக்குச் சோதனையை உருவாக்கியுள்ளது. எம்.ஜி. ஆரின் மறைவுக்குப் பின், அ.தி.மு.கவின் அடுத்த சக்தியாக ஜெய்லலிதா உருவெடுத்தார். இதை எம்.ஜி.ஆர் கூட நினைத்திருக்க மாட்டார். அ.தி.மு.கவை எஃகு கோட்டையாக உருவாக்கி, இராணுவக் கட்டுப்பாட்டுடன் ஜெயலலிதா வைத்திருந்த போதிலும், அவரும் எம்.ஜி. ஆரைப் போலவே தனக்குப் பின் கட்சியை யார் இயக்குவார்கள் என்ற அடையாளத்தைக் காட்டாமலே மரணம் அடைந்து விட்டார். அ.தி.மு.க வில் இரண்டாம் கட்ட தலைவர் என்ற சொல்லே இருக்கக் கூடாது. ஒரே கட்சி, ஒரே தலைமை என்ற கொள்கையோடு ஜெயலலிதாவின் காலம் முடிந்து போனது. இன்று அ.தி. மு.க படும் பாட்டைப் பார்க்கும்போது, ஜெயலலிதாவின் முடிவு எவ் வளவு தவறானது என எண் ணத்தோன்றுகிறது. இதில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் என்னவென்றால், அ.தி.மு.க வின் சக்திவாய்ந்த தலைவர் களாக விளங்கிய எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா இருவ ருக்குமே வாரிசுகள் இல்லா மல் போய்விட்டது. இது, அந்தக் கட்சியின் துர்ப்பாக்கியம் என்று சொல்லலாம்.

நிழல் அரசியல் !


அ.தி.மு.கவின் இன்றைய குழப்பங்களுக்கு முக்கிய காரணமே மன்னார்குடியைப் பூர்வீகமாகக் கொண்ட சசிகலா குடும்பத்தினரின் ஆதிக்கம் தான். அந்தக் குடும்பத்திற்கு பாதை வகுத்துக் கொடுத்தது ஜெயலலிதாதான். ஜனநாயக நாட்டில், உட்கட்சி ஜனநாயகமே இல்லாத ஒரு அரசியல் கட்சி என்றால் அது அ.தி.மு.க தான் என்று அந்தக் கட்சியினரை சொல்ல வைத்தவர் ஜெயலலிதா. தன் கண் அசை வில்தான் அனைத்தும் நடக்க வேண்டும்என்று நினைத்த அவர், தன் முதுகுக்குப் பின்னால் நடந்த திரைமறைவு வேலைகளைக் கவனிக்கத் தவறிவிட்டார். இதனால், சத்தமில்லாமல் மன்னார்குடி குடும்பம் அ.தி.மு.கவில் நிழல் அரசியல் செய்து, தமிழகத்தின் ஆட்சியை ஆட்டுவித்ததை ஜெயலலிதாவால் தடுக்க முடியாமல் போய்விட்டது. ஜெயலலிதாவுக்கு உதவியாக அவருடனேயே இருந்து, அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கும்போதுதான், அதை தொண்டர்களால் ஜீரணிக்க முடியவில்லை. நிழல், நிஜமாகும் போது அதை ஏற்றுக்கொள்வதற்கு அ.தி.மு.கவில் ஒரு பிரிவினர் தயக்கம் காட்டுகின்றனர். இது ஆச்சர்யத்தைத் தருகிறது.



பேராசை

சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் மீதான வெறுப்பு, கீழ்மட்டத் தொண்டர்களின் அளவிலும், பொதுமக்கள் மத்தியிலும் ஏற்பட்டு அது ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாக மாறியது எதார்த்தம் தான். எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதாவின் உணர்வுபூர்வமான தொண்டர்கள், பன்னீர்செல்வத்துக்கு போஸ்டர் ஒட்டிக்கொண்டு இருக்கிறார்கள். சசிகலாவின் பலம் அவரது குடும்பம், எம்.எல். ஏக்கள், நிர்வாகிகள். அவரது பலவீனமும் இவர்கள்தான். பலராலும் நிராகரிக்கப்படும் சசிகலாவுக்கு, கட்சி நிர்வாகிகளும் எம்.எல்.ஏக்களும் ஏன் ஆதரவு கொடுக்கிறார்கள்? இவர்கள் அனைவரும் சுயலாபத்துக்காக தனக்கு என்ன கிடைக்கும் என்று கணக்கு போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சசிகலா அல்லது அவரது குடும்பத்தினரின் தயவால் பொறுப்புக்கு வந்தவர்கள். அதையும் தாண்டி, சசிகலாவிடம் பண பலமும் இருக்கிறது. இந்தக் காரணங்களால் அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் இன்னும் நான்கு ஆண்டுகள் அதிகாரம், பணபலம், இரட்டை இலை இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு காலத்தை தள்ளி விடலாம் என்று நினைக்கிறார்கள். பன்னீர்செல்வத்தை தூக்கி எறிந்து அவமானப்படுத்தி,



தான் முதல மைச்சர் ஆக வேண்டும்
சசிகலா பேரா சைப்படவில்லை என்
இப்போதும் சசிகலா வின் காலடியில் அ.
கிடந்தி ருக்கும். அவரு டைய பேரா
பேரிடியாகி விட்டது.

கவர்ச்சி முகம் இல்லை!

அ.தி.மு.கவின் அடி நாதமே அந்தக் க
தலைவர்களாக இருந்த எம்.ஜி.ஆர், ஜெய
இருவருமே தொண்டர்கள் மற்றும் பொது
டையே சினிமா மூலம் பிரபலமானவ
என்பதுடன் கவர்ச்சிகர தோற்றத்தைக் கொ
ந்தார்கள் என்பதுதான். இந்தக் கவர்ச்சி
தொண்டர்கள் முதல் பாமரமக்கள் வரை அ
த்து தரப்பினரையும் அவர்கள் பக்கம்
செய்தது. அரசியல் சாணக்கியராக விள
கருணா நிதியை, எம்.ஜி.ஆர் மறையும்
ஆட்சிக் கட்டிலில் ஏறவிடாமல் செய்தது அ
முக வசீகரம்தான். அதேபோல், 201
ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.
வெற்றிபெற்றதோடு அல்லாமல், 32 ஆண்
க்கு பிறகு ஆண்ட கட்சியே மீண்டும் ஆ
வந்து வரலாறு படைத்தற்கும் "ஜெய
என்ற கவர்ச்சி முகம்தான் காரணம். ஆ
ஜெயலலிதா மறைவுக்குப் பின் அ.தி
பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட ச
ஜெயலலிதாவின் பிம்பம் தனக்கும் கிடை
என்று தப்புக்கணக்கு போட்டார். நடை, உ
பாவனை என்று அனைத்தையும் ஜெய
வைப் போன்றே மாறினார். ஆனால்,
எதிர்பார்த்ததற்கு மாறாக, பெண்களே அ
ஏற்றுக்கொள்ளவில்லை. அ.தி.மு.கவை
படுத்த கவர்ச்சியான முகம் தேவை என்
உணர்ந்து, கட்சியில் இருந்து ஓரங்க
நிர்வாகிகள் ஜெயலலிதாவின் அண்ணன்
தீபாவை முன்னிறுத்தி, அவரை வற்புறுத்
னர். அதுவும் கொஞ்சம் "ஏக்அவுட்"ஆனது
தீபாவுக்கு மன்னார்குடி குடும்பத்தை எதிர்த்
சியல் செய்யும் பக்குவம் சற்று குறைவ

# ...மு.கவின் எதிர்காலம்!



...ண்டும் என்று
...ல என் றால்
...ில் அ.தி.மு.க
...பேரா சையே

...ந்தக் கட்சியின்
...ர், ஜெயலலிதா
... பொதுமக்களி
...மானவர்கள்
...க் கொண்டிரு
...கவர்ச்சிதான்,
...வரை அனை
...க்கம் ஈர்க்கச்
...க விளங்கிய
...றையும் வரை
...ய்தது அவரது
..., 2016ஆம்
...ில் அ.தி.மு.க
...2 ஆண்டுகளு
...டும் ஆட்சிக்கு
...ஜெயலலிதா"
...ம். ஆனால்,
... அ.தி.மு.க
...பட்ட சசிகலா,
... கிடைக்கும்
...டை, உடை,
... ஜெயலலிதா
...னால், சசிகலா
...ளே அவரை
...கவை கட்டுப்
...வ என்பதை
...ங்கடப்பட்ட
...ண்ணன் மகள்
...பறுத்தி வந்த
...ளது. ஆனால்,
... எதிர்த்து அர
...றைவாகவே

இருந் தது. இந்த நிலையில் தான், பன்னீர்செல்வத்தின் விஸ் வரூபம் மற்றும் அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த அடுத் தடுத்த அரசியல் நகர்வுகள் தீபாவை பன்னீர் செல்வத் தின் பக்கம் கொண்டு வந்து சேர்த்துள்ளது. இருவரும் இணைந்து செயல்படுவோம் என்று தீபா அறிவித்தார்.

**கட்சிக்காரர்களை நம்பவில்லை!**

ஓ.பன்னீர்செல்வத்தை முதல்வர் பதவியில் இருந்து கீழிறக்க, "பொதுச் செயலாளர் பதவியும், முதல்வர் பதவியும் ஒருவரிடமே இருக்க வேண்டும். அப்போது தான் கட்சியையும் ஆட்சியையும் ஒரு சேர திறம்பட வழிநடத்த முடியும்" என்று மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை, அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், முன்னாள் அமைச்சர் பா. வளர்மதி உள்ளிட்டோர் "கோரஸ்" பாடிக்கொண்டு இருந்தனர். ஆனால், சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பால் சசிகலாவின் முதலமைச்சர் கனவுதகர்ந்த அடுத்தகணமே, முதல்வர் வேட்பாளராக அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை தேர்வு செய்தார் சசிகலா. அடுத்த அதிரடியாக ஜெயல லிதா வால் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட தனது இரத்த உறவுகளான டி.டி.வி. தின கரன், டாக்டர் வெங்கடேஷ் ஆகியோரையும் கட்சிக்குள் கொண்டு வந்தார். 4 ஆண்டுகள் ஜெயிலில் இருக்க வேண்டி உள்ளதால், எத்தனையோ மூத்த தலைவர்கள் கட்சியில் இருக்கையில், அவர்கள் யாரையும் நம்பாமல் டி.டி.வி. தினகரனுக்கு துணைப் பொதுச்செயலாளர் பதவியை கொடுத்து, கட்சியை நிர்வகிக்க அனுமதி கொடுத்து இருக்கிறார். கட்சியையும், சொத்தையும் காப்பாற்ற இரத்த உறவையே உட்கார வைத்து விட்டு ஜெயிலுக்குப் போய் விட்டார் சசிகலா.

**ஆட்சி அதிகாரம்!**

ஜெயலலிதா இல்லாவிட்டாலும் ஆட்சி அதிகாரம் மற்றும் கோடிக்கணக்கான பணத்தை வைத்துக்கொண்டு தங்களை நிலைநாட்டிக் கொள்ள முடியும் என்று சசிகலா நினைக்கிறார். தொண்டர்களின் கொதிப்பும், பொதுமக்களின் அதிருப்தியும் காலப்போக்கில் காணாமல் போய்விடும் என்று சசிகலா தரப்பினர் நினைக்கிறார்கள். ஆனால், சசிகலா விடயத்தில் தோன்றி இருப்பது வெறுப்பு அரசியல் அல்ல. ஜெயலலிதா மீது இருந்த அபரிமிதமான பற்றுதான். கடந்த ஆண்டு செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை, 75 நாட்கள் அப்பலோ வில் ஜெய லலிதாவுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள இன்னமும் அ.தி.மு.க. தொண்டர்களும் பொதுமக்களும் உணர்ச்சிபூர்வமாக துடித்துக் கொண்டிருக்கிறார்கள். 33 ஆண்டுகள் கூடவே இருந்ததாகத் தெரிவிக்கும் சசிகலா, ஜெயலலிதாவை காப்பாற்ற வில்லையே, அவருக்கு என்ன நடந்ததோ என்கிற குமுறல் கள்தான் அனைவரது மத்தியிலும் சசிகலாவுக்கு எதிரான வெறுப்பாக மாறியது. அது, தற்போது கோபமாக கொப்பளித்துக் கொண்டு இருக்கிறது. இதன் வெளிப்பாடே, சசிகலா மீது புகார் தெரிவித்து வெளி யேறிய பன்னீர்செல்வத்துக்கு பொதுமக்கள் மற்றும் அ.தி.மு.க தொண்டர்களின் ஆதரவாக மாறியுள்ளது.




**உடைந்தது ஒட்டுமா?**

தமிழக அரசியல் கட்சிகளில் அதிக வாக்குவிகிதத்தை கொண்ட கட்சியாக அ.தி.மு.க இதுவரை இருந்தது. இப்போது அந்த இடத்தை அ.தி.மு.க கொஞ்சம்கொஞ்சமாக இழக்கத் தொடங்கியுள்ளது. அ.தி. மு.கவின் இரண்டு அணிகளையும் ஒட்டவைக்க சிலர் முயன்று இருக்கிறார்கள். பன்னீர்செல்வம் தரப்பில் "சசிகலா குடும்பத்தை முற்றிலும் ஒழித்தால்தான் அது சாத்தியம்" என்று சொல்ல, அதற்கு வாய்ப்பில்லை என்று சொல்லி விட்டார்கள் சசிகலா அணியினர். தன்னை அவமானப்படுத்தியவர்களோடு மீண்டும் இணையும் மனநிலை பன்னீருக்கு இல்லை. சசிகலா பொதுச்செயலாளர் பதவியில் தொடர்ந்தால் பன்னீர் தலைமையில் புதிய கட்சியோ, அணியோ தொடங்குவதை தவிர்க்க முடியாது. தீபாவின் வருகையால் கிராமப்புற பெண்களிடையே ஓ.பிஎஸ் அணிக்கு செல்வாக்கு அதிகரித்துள்ளது. இப்போது சசிகலா பக்கம் நிற்கும் அ.தி. மு.க எம்.எல்.ஏக்கள் எப்போது வேண்டுமானாலும் அணி மாறலாம். அந்த சூழ்நிலையில் ஆட்சிக்கே பங்கம் வந்து விடும் வாய்ப்பு உள்ளது. அந்த நிலை ஏற்பட்டால் 1989 ஆம் ஆண்டுபோல் அ.தி.மு. கவை ஒட்டவைக்கும் முயற்சிகள் நடைபெறலாம். டி.டி.வி தினகரன் வருகை இதற்கு கைகொடுக்கலாம் என்று மன்னார்குடி டீம் கணக்குப் போடுகிறது.

**சோர்ந்து போன தொண்டன்!**

அ.தி.மு.கவின் பலமான அடிமட்ட தொண்டர்கள் நிலை தான் இப்போது பரிதாபமாக இருக்கிறது. யார் பின்னால் செல்வது? யாருடைய கட்டுப்பாட்டில் கட்சி உள்ளது என்று புரியாமல் கரைவேட்டியோடு புலம்பிக் கொண்டிருக்கிறான். நிர்வாகிகளோ யார் பக்கம் சென்றால் பதவி கிடைக்கும் என்று கணக்கு போடுகிறார்கள். சசிகலாவின் பொதுச்செயலாளர் பதவிக்கே சிக்கலை உண்டாக்கும் நடவடிக் கையில் இப்போது பன்னீர் தரப்பு இறங்கியுள்ளது. பொதுச் செயலாளர் பதவிக்கு சிக்கல் வந்தால் அவரால் நீக்கம் செய்யப்பட்டது, சேர்க்கப்பட்டது எதுவும் செல்லாக்காசாகி விடும். அ.தி.மு.க-வின் அவைத் தலைவர் மதுசூதனன், பன்னீருடன் இருப்பதால் கட்சியும் சின்னமும் இவர்கள் வசம் வந்து விடும் வாய்ப்பும் உள்ளது. எது நடக்கும் என்ற எதிர்பார்ப்பில்தான் அ.தி.மு.க தொண்டன் மட்டும் அல்ல தி.மு.க உள்ளிட்ட கட்சிகளும் கணக்கு போட்டுக் கொண்டுள்ளன. பொறுத்திருந்து பார்ப்போம்...

சிறுகதை



# உப்புத் தின்றவன்

வன்னிப் பெருநிலம்! வந்தாரை வாழ வைக்கும் வளம் இதன் பலம். கொடுக்கக் கொடுக்கக் குறையாத ஒரு அட்சய பாத்திரம். காலபோகம், சிறுபோகம் என இரண்டு போக வெள்ளாண்மை, வாழை, கமுகு, பப்பாசி, எலுமிச்சை அத்தனையும் ஏராளம். பால் தயிர் வகையறாக்கள் தாராளம். வேண்டிய காய்கறி வகைகள், கடல் மீன், குளமீன், இறைச்சி வகைகள். சொல்லப்போனால் இது ஒரு பூலோகத்துச் சொர்க்காபுரி.

வல்லிபுரம், இந்த வள்ளிபுனமென்னும் கிராமத்தில் முதல் தர விவசாயி. இரண்டு தடவைகள் விவசாய மன்னன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்ட மாபெரும் உழைப்பாளி. பூர்வீகம் யாழ்ப்பாணம். எனினும் உழைப்பையே நோக்காகக் கொண்டு இந்த மண்ணையே சொந்த மண்ணாகக் கொண்டு நீண்ட காலமாகத் தனது குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றார். குடும்பமொன்றும் அப்படி பெரிதல்ல. மனைவி மகேஸ்வரி, ஆஸ்திக்கும் ஆசைக்கும் பொதுவாக ஒரேயொரு மகன். பெயர் கௌதமன்.

கௌதமனுக்கு இந்த ஆடி கழிந்தால் இருபத்துமூன்று வயது. மெத்தப்படித்துக் கிழித்த மேதாவியல்ல இந்தக் கௌதமன். சாதாரண தரத்தில் சாதாரண சித்திகளைப் பெற்ற ஒரு சாதாரணன். இந்த இலட்சியத்தில் உத்தியோகமாவது... கத்தரிக்காயாவது...! தந்தையின் தொழில் தனயனுக்கு. தோளில் வைத்தான் மண்வெட்டியை. விவசாயமே தொழிலாகிவிட்டது. கௌதமனுக்கு ஒரு திருமணத்தைச் செய்து வைத்து அதைக் கண்குளிரப் பார்த்து விட, பெற்ற நெஞ்சங்கள் ஆசைப்பட்டன. ஆனால் கட்ட வேண்டிய கௌதமன் அடைந்தால் மகாதேவி, இல்லையேல் மரணதேவி என்னும் வில்லன் வீரப்பாவின் வார்த்தைகளை "ரீமேக்" செய்து அடைந்தால் அமுதா இல்லையேல் திருமணமே வேண்டாமென அடம்பிடித்தான். அவன் வழியிலிருந்து அவனை மாற்ற முடியாது. ஒரு தடவை சொன்னால் நூறு தடவைகள் சொன்னது மாதிரி... விறைத்த மண்டையன்.

அமுதாவின் குடும்பமும் இவர்களைப் போலவே யாழ்ப்பாணத்தைச் சொந்த மண்ணாகக் கொண்டவர்கள். உழைப்புத்தேடி வள்ளிபுனம் வந்து நீண்டகாலமாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். தந்தை வேலாயுதம் புடையன் கடித்து யமனுடன் நடையைக் கட்டி பத்து வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. அமுதாவுக்கு தாய் இந்திராணி. கூடவே பருவமடைந்த பதினைந்து வயதுத் தங்கை தேன்மொழி. பன்னிரெண்டு வயதில் ஒரு தம்பி சுமன். சிறிய குடும்பம்தான். வருமானமும் சிறிதாகவேயிருந்தது. குடும்பத்திற்காக உழைக்க வேண்டிய பொறுப்பு கைம்பெண் இந்திராணியின் தலையில். கூடவே அமுதாவும் கை கொடுத்தாள்.

கௌதமன், அமுதாவின் வீடுகள் அருக்கருகேதான். அக்கம் பக்கத்து வாழ்க்கையில் அதிக அந்நியோன்னியம் காணப்பட்டது. இருவருமே யாழ்ப்பாணத்தார் என்பது மேலும் நெருக்கத்தைக் கொடுத்தது. என்னதானிருந்தாலும் அக்கம் பக்கத்தில் நெருப்பும் பஞ்சும்! ஆகவே ஆகாது. கௌதமனுக்கு இருபத்துமூன்று. அமுதாவுக்கு இந்த ஆனி பத்தொன்பது ஆரம்பமாகப் போகின்றது. தோதான வயதுகள்.

கௌதமனின் நெஞ்சத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இடம்பிடித்து இப்போது நிரந்தரமாகவே மஞ்சத்தை அமைத்துவிட்ட அமுதாவை அவனால் மறக்க முடியவில்லை. காதல் தீ கச்சிதமாகப் பற்றிக் கொண்டது. இனி அணைக்க முடியாது. அப்படியொரு இறுக்கம்.

கௌதமன் இருபத்துமூன்று வயதில் இளமைப் பொலிவுடனிருந்தான். கறுப்பு நிற மேனியில் ஒரு ஜல்லிக்கட்டுக் காளையைப் போல் ஆஜானுபாகுவான அவனின் மிடுக்கான தோற்றமும் பண்பான பழக்கவழக்கங்களும் அமுதாவை வெகுவாகக் கவர்ந்திருந்தன. கறுப்புத்தான் எனக்குப் பிடித்த கலர் என்றாள். அமுதாவும் ஒரு பேரழகியில்லாவிட்டாலும் ஓர் அழகியாகவே தெரிந்தாள். இவர்களின் காதலுக்கு இருவீட்டாருமே பச்சைக்கொடி காட்டியது என்னவோ உண்மைதான். இருந்தும் திருமணத்தை முந்திக் கொண்டு வந்தது அந்தப் பாழாய்ப் போன போர். எங்கேயோவிருந்து சீறிவந்த எறிகணையின் துகளொன்று அமுதாவின் கணுக்காலில் பாய்ந்து தங்கியது. அது மட்டுமா புலனாய்வுகள், புனர்வாழ்வு... சொல்லொணாத் துயரங்கள். எப்படியோ ஒருவாறு மீண்டும் யாழ்ப்பாணம் வந்தாயிற்று. வன்னிக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கடவுள் புண்ணியத்தால் வேறு சேதாரங்களெதுவுமின்றி இரு குடும்பங்களும் இப்போது சொந்த மண்ணில்,

" உந்தக் கதையை மட்டும் விடுங்கோ. அமுதா இப்ப வடிவாய் நடக்கமாட்டாத சொத்தி. உந்தச் சொத்தியள் குருடுகளைக் கட்டிப்போட்டு நாளைக்கு என்ரை மனிசியெண்டு வெளியில கூட்டிக்கொண்டு போகஏலுமே! என்ரை வடிவுக்குச் சொத்தியைச் செய்யேலுமே! உது சரி வராது"

"கௌதமனின் கர்ணகொடூரமான இவ்வார்த்தைகளை இனியும் கேட்டுவிடத் திராணியற்ற நிலையில் இந்திராணி ஏமாற்றத்துடன் வீடு திரும்பினாள்" .

படைத்தவன் படியளப்பான் என்னும் நம்பிக்கையில் காலத்தை ஓட்டினர். அமுதா துவண்டு போய் விட்டாள். ஆனால் அவளைப் படைத்த இறைவன் வழியொன்று காட்ட ஒளி கொடுப்பதற்கென வரனொருவன் வந்தான்.

காண்டீபன்! ஆசிரியத்தொழில்! அமுதாவிடம் ஐந்து சதம் கூடச் சீர்வரிசை வாங்காத சீர்திருத்தவாதி. சதிபதிகளாகிச் சந்தோஷித்தனர். பொருத்தமான தம்பதிகளென ஊரே புகழாரம் சூட்டியது.

காண்டீபனும் அமுதாவும் அந்தப் பிள்ளையார் ஆலயத்தைச் சுற்றி வணங்கிக் கொண்டிருந்தனர். எட, யாரிது! பார்த்த கணமே புரிந்து கொண்டாள். அது... கௌதமன்... கூட வருவது! அவன் மனைவி கல்பனா! அது சரி! என்ன இவள் இப்படி நொண்டியபடி நடக்கிறாளே! நடப்பதற்கு இத்தனை சிரமப்படுகின்றாளே! பாவம். அடடே! பொய்க்கால்! அடப்பாவமே! அண்மையில் வீதி விபத்தில் அகப்பட்டுக் காலையிழந்த கௌதமனின் மனைவி கல்பனா!

அமுதாவுக்குப் புரிந்து விட்டது. அமுதாவையும் கணவன் காண்டீபனையும் பார்த்துவிட்ட கௌதமன் ஏனோ தலைகுனிந்து கொண்டான். அவர்களைப் பார்க்க அவனால் முடியவில்லை. உப்புத் தின்றவன் தண்ணீர் குடித்தே ஆகவேண்டுமென்பதைக் கௌதமன் உணர்ந்துவிட்டான் போலும்!

மிருசுவில் தமிழ்தாசன்



# யாழ்ப்பாண ஆரியகுளத்தின் நிறமாற்றம்

யாழ்.நகரின் மிகவும் பிரபலமாக விளங்கும் ஓர் இடமாக ஆரியகுளம் திகழ்கின்றது. இக்குளமானது ஸ்ரான்லி வீதி, பலாலிவீதி என்பவற்றின் எல்லைக்குட்பட்டு காணப்படுகிறது. அண்ணளவாக 2.5 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதும், 1.3 மீற்றர் வரையான சராசரி ஆழத்தினையும் இக்குளம் கொண்டது. இக்குளம் நான்கு புறமும் கொங் கிறீற்றினாலான எல்லைப்படுத்தப்பட்டும் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாநாகர சபையின் ஆளுகைக்கும் உட்பட்டது.



கபில, சிவப்பு நிறத்திலான Azolla sp

"நீறிலா நெற்றிபாழ்
உப்பிலா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்"
என்கிறது ஔவையாரின் முதுமொழி.

இதனால் ஓர் பிரதேசத்திற்கு ஆறின் அல்லது நீரின் தேவையும் அதனால் ஆகும் அழகும் மிகவும் காத்திரமானதாகும் என்றால் மிகையாகாது.

ஆனால் எமது பிரதேசங்களில் காணப்படுகின்ற இவ்வகை சிறிய நீர் கொள் அலகுகள் பொருத்தமான பராமரிப்புக்களின் பற்றாக்குறை காரணமாக மோசமான மாசடைவினை எதிர்நோக்கியுள்ளது. இதன்மூலம் விளக்கத் தேவையில்லை.

ஆரியகுளமானது யாழ். நகரின் பிரபலமான இடத்தில் அமைந்திருப்பதனால் அவ்விடத்தினை அடையும் பயணிகள், சுற்றுலாவிகள் போன்றோரினால் மதிப்பின்றி வீசப்படும் அநேகமான பிளாஸ்ரிக் கொள்கலன்கள், விசமிகளினால் கொட்டப்படும் கழிவுப்பொருட்களாலும் அதனைச்சூழ்ந்த வதிவிடதாரிகளின் மேலதிக கழிவுநீர் சங்கமிக்கும் பிரதான இடமுமாக விளங்குவதால் தோற்றத்தில் அசுத்தமானதாகவே காணப்படுகிறது.

அத்துடன் அக்குளத்தில் இயற்கையான தாவர போர்வையும் சில விலங்கினங்களும் அச்சூழலில் அதிக சகிப்புத்தன்மையுடன் வாழ்ந்து வருகின்றன.

அண்மைக்காலமாக ஆரியகுளத்தின் நீர் சிவப்புநிறமாக மாறியது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் அக்குளத்தின் நீர்மாதிரியினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் ஆராய்ச்சி பிரிவினருக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையானது இக்குளத்தின் நீர் கொண்டுள்ள இரசாயன, உயிரியல்கூறுகள் பற்றியோ அன்றி அது தொடர்பில் ஆய்வு செய்தல் தொடர்பிலோ விளக்க முறபடவில்லை. ஆனால் சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு பயன்தரும் சில தகவல்கள் காலங்கள் வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

நீர்ச்சூழலைப் பொறுத்தவரையில் அங்கு காணப்படும் தாவர வகைகள் நீர் நிலையின் வெவ்வேறு மட்டங்களுக்கு ஏற்ப சிறப்படைந்திருக்கும், இது வலயமாதல் (Zonation) என வழங்கப்படும். அந்த வகையில் ஆரியகுளத்தினைப் பொறுத்தவரை தாவர இன எண்ணிக்கை குறைவாகக் கரணப்படினும் குறித்த சில இன தாவரங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இங்கு நீரின் அடியில் மண்ணில் வேரூன்றிய தாமரை போன்ற தாவரங்களும் நீர்மட்டத்திற்கு சற்று கீழே அமிழ்ந்து மிதக்கின்ற தாவரங்களும் மிதந்துவாழும் ஆகாய தாமரை போன்ற தாவரங்களும் நீண்டகாலமாக அக்குளத்தில் நிலைகொண்டுள்ளன. அண்மைக்காலமாக 2016 இற்கு பிந்திய காலம் தொடக்கம் தற்போது வரை அதிக பெருக் கத்திற்கு உள்ளாகி குளத்தின் நிறமாற்றத்துக்கு காரணமாக இருக்கும் இவ்வகைத் தாவரங்கள் பற்றி அறிவது இங்கு பொருத்தமானது.

01) மிதக்கும் பன்னங்கள் இவை இரண்டு நிறங்களில் (floating ferns) அவதானிக்கப்படுகின்றன.

மிதக்கும் பன்ன வகையைச் சேர்ந்த தாவரங்களை நோக்கும் போது அவை எமது நகரத்தின் அளவில் கிளைந்த சிறிய இலைகளைக் கொண்டிருக்கும். இவை நிறைந்த சூரியஒளி, வெப்பநிலை அதிகமாக உள்ள இடங்களில் அவற்றின் நிறம் கபிலம் சார் சிவப்பு நிறமாகவும், நிழலான குளிர்மையான சூரிய ஒளி குறைந்த இடத்தில் பச்சை நிறமாகவும் காணப்படுகிறது.

தற்போதைய அவதானிப்பின்படி இக்குளத்தின் வடக்கு பக்க இடது மூலையில் நீரினளவு குறைவாகவும் நீரின் வெப்பநிலை அதிகம் காணப்படுவதனாலும் அப்பிரதேசம் செங்கம்பளம் விரித்தாற் போல் தோற்றமளிக்கின்றது. ஏனைய நிழலான ஆழமான பகுதிகள் பச்சையாகவும் தோற்றுகின்றன.

இவற்றுடன் சிறிய பொருட்டுப் போன்ற இணையுடைய Duck weed (*Lemna* Sp) அனைத்து இடங்களிலும் பரவலாக காணப்படுகின்றமையையும் அவதானிக்கலாம்.

யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட ஏனைய குளங் களான தேவரிக்குளம், புல்லுக்குளம், பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள குளம் போன்றனவற்றில் இவ்வகை மிதக்கும் தாவரங்கள் காணப்படவில்லை. அத்துடன் வழமைக்குமாறிய நிறமாற்றங்கள் எவையும் அவதா னிக்கப்படவில்லை.

இவ்வகை தாவரங்களின் வருகை

மேற்படி இவ்விரு மிதக்கும் வகையான தாவரங்கள் இக்குளத்திற்கு வந்திருக்கக்கூடிய வகையை நோக்கின் இத்தாவரங்கள் கால்நடைகளின் உணவுத்தேவையை பகுதியாகப் பூர்த்தி செய்யக்கூடியதும் புரதச் செறிவு கூடியதுமான தாவரம் என்பதால் கால்நடை தொடர்பினாலான அமைப்புக்களினால் அறிமுகம் செய்யப் பட்டதுமான தாவர வகைகளே இவையாகும். எனவே இவை இக்குளத்தை அண்டிய வதிவிடதாரிகளின் கால்நடைகளின் உணவு பயன்பாட்டிற்குட்பட்டு எஞ்சிய உணவு மீதிகள் உயிர்ப்பாக இக்குளத்தை அடைந்திருக்கும் சந்தர்ப்பம் உள்ளது.



பச்சை நிறத்திலான Azolla sp

இத்தாவரத்திற்கும் குள நீரின் நிறமாற்றத்திற்கும் இடையேயான தொடர்பு.

இக்குளத்தின் பிரதான நீர்ப்பரப்பை மூடியுள்ள இத் தாவரப் போர்வையானது (*Azolla* Sp) நச்சுத்தன்மை யான உலோக அயன்களைக் கொண்ட சூழலை சகித்து வாழும் தன்மையை பெருமளவிற் கொண்டதாகவும் அத்தாவரத்தின் உயிரிரசாயன தாக்கத்தின் ஊடாக நச்சுத்தன்மை வாய்ந்த உலோகங்களான அலுமினியம், ஆசனிக்கு, குரோமியம், நிக்கல் கட்மியம் மற்றும் நாகம் என்பவற்றின் அயன்களை அத்தாவரம் கொண்டுள்ள நீரில் இருந்து அகற்றும் தன்மை கொண்டுள்ளதாக சில ஆய்வுகளின் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இத்தாவரங்களின் உடலினுள் நடைபெறும் உயிரிரசாயனத் தாக்கங்களில் இந் நச்சு அயன்கள் தாக்கம் அமைவதால் ஏற்படும் தோற்றப்பாடுகளுக்கு ஏற்பவே அந்நீர் நிலைகளின் நிறம் மாறுபடுவதற்கு காரணமாக அமைகின்றன. சிவப்பு நிறத்திற்கு கம்மிய அயன்கள் காரணமானவை எனவும் ஏனைய அலுமினியம் போன்றவை மஞ்சள் நிறத்திற்கும் ஏனைய ஒவ்வோர் அயன்களும் வேறுபட்ட நிறங்களுக்கும் காரணமாக அமைவதாக அறியக்கிடக்கின்றது.

## ஓர் அவதானிப்பு

முடிவாக, மேற்படி தாவரப் போர்வையும் அதன் பயன்பாடு தொடர்பான ஆய்வுகளின் இலக்கிய மீளாய்வுகள் (Literature reviews) மூலமாகவும் ஆய்வுக்கட்டுரைகள் வழியாகவும் கிடைக்கப்பெற்ற பொருண்மையுடைய தகவல்களின் அடிப்படையில் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட ஆரியகுளத்தின் நீரின் நிறமாற்றத்திற்கு அக்குளத்தின் நச்சு உலோக அயன்களின் இருப்பே காணரமாக முடியும். இதனை அங்கு காணப்படுகின்ற *Azolla* sp தாவரப்



Duck weed (Lemna sp)
பச்சைநிற பொட்டு போன்ற இலைகள்.

போர்வை ஓர் காட்டியாக நமக்கு விளக்கியுள்ளது.

இந் நிறமாற்றத்தின் தோற்றப்பாடானது அக்குளத்தின் நச்சுநீக்கலின் வெளிப்பாடாக உள்ளதே இரசாயன ரீதியான தகவல்களின் அடிப்படையில் ஊகிக்க முடியும். இது தொடர்பாக அக்குளத்தின் அயலவர்களோ, சமூக நலன் விரும்பிகளோ அச்சம் கொள்ளத்தேவையில்லை. இதற்கு பரிசோதனை ரீதியிலான உறுதிப்பாடும் மக்களுக்கு வழங்கும் மேலதிக ஆலோசனைகளும் துறைசார் ஆய்வகங்களின் செயற்பாடுகளிலே தங்கியுள்ளது.

மேலும் இத்தாவரப்போர்வை ஏனைய யாழ்.மாநகர சபைக்குட்பட்ட ஏற்கனவே குறிப்பிட்ட குளங்களில் ஒன்று கூட காணப்படவில்லை என்பதும், நீரின் நிறமானது வழமை போன்றே காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வகையான தாவரப் போர்வை அடர்த்தியாக குளத்தின் மேற்பரப்பை மூடும்போது நுளம்புகள் முட்டை இடுவதற்கான வாய்ப்பும் குறைக்கப்படுகிறது. அத்துடன் இத்தாவரங்கள் சிறந்த இயற்கை உரமாக மாற்றப்படவும் கூடியதாக காணப்படுவதால் அதனையும் நாம் கருத்திற் கொள்ளமுடியும். அத்துடன் கால்நடைகளுக்கு ஏற்ற உணவாகக் காணப்படுவதன் மூலமும் சிறந்த பயன்களை பெறமுடியும்.

அதைவிட இத்தாவரப்போர்வை பின்வரும் பாதகமான விளைவுக்கும் காரணமாக அமையமுடியும். நீரின் மேற்பரப்பினை முற்றுமுழுதாக மூடுவதன்மூலம் சூரிய ஒளியின் நீரூடான ஒளிபுகும் திறனை தடுக்கும். இதன் மூலம் நீரின் அடியில் உக்கலடையும் சேதனப் பொருட்களுக்கு தேவையான ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படவும் காற்றின்றி வாழ் பற்றீரியாக்களின் பெருக்கமும் அதிகரிக்கவும் வழி ஏற்படும். இதன் போது அந்நீர்ச்சூழலில் அங்கிகளின் இறப்பும், தொடர்ந்து துர்நாற்றம் கொண்ட வாயுக்கள் தோன்றவும் வழி ஏற்படும். இதனை இயன்றளவு குறைக்க நீர்மேற்பரப்பை மூடியுள்ள பெரும்பாலான தாவரப்படையினை ஒழுங்கான கால இடைவெளியில் அகற்றிப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இறுதியாக மக்களாகிய நாம் அனைவரும் சூழலில் அதன் நன்மையை அனுபவிக்க வேண்டுமாயின் அதனைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நல்மனப்பான்மையும் வளர்த்து செயற்படுவோமாயின் எம்மைச்சூழவுள்ள சூழலால் நாமும் எம்மால் சூழலும் பாதுகாக்கப்படும் என்பதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை.

ஞானமுத்து அன்ரன் சாள்ஸ்
(B.Sc (Hons) PGDE. m.phil)
ஆசிரியர்.யா/ புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

| | |
|---|---|
| படம்: | ஆடிப் பெருக்கு |
| இசை: | ஏ.எம்.ராஜா |
| பாடியவர்கள்: | ஏ.எம்.ராஜா , பீ.சுசீலா |
| நடிகர்கள்: | ஜெமினி , சரோஜா தேவி |



கண்ணிழந்த மனிதன் முன்னே ஓவியம் வைத்தார்
கண்ணிழந்த மனிதன் முன்னே ஓவியம் வைத்தார்
இரு காதில்லாத மனிதன் முன்னே
பாடல் இசைத்தார்... பாடல் இசைத்தார்

கண்ணிருந்தும் ஓவியத்தைக் காட்டி மறைத்தார்
இரு காதிருந்தும் பாதியிலே பாட்டை முடித்தார் (2)
ஆட வந்த மேடையிலே முள்ளை வளர்த்தார்
அணைக்க வந்த கரங்களுக்கு தடையை விதித்தார்
ஆட வந்த மேடையிலே முள்ளை வளர்த்தார்
அணைக்க வந்த கரங்களுக்கு தடையை விதித்தார்
காய்ந்து விட்ட மரத்தினிலே கொடியை இணைத்தார்
தாவி வந்த பைங்கிளியின் சிறகை ஒடித்தார்

கண்ணிழந்த மனிதன் முன்னே ஓவியம் வைத்தார்

கண்ணிருந்தும் ஓவியத்தைக்
காட்டி மறைத்தார்... காட்டி மறைத்தார்

பெண் பெருமை பேசிப் பேசிக் காலம் கழிப்பார்
தன் பெருமை குலையும் என்றால் பெண்ணை அழிப்பார்
பெண் பெருமை பேசிப் பேசிக் காலம் கழிப்பார்
தன் பெருமை குலையும் என்றால் பெண்ணை அழிப்பார்
முன்னுமில்லை பின்னுமில்லை முடிவுமில்லையே
மூடன் செய்த விதிகளுக்கு தெளிவுமில்லையே

# கனவுகளும் பலன்களும்



அப்படி என்றால் உங்களுக்கு வரக்கூடிய ஆபத்து வெளிப்படையாக வராமல் ஏதோ ஒரு நன்மை போல வருகிறது. அலுவலகம் சம்பந்தபட்ட எந்த காரியத்தையும் சற்று ஜாக்கிரதையாக கையாளுங்கள் மாற்றாலோ, பிரமோஷனோ புது வேலைவாய்ப்போ எதுவாக இருந்தாலும் வருகிற மூன்று மாத காலம் ஏற்க வேண்டாம். அது நன்மை தருகிற மாதிரி வெளிப்படையாக இருந்தாலும் ஏதேனும் ஒரு நன்மை ஆபத்து உள்ளிருக்கும்.

அடுத்ததாக நடக்கும் நிகழ்வு மழை. மழை வந்தது குரங்குகள் ஆபத்து விலகுகிறது. மழை என்பது ஆபத்தைக் குறிக்கும். ஆகவே உங்களுக்கு பொருளாதார ரீதியாக ஒரு நன்மை ஏற்பட போகிறது. பிறகு நீங்கள் ஏதோ ஒரு வீட்டிற்குள் நுழைகிறீர்கள். அதில் சுற்றி இருக்கிறார். இதன் மூலம் இந்த பொருளாதார நன்மை உங்களை விட உங்கள் குடும்பத் தினருக்குத் தான் அதிக பயன் தரப்போகிறது எனத் தெரிகிறது.

ஆகவே வருகிற சில மாதங்களில் அலுவலகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் எச்சரிக்கையாக இருங்கள் ஒரு எதிர்பாராத பண வரவு காத்திருக்கிறது.

**குழந்தை கனவில் வந்தால்**

குழந்தையைக் கனவில் காண்பது நல்லது. தொழில் விருத்தியாகும். பொருள் வரவு அதிகரிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் விளையாடுவது போலவோ அல்லது சிரித்து மகிழ்வது போலவோ கனவு கண்டால்நல்ல பலன்கள் நடக்கும். வாழ்கையில் மகிழ்ச்சி ஏற்படும்.

ஆனால் குழந்தை இடறி விழுவது போலவோ அல்லது சண்டையிட்டுக் கொண்டுஅழுவது போலவோ கனவு கண்டால் தொழிலில் பிரச்சினைகளும் சங்கடங்களும் ஏற்படும்.

பெண்கள் வளர்ந்த குழந்தைகளைக் கனவில் கண்டால் அது அதிர்ஷ்டத்தைக் குறிக்கும். உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தையை கனவில் பார்த்தால் எதிர்காலத்தில் நிம்மதியான வாழ்க்கை ஏற்படும்.

குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவது போலக் கனவு கண்டால் குடும்ப வாழ்க்கையில் இன்பம் பெருகும். திருமணமாகாதவர் இது போலக் கனவு கண்டால் விரைவில் அவருக்கு விருப்பமானவருடன் திருமணம் நடக்கும்.

வெறும் தொட்டிலைக் கனவில் கண்டால் முக்கியமான காரியம் நடப்பதில் தடங்கல்கள் ஏற்படும்.

குழந்தையை முத்தமிடுவது போலக் கனவு கண்டால் விரைவில் புதிய வருவாய் ஏற்படும். குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்வது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும்.

குழந்தையைப் பிரசவிப்பதுபோல ஒரு பெண் கனவு கண்டால் சுகமான வாழ்க்கை அமையும்.

குழந்தை இறந்து விட்டது போலக் கனவு கண்டால் கெட்ட பலன்கள் ஏற்படும். குழந்தையை எடுத்து வைத்திருப்பது போலவோ அல்லது அழுகின்ற குழந்தையைச் சமாதானப் படுத்துவது போலவோ கனவு கண்டால் கவலையைத் தரும் சம்பவங்கள் நடக்கும். (தொடரும்)

## யாழ்ப்பாணத்தில் MIBM இன் புகைப்படக் கற்கை நெறி இம்மாதம் ஆரம்பம் (3rd Batch)

METROPOLITAN INSTITUTE OF BUSINESS MANAGEMENT (MIBM) யாழ் நகரில் முதலிரு தொகுதிகளையும் வெற்றிகரமாக நிறைவு செய்து தற்போது மூன்றாவது தொகுதியை (3rd BATCH) இம்மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இதுவரை முதலிரு தொகுதிகளிலும் 40 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் MIBM புகைப் படக் கல்வியை கற்று பயனடைந்துள்ளனர்.

இங்குபயிலும் மாணவர்களுக்கு ஒரு DIGITAL கமராவை இயக்கி அதன் மூலம் நல்ல தரம்



வாய்ந்த படங்களை எடுப்பது எவ்வாறு என்பதைப் பற்றி விரிவாக கற்பிட்டதுடன் செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்படும் என அந் நிறுவனத்தின் பிரதான நிறை வேற்று அதிகாரியான செல்வரத்தினம் நிமால் தெரிவித்தார்.

இவ்வகுப்புக்களை நடத்துவதற்காக கொழும்பில் இருந்து விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம், என்ற மூன்று மொழிகளிலும் புகைப்படக் கல்வியை கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனமான MIBM கடந்த 17 மாதங்களில் 28 மாணவ தொகுதியை முடித்ததன் மூலம் இலங்கையின் வேறெந்த நிறுவனத்தினாலும் எட்டப்படாத ஒரு மைல் கல்லை அடைந்துள்ளது. இதன் மூலம்புகைப்படத் துறையில் MIBM ஆனது இலங்கையின் முன்னணி கல்வி நிறுவனமாக திகழ்கின்றது.

MIBM ஆனது புகைப்படத்துறையில் மட்டுமல்லாது முகாமைத்துவ கற்கை நெறிகளையும் கற்பித்து வருகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை தெரிந்து கொள்ள 0776 615 152 என்ற இலக்கத்துக்கு அல்லது info @ mibm.lk என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளலாம். அத்தோடு www. mibm.lk என்ற இணையத்தின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். MIBM ஆனது கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தமது சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## பிஞ்சு நெஞ்சில் நஞ்சை விதைக்காதீர்

ஒருநாள் விடுமுறை தினம் என்பதால் நானும் எனது தோழியும் பேசிக் கொண்டிருந்தோம். எனது பேரக்குழந்தைகள் என்னிடம் வந்து பாட்டி ஹெல்ப்பிங் ஆன்ட்டி வந்திருக்கிறார்கள் என கூற சிநேகிதியிடம் சற்று நேரம் இரு இதோ வந்து விடுகிறேன் என்று கூறிச் சென்றேன். எனது பின்னாலேயே சிநேகிதியும் எழுந்து வந்தாள். நான் தேய்க்க வேண்டிய பாத்திரங்கள், தோய்க்க வேண்டிய துணிகள் மற்றும் வேண்டிய பொருட்களை கொடுத்து விட்டு வந்தேன்.

உள்ளே வந்த என் தோழி ஐயே! வேலைக்காரிய போய் ஆன்ட்டி கீன்ட் டின்னு சொல்றாங்களே! வேலைக்காரின்னு சொன்னா என்ன? இனிமே வேலைக்காரி ன்னு சொல்லச் சொல் என்றாள்.

அதற்கு நான் அவளும் மனுஷிதானே? வேலைக்காரி என்று சிறு குழந்தைகள் சொல்வதால் அவளுக்கு மனக்கஷ்டம் ஏற்படாதா? மேலும் குழந்தைகளுக்கு சுப்பீரியாட்டி காம்ப்ளக்ஸ் ஏற்படும். நாம் தான் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் ஏற்படாமல் இருக்க வேலை செய்பவர்கள் நமக்கு உதவி செய்கிறார்கள் என்பதாலும் மனிதர்களை மதிக்கும் எண்ணமும் வேண்டும் என்பதாலும் ஹெல்ப்பிங் ஆன்ட்டி என்று கூற சொன்னேன். பிஞ்சு நெஞ்சில் வளரும் பருவத்திலே நல்ல விடயங்களை சொல்லித்தர வேண்டும் என்று கூற தவறை உணர்ந்த சிநேகிதி மன்னிப்புக் கேட்டு தானும் மாறுவதாகக் கூறினாள் நீங்களும் தானே?






சினிமா செய்தி

திரைவிமர்சனங்கள்



# ரம்

தமிழ் சினிமாவில் கதையுள்ள படங்கள் வருவதைவிட தற்போதெல்லாம் பேயுள்ள படங்களே வருகின்றது. வேலையில்லா பட்டதாரியில் தனுஷ் தம்பியாக நடித்த ரிஷிகேஷ், நரேன், சஞ்சிதாஷெட்டி, மியா ஜார்ஜ், விவேக் என பல நட்சத்திரங்கள் நடிப்பில் சாய் பரத் இயக்கத்தில், அனிருத்தின் மிரட்டல் இசையில்  வெளிவந்துள்ள படம் ரம். அது சரி ரம் நம்மை மிரட்டியதா? பார்ப்போம்.

ரிஷிகேஷ், விவேக், சஞ்சிதா ஷெட்டி ஆகியோர் ப்ளான் செய்து பணத்தை கொள்ளையடிக்கும் கும்பல்.இவர்கள் ரூ. 25 கோடி மதிப்புள்ள சில அரிய வகை கற்களை கொள்ளையடிக்கின்றனர்.

அந்த பணத்தில் எனக்கும் பங்கு வேண்டும் என்று நரேன் எண்ட்ரீ ஆக, சில நாட்கள் அவர் கண்ணில் இருந்து தப்ப, ரிஷிகேஷ் டீம் நிலாவூரில் உள்ள ஒரு பங்களாவில் பதுங்குகின்றது.

அங்கு சில அமானுஷிய விடயங்கள் அடுத்தடுத்து நடக்கிறது. அதைத் தொடர்ந்து அவர்கள் அந்த வீட்டிலிருந்து வெளியே வர முடியாத படி பேய் லாக் செய்கின்றது. அந்த வீட்டில் பேயாக இருப்பவர்கள் யார்? அந்த கல் விடயத்தில் நரேன் ஏன் எண்ட்ரீ கொடுத்தார்? என்பதை அடுத்தடுத்த காட்சிகள் கூறுகின்றது.

பேய் படம் என்றாலே டெம்ப்ளேட்டாக ஒரு பேய் பங்களா இருக்கும். அப்படித்தான் நிலாவூரில் இருக்கும் இந்த பங்களாவும். வேலையில்லா பட்டதாரி படத்தில் தனுஷ் தம்பியாக நடித்த ரிஷிகேஷ், அந்த படத்தில் மட்டுமன்றி இந்த படத்திலும் ஏன் சிரிக்க கூட மாடடேன்கிறார் என்று தெரியவில்லை.

ஆனால், அதற்கும் விவேக் ஒரு காட்சியில் 'இவன் எல்லா சீனுக்கு ஒரே ரியாக்ஷன் தான் கொடுப்பான்' என கிண்டல் செய்து ஆடியன்ஸ் பல்ஸை கேட்ச் செய்கிறார்.

படத்தின் மிகப்பெரும் பலமே விவேக் தான், நீண்ட இடைவேளைக்கு பிறகு ஒன் மேன்  ஷோவாக மிரட்டியிருக்கிறார். அதிலும் 'இவன் போலிஸா, பத்திரிகைக்காரனா இல்லை மீம் கிரியேட்டரா?' என கேட்கும் இடமெல்லாம் இன்றைய ட்ரண்ட் இளைஞர்களையும் சிரிக்க வைக்கின்றார்.

அனிருத்தின் இசை மிகவும் கைகொடுத்துள்ளது. பாடல்கள் இல்லாமலேயே படத்தை நகர்த்தியிருக்கலாம், பின்னணி இசையில் நமக்கும் அச்சத்தை ஏற்படுத்துகிறார். ஒளிப்பதிவு படம் பாதி இருட்டிலேயே இருந்தாலும், எந்த இடத்திலும் அலுப்பு தெரியவில்லை.

படத்தின் முதல் பாதி திகில், காமெடி என கலகலப்பாக நகர, இரண்டாம் பாதியில் வரும் ப்ளாஷ்பேக் காட்சிகள் 1000 பேய் படத்தில் பார்த்தது போலவே உள்ளது.

படத்தின் முதல் பாதி, அனிருத்தின் பின்னணி இசை. விவேக் செய்யும் கலாட்டா. கிளைமேக்ஸில் எப்படி இறந்தார்கள் என்பதை விஷ்வலாக காட்டிய விதம்.

படத்தின் இரண்டாம் பாதியில் வரும் ப்ளாஷ்பேக் காட்சிகள், மிகவும் டெம்ப்ளேட் வில்லன் கதாபாத்திரம். மொத்தத்தில் ரம் கொஞ்சம் கூலிங் கம்மி என்றாலும் விவேக்கை நம்பி கண்டிப்பாக பார்க்கலாம்.



# காஸி

இந்திய சினிமாவில் எப்போதாவது தான் நல்ல திரைப்படங்கள் வரும், அப்படிப்பட்ட திரைப்படம் தான் இந்த காஸி, இப்படத்தின் முழு விமர்சனத்தை பார்ப்போம்.

இந்தியாவின் விமானந்தாங்கிப் போர்க்கப்பலான INS VIKRANTH. ஐ என் எஸ் விக்ராந்தின் செயற்றிறனை நினைத்து பயப்படும் பாகிஸ்தான் கடற்படை , அன்றைய கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய பங்களாதேஷ்) கிளர்ச்சியாளர்களை அடக்க, இந்தியாவை மீறி இராணுவத்தையோ விமானங்களையோ அனுப்ப இயலாத நிலையில், இந்தியாவிற்கே குறிவைக்கின்றார்கள்.

அமெரிக்காவில் இருந்து வாங்கப்பட்ட அதி நவீன நீர்மூழ்கிக்கப்பலில் அரபிக்கடல், இந்தியக்கடல் என்று பயணித்து வங்களா விரிகுடாவிற்கு வருகிறார்கள். பாகிஸ்தான் சதியை முன்பே அறிந்த ரா, இந்தியக்கடற்படையின் கிழக்கு பிராந்திய தலைமையகத்தில் வந்து ஓம் பூரியிடம் எச்சரித்துச் செல்கிறார்கள்.



கிழக்குக் கடற்கரையோர பாதுகாப்பை உறுதிப்படுத்த கோபக்காரக் கப்டன் கே.கே. மேனனுடன், சாதுர்யமான ராணா ஆகியோர் இருவரும் கப்டனாகப் பணியாற்றும் வகையில் எஸ் 21 நீர்மூழ்கிக் கப்பலில் அனுப்பி வைக்கப்படுகிறது.

காஸியை ஒப்பிடும் போது, பலம் குறைந்த எஸ் 21 ஐ வைத்துக் கொண்டு, காஸியின் சதியை அதாவது பாகிஸ்தான் கடற்படையின் சதியை முறியடித்தது, என்பதே மீதிக்கதை.

முதலில் இப்படிப்பட்ட ஒரு படத்தை முதல் படமாக எடுத்ததற்காக அறிமுக இயக்குநர் நர்சங்கல்ப்பை மனம் திறந்து பாராட்டலாம், எந்த ஒரு இடத்திலும் திரைக்கதை சோம்பம் தட்டவில்லை. ராணா, அதுல் குல்கர்னி, டாப்ஸி என அனைவரும் தங்கள் கதாபாத்திரங்களை நிறைவாக செய்துள்ளனர்.

நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கியது, அதில் பயணித்த அத்தனை வீரர்களும் பலி, என்று நாம் செய்தித்தாள்களில் படிக்கும் போது அது ஒரு சாதாரணமான செய்தி அவ்வளவுதான். ஆனால், ஒரு கட்டத்தில் காஸியின் கண்ணிவெடியில் சிக்கி, இலேசாக சிதிலமடைந்து ஆழ்கடலுள் தரைதட்டும் போது நமக்கும் மூச்சு முட்டுகிறது.

படத்தின் கதை மற்றும் திரைக்கதை, இத்தனை பதற்றத்துடன் சீட்டின் நுனிக்கு வந்து ஒரு படம் பார்த்து பல நாட்கள் ஆகிவிட்டது.

கொஞ்சம் கிராபிக்ஸ் காட்சிகள் யதார்த்தம் விலகுகிறது. மொத்தத்தில் காஸி இந்திய சினிமா ரசிகர்கள் அனைவராலும் கொண்டாடப்பட வேண்டிய படம்.

# கிரிக்கெட் புத்தகம் சொல்லியதை வேறு விதமாக மாற்றியவர்




2007 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஒரு 23 வயது தென்னாபிரிக்க இளைஞன், அவுஸ்திரேலியாவின் நாதன் பிராக்கனின் பந்தை 'டீப் மிட் விக்கெட்' திசையில் ஒரு சிக்ஸர் விளாசினார். செம செக்ஸியான ஷொட் அது!

உலகக்கோப்பை லீக் போட்டியொன்றில் தென்னாபிரிக்காவும் அவுஸ்திரேலியாவும் மோதின. தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு 378 ஓட்டங்கள் தேவை. கிரீம் ஸ்மித்துடன், டிவில்லியர்ஸ் தொடக்க வீரராக களமிறங்கியிருந்தார். முதல் ஓவரிலேயே பவுண்டரியும், சிக்ஸருமாக அமர்க்களப்படுத்திய அந்த இளைஞன் டிவில்லியர்ஸ். தொடர்ந்து மேட்ச்சை கவனித்தேன். பிராக்கன், ஷான் டேயிட், கிளென் மெக்ராத் என ஒரு பவுலரையும் விடாமல் உரித்தார் டிவில்லியர்ஸ். குறிப்பாக மெக்ராத்தின் ஓர் ஓவரில் ஹட்ரிக் பவுண்டரிகள் விளாசி அதிர வைத்தார் ஏ.பி.டி.

ஒரு பொடிப்பையன் தன் பந்துவீச்சை நொறுக்குவதை பார்த்து வெறுத்துப் போனார் மெக்ராத். 5.3 ஓவரில் ஐம்பது ஓட்டங்களையும், 13.1 ஓவரில் நூறு ஓட்டங்களையும இருபதாவது ஓவரில் ஓட்டங்களையும் கடந்தது தென்னாபிரிக்கா.

21ஆவது ஓவரின் கடைசி பந்தில், அணிக்காக இரண்டாவது ஓட்டம் ஓடும் போது ரன் அவுட் ஆனார் ஏ.பி.டி. அப்போது அணியின் எண்ணிக்கை 160. டிவில்லியர்ஸின் எண்ணிக்கை 70 பந்துகளில் 14 பவுண்டரி, இரண்டு சிக்ஸர்களுடன் 92 ஓட்டங்கள். இரண்டு ஆண்டுகளாக அணியில் இருந் தும் ஒரு சதம் கூட அப்போது வரை அவர் அடித்திருக்கவில்லை. டிவில்லியர்ஸின் அந்த இன்னிங்ஸ் எனக்கு ஷேவாக்கை நினைவு படுத்துவதாக அமைந்தது. ஆஃப் சைடில் போடப்படும் ஒரு பந்தை, எளிதாக கவர் திசையில் ஆடி விடலாம்தான். அப்படித்தான் கிரிக்கெட் புத்தகம் சொல்லித் தருகிறது. ஆனால் அதை வேறு விதமாக ஷாட் ஆடும் வழக்கம்தான் டிவில்லியர் ஸின் பழக்கம்.

டிவில்லியர்ஸுக்காக அந்த உலகக் கோப்பையைக் கவனிக்க ஆரம்பித்தேன். அடுத்தடுத்த இரண்டு போட்டிகளில் 'டக் அவுட்' ஆனார். வங்க தேசத்துக்கு எதிரான போட்டியில் 15 ஓட்டங்களில் அவுட் ஆனார். இந்தியாவை போலவே தென்னாபிரிக்காவும் வங்கதேசத்திடம் தோல்வியைத் தழுவியது.

அடுத்த போட்டியில் மேற்கிந்தியத்



தீவுகள்- தென்னாபிரிக்கா மோதியது. சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை ஒருநாள் போட்டிகளில் வீழ்த்துவது என்பது அவ்வளவு சுலபமல்ல. காலி மோர், டேரன் பவல், பிராட்ஷா, பிராவோ, கெயில், பொல்லார்ட், சந்திரபால், லாரா, சர்வான், ராம்தின் என டெர்ரர் அணியாக கோலோச்சியது மேற்கிந்தியத்தீவுகள் வலிமையான பந்துவீச்சை எதிர் கொண்டு அந்த போட்டியில் முதல் சதத்தைப் பூர்த்தி செய்து 146 ஓட்டங்கள் விளாசினார் டிவில்லியர்ஸ். அந்த முதல் சதத்துக்குப் பிறகு அவர் வேற லெவல் ஆட்டக்காரர் ஆனது வரலாறு அறியும்.

கிரிக்கெட்டில் பலர் சாதனைகள் செய்வார்கள். ஆனால் சாதனைகள் படைப்பதில் சாதனை புரிவது ஒரு சிலர் தான். இவர் இரண்டாவது ரகம்.

டிவில்லியர்ஸுக்கு இன்னொரு பெருமை உண்டு. ஆசிய கண்டத்துக்கு அப்பால் இருக்கும் கிரிக்கெட் வீரர்கள் இந்திய மண்ணில் விளையாடுவது என்றாலே 'ஜெர்க்' அடிப்பார்கள். குக், கலிஸ் என விரல் விட்டு எண்ணக்கூடிய வீரர்கள்தான் இங்கே சிறப்பாக ஆடியிருக்கிறார்கள். தொடர்ந்து இந்திய மண்ணில் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியவர்களில் மிக முக்கியமானவர் ஏ.பி.டி.

ஐ.பி.எல் தொடர் ஆடுவதற்கு முன்னரே டெஸ்ட் போட்டியில் அகமதாபாத்தில் இரட்டைச் சதம் அடித்துச் சரித்திரம் படைத்தவர். சமீபத்தில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் வந்தபோது ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் மூன்று சதங்கள் விளாசினார். சென்னை மண்ணில் கடும்வெக்கைக்கு இடையே ஒரு பக்கம் அணி சரிந்து கொண்டிருந்தபோது அபாரமாக ஆடி சதம் எடுத்த இன்னி ங்ஸை அவ்வளவு எளிதில் மறந்து விட முடியாது.

டிவில்லியர்ஸை நன்றாக கவனித்தால் ஒரு விடயம் புரியும். பெரும்பாலான போட்டிகளில் அவர் எடுத்தவுடன் பவுண்டரி, சிக்ஸரை விளாச முற்படமாட்டார். முதல் பத்து - பதினைந்து பந்துகளில் தன்னை நிலைப்படுத்திக் கொள்வார். மைதானம் எந்தவிதமான பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கிறது என கவனிப்பார். கணிப்பார். அதற்கேற்ப ஆட்டத்தின் பாணியை மாற்றிக் கொள்வார். நிலைமை சீராக இருக்கிறது, கியரை மாற்றலாம் என அவருக்குத் தோன்றிவிட்டால், தடாலடியாக நான்காவது, ஐந்தாவது கியரை போட்டு சிக்ஸர் மற்றும் பவுண்டரி மழையைப் பொழிவார். இது கிரிக்கெட்டுக்கு மட்டுமல்ல, அவரது கரியருக்கும் பொருந்தும். ஆரம்ப காலங்களில் சுமாராக ஆடியவர் அதன் பின்னர் நடத்திய வேட்டை வெறித்தனம்.

இவர் இப்படித்தான் ஆடுவார் என கணிக்க முடியாது. இவர் இந்த திசையில் தான் பந்தை விளாசுவார் என ஃபீல்டிங் நிறுத்தவும் முடியாது. என்ன மனநிலையில் இருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ள முடியாது.

இப்படி ரசிகர்களுக்கும், கப்டன்களுக்கும், ஃபீல்டர்களுக்கும், பவுலர்களுக்கும் புரியாத புதிராக விளங்குவார் டிவில்லியர்ஸ். ஆனால் நிமிடங்களில் முடிவுகளை, நிலைமைக்கேற்ப மாற்றி எடுக்கும் திறன் கொண்டவர்.

அவர் சார்ந்த அணி ஒரு இலக்கைத் துரத்துகிறது என வைத்துக் கொள்வோம். இவர் களத்தில் நிற்கிறார் எனில் எதிரணியின் இதயத்துடிப்பு நோர்மலாக இருக்காது. அந்த பயம்தான் ஏ.பி.டிவில்லியர்ஸ். பட்டிங்கில் அவருக்கு 'வீக் ஜோன்' என்ற ஒன்று கிடையவே கிடையாது. டெஸ்ட், ஒருநாள் இரண்டிலும் ஐம்பது ஓட்டங்களுக்கு மேல் சராசரி வைத்திருக்கும் முக்கியமான வீரர் அதிவேக அரைச் சதம், அதிவேக சதம், அதிவேக 150 ஓட்டங்கள். அதி மெதுவான நாற்பது ஓட்டங்கள் என எத்தனையோ சாதனைகள் அவர் பக்கம் இருக்கின்றன .

இன்னும் பல சாதனைகள் அவரால் உடைக்கப்படுவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், சாதனைகள் பற்றிக் கேட்டால் மெல்ல சிரிக்கிறார்.

"விளையாட்டில் ஒரு வீரனின் பங்கு என்பது அவன் சார்ந்த அணியை வெற்றி பெற வைக்க முயற்சிப்பதுதான். அதில் தனி நபர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை. ஒரு வேளை நான் ஓய்வு பெற்று வீட்டில் உட்காரும்போது, வயதான காலத்தில் இந்த சாதனைகளை நினைத்து நான் மட்டும் பெருமை பட்டுக்கொள்ளலாம், அதைத் தவிர வேறு எதற்கும் சாதனைகள் உதவாது. உரிய நேரத்தில் அணிக்கு முப்பது ஓட்டங்கள்தேவைப்படும்போது அந்த ஓட்டங்களை அடித்து அணியை வெற்றி பெற வைத்தால் கிடைக்கும் மகிழ்ச்சி அளவில்லாதது. அதுதான் நான் விரும்புவது!" என பக்குவமாகச் சொல்கிறார்.

டிவில்லியர்ஸின் எண்ணமெல்லாம் அவரது நாட்டுக்கு உலகக்கோப்பையை வாங்கித் தருவது தான். 2015 உலகக் கோப்பை அரையிறுதியில் தென்னாபிரிக்கா தோற்றபோது இந்தியாவே அதிர்ச்சி அடைந்தது. டிவில்லியர்ஸ் கண்ணோரத்தில் கண்ணீர் துளிகள் துளிர்த்த போது, இங்கேயும் சிலர் கலங்கினார்கள். இந்தியாவுக்கு அடுத்தபடியாக டிவில்லியர்ஸ்காக தென்னாபிரிக்கா உலகக் கோப்பையை வெல்ல வேண்டும் என இந்தியர்கள் விரும்பினார்கள்.

அது அப்போது நடக்கவில்லை. 2019 உலகக்கோப்பையில் என்ன நடக்கிறது என பொறுத்திருந்து பாப்போம். "என் கரியரை வெற்றியுடன் நிறைவு செய்ய விரும்புகிறேன்" எனச் சொல்லியிருக்கிறார் டிவில்லியர்ஸ். விராட் கோலியை கிரிக்கெட்டின் ரொனால்டோ எனச் சொன்னால் நாட்டுக்காக கோப்பையைத் தூக்க துடிக்கும் டிவில்லியர்ஸ் தான் கிரிக்கெட்டின் மெஸ்ஸி. (க)

# facebook பொறுமை என்னையும் சோதித்தது

நான் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கிறேன். இந்த ஆண்டுடன் என் கல்லூரி படிப்பு முடிகிறது. இன்று என் கல்லூரியில் எனக்கு நேர்முக தேர்வு **(Campus Interview)** இருக்கிறது. இது தான் கடைசி சுற்று. ஏற்கனவே நடந்த மூன்று சுற்றுகளில் தகுதி பெற்றேன். இன்று கடைசி சுற்று. இதில் தகுதி பெற்றால்எனக்குவேலைகிடைத்துவிடும்.

நேர்முக தேர்வு 11 மணிக்கு தொடங்குகிறது. ஆனால் இப்பொழுதே மணி 10 ஆகிவிட்டது இன்னும் நான் கல்லூரிக்குள் செல்லவில்லை. ஏதோ சில காரணங்களால் தாமதமாகிவிட்டது.

மிகவும் அவசர அவசரமாக புறப்பட்டேன். கல்லூரி செல்வதற்கு பேருந்தில் ஏறி இருக்கையில் அமர்ந்து கொண்டேன்.சிறிது நேரம் கழிந்ததும் என் கல்லூரி வந்துவிட்டது. பேருந்தில் இருந்து இறங்கினேன்மணி 10.30 தான் ஆகி இருந்தது. பேருந்தில் இருந்து இறங்கியதும் சாலையை கடந்தால் என் கல்லூரி வந்து விடும்.

கல்லூரிக்கு செல்ல சாலையை கடக்க நின்று கொண்டு இருந்தேன். என் பக்கத்தில் நின்று கொண்டு இருந்தவர் "சார் சார்" என்று என்னை கூப்பிட்டார். அவரை திரும்பி பார்த்தேன் அவருக்கு ஐம்பது வயது இருக்கும். கையில் ஒரு குச்சியும், முகத்தில கறுப்புகண்ணாடியும் அணிந்து இருந்தார். அதை பார்த்ததும் அவர் பார்வையற்றவர் என்று புரிந்து கொண்டேன். பின்பு அவரை பார்த்து சொல்லுங்க ஐயா" என்று கூறினேன்.

"என்னை எதிரில் இருக்கும் வங்கியில் விட்டுவிடுங்கள் சார்" என்று கூறினார். நானும் அவரின் கையை பிடித்து சாலையை கடந்து வங்கியின் அருகில் விட்டுவிட்டேன். "சார் கொஞ்சம் வங்கி உள்ளே என்னை விட்டு விடுங்கள் என்று கேட்டார்" மணி 10.40 ஆகியிருந்தது, தேர்வுக்கு இன்னும் கொஞ்ச நேரம் மட்டுமே உள்ளது. சரி என்று அவரை வங்கி உள்ளே விட்டேன். மறுபடியும் அவர் " சார் என் கணக்கிலிருந்து பணம் எடுக்க வேண்டும் எனக்கு உதவி செய்யுங்கள்" என்றார். அற்கு நான் கொஞ்சம் கோபமா "ஐயா எனக்கு நேரம் ஆகிவிட்டது நீங்க வேறு யாரிடமாவது உதவி கேளுங்கள்" என்றேன். அதற்கு அவர் என்னிடம் "சார் தயவு செய்து உதவி செய்யுங்கள் சார்" என்றார். அவரை விட்டுச்செல்லவும் என் மனம் இடம் கொடுக்கவில்லை. அவருக்கு பணம் எடுத்துக் கொடுத்து வங்கியின் வெளியில் விட்டுவிட்டேன். மணி 11.15 தேர்வு ஆரம்பமாகியிருக்கும்.



அவர் என்னிடம் "சார் ரொம்ப நன்றி சார், அப்படியே என்னை பேருந்தில் மட்டும் ஏற்றி விடுங்கள் சார்" என்று கூறினார். அது வரை பொறுமையாக இருந்த நான் அதை கேட்டதும் கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டேன் அவரை கண்ட படி திட்டிவிட்டேன். என்னை விட வயதில் பெரியவர் என்று கூட பார்க்காமல் அவரை திட்டி விட்டு அங்கே இருந்து கல்லூரிக்கு புறப்பட்டு விட்டேன்.

மணி 11.30 நேர்முக தேர்வு முடிந்து இருக்கும் எனக்கு வேலை கிடைக்காது என்று நினைத்துக் கொண்டே கல்லூரிக்குள் சென்றேன். என் அம்மா எனக்கு வேலை கிடைத்து விடும் என்று என்னை கோவிலுக்கு எல்லாம் கூட்டிக்கொண்டு சென்றதை நினைத்துக் கொண்டே நேர்முக தேர்வு நடக்கும் அறைக்கு சென்றேன். அங்கே சென்றதும் தான் எனக்கு தெரிந்தது, ஏதோ சில காரணங்களால் தேர்வு நாளை ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது என்று.

அதைக் கேட்டதும் மகிழ்ச்சியில் கல்லூரியிலிருந்து வெளியே வந்தேன். வெளியே வந்ததும் சோகத்தின் உச்சத்தை அடைந்தேன். அந்த பார்வையற்றவர் இன்னும் சாலையை கடக்காமல் நின்றுகொண்டு இருந்தார். தேர்வு இன்று இல்லை, நாளை தான் என்று எனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தால் அவரை அப்படி திட்டியிருக்கமாட்டேனே. அந்நேரத்தில் என் பொறுமையை கடைப்பிடிக்க மறந்துவிட்டேனே என்று எண்ணினேன்.

நான்செய்த தவறை உணர்ந்து அவரிடம் போய் "ஐயா என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறி அவரை அவரின் வீட்டிலையே விட்டு விட்டேன். நானும் வீடு திரும்பினேன்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 991

Search for people, places and things — Nagendram Home

### தர்சிகா




### சிந்து




### தனுசா




### கஜருபன்




### இராஜேஸ் கரன்




### பவித்திரா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 73

## எமக்கு உடல் நலக்குறைவு ஏற்படும் பொழுது...

ஒவ்வொரு தடவையும் எமக்கு உடல்நலக்குறைவு அல்லது ஒரு நோய் நிலை ஏற்படும் பொழுது மனத்தைரியத்துடன் அதனை எதிர்கொண்டு அதிலிருந்து மீள்வதற்கு முயற்சி எடுத்தல் அவசியமாகும்.

தடிமன், தசை நோ, வயிற்றுக் குழப்பம் போன்ற இயற்கையாக மாறக்கூடிய நோய்நிலைகளுக்கு மருந்து பாவிக்க வேண்டிய அவசியம் இல்லை. வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய ஒரு நிலை ஏற்படும் பொழுது நாம் எமது மருத்துவம் சம்பந்தமான குறிப்புக்கள், துண்டுகள், புத்தகங்கள், சோதனை முடிவுகள் அனைத்தையும் எம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும். அவை எமக்குப் பொருத்தமான மருத்துவப் பராமரிப்பை தீர்மானிப்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். இவற்றை எடுத்துச் செல்ல நாம் தவறினால் எமக்குப் பொருத்தமான சிகிச்சையை ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாம். சில முக்கியமான ஆவணங்களை போட்டோ பிரதி எடுத்து வைத்துக்கொள்வது எமது மருத்துவ தகவல்கள் தொலையும் சந்தர்ப்பங்களில் மிகவும் பயனுடையதாக அமையும்.





மருத்துவப் பராமரிப்பு சம்பந்தமான சகல ஆவணங்களையும் பைல்கவரில் போட்டு பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியமாகும். வைத்தியர் சோதிக்கும் கருவியை (ஸ்ரெதஸ்கோப்) காதில் மாட்டியிருக்கும் பொழுது அவருடன் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும். காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் கதைப்பது வைத்தியருக்கு கேட்காது. நாம் கதைத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் கருவியினால் உங்களை சோதித்துப் பார்ப்பதும் கடினமாக இருக்கும்.

எமது நோய் நிலை சம்பந்தமாக நாமே வைத்தியருக்கு விபரிப்பது நல்லது. எமக்கு இருக்கும் உண்மையான சரியான அறிகுறிகளை எம்மால் மட்டுமே முழுமையாக விபரிக்க முடியும். அதாவது ஒரு நோயாளியின் நோய் நிலை சம்பந்தமாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் விபரிப்பதிலும் பார்க்க அந்த நோயாளியே நேரடியாக வைத்தியருக்கு சொல்வது சிறந்தது. நோயாளிக்கு பேசும் ஆற்றலில் அல்லது சிந்திக்கும் ஆற்றலில் தடுமாற்றங்கள் இருந்தால் அல்லது மயக்க நிலை, வலிப்பு நிலை ஏற்பட்டால் குடும்ப உறுப்பினர்கள் அவரின் நிலை சம்பந்தமாக விபரிக்க வேண்டிய தேவை ஏற்படலாம்.

நாம் பாவித்துக் கொண்டிருக்கும் மாத்திரைகளின் பெயர்களை அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். மாத்திரைகளின் நிறத்தையும் வடிவத்தையும் சொல்லி அதனை அடையாளப்படுத்த முனைவது சில சமயம் ஆபத்திலும் முடியலாம்.

ஒவ்வொரு வகையான மாத்திரைகளும் பல்வேறுபட்ட வடிவங்களிலும் நிறங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

எனவே நீங்கள் குறிப்பிடும் வடிவத்தையும் நிறத்தையும் வைத்து நீங்கள் என்ன மாத்திரை பாவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை வைத்தியரினால் கண்டறிவது சிரமம்.

வைத்தியரைச் சந்திக்கும் போது நாம் எமது நோய் நிலை சம்பந்தமான சகல தகவல்களையும் கேட்டுத் தெரிந்து கொள்வது அவசியமாகும். உதாரணமாக எமக்கு என்ன நோய்கள் இருக்கின்றன? எங்கள் குருதி அமுக்கம் எவ்வளவு? ஒவ்வொரு மாத்திரைகளும் எதற்காக தரப்படுகின்றன? அவற்றின் பெயர் என்ன? செய்யப்பட்ட சோதனையின் முடிவு என்ன? உணவு முறை எப்படி அமைய வேண்டும்? என்ன வகையான உடற்பயிற்சிகள் செய்ய முடியும் போன்ற வினாக்களுக்கான விடைகளைத் தெரிந்து கொள்வது எமது உரிமையும் கடமையுமாகும்.

சிறிய மருத்துவப் பிரச்சினைகளுக்கும் மருத்துவ நிபுணரை சந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எமது வீட்டின் அருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலையில் வைத்தியரை சந்திக்க முடியும். தேவை ஏற்படின் மேலதிக சிகிச்சைகக்கான ஒழுங்குகளை அந்த வைத்தியர் செய்து தருவார்.

வைத்தியர் கூறும் சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்வது எமக்கு கஷ்டமாக இருந்தால் அதனை திறந்த மனதுடன் வைத்தியருக்கு நாம் தெரியப்படுத்த வேண்டும். அப்படியான சந்தர்ப்பங்களில் மாற்று வழிகள் பற்றி ஆராய்வார்.

வைத்தியர் கூறுவது ஆலோசனையே தவிர உத்தரவு அல்ல. எமது விருப்பத்திற்கு அமைவாகவும் எமது அனுமதியுடனும் மட்டுமே சிகிச்சை முறை இறுதியில் வடிவமைக்கப்படும். எனவே வைத்தியரின் ஆலோசனையைக் கேட்டபின் எமது விருப்பத்தையும் தீர்மானத்தையும் வைத்தியருக்கு தெரியப்படுத்துவது எமது உரிமையும் கடமையும் ஆகும்.



மருந்துகளை மருந்தகங்களில் வாங்கும் போது அதனைப் பாவிக்கும் முறை பற்றியும் கேட்டறிதல் வேண்டும். மருந்து காலாவதியாகும் திகதியையும் பார்த்து வாங்குதல் வேண்டும்.

எமக்கு இருக்கும் அறிகுறிகளை கூட்டியோ மறைத்தோ, அல்லது குறைத்தோ வைத்தியருக்கு தெரியப்படுத்தினால் அது எமது வைத்திய முறையில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

எனவே வைத்தியரை எமது நண்பராக கருதி உண்மை நிலையை அவருக்கு தெரியப்படுத்துவது நல்லது. எமது மருத்துவத் தகவல்களின் இரகசியத் தன்மை எப்பொழுதும் வைத்தியர்களால் பேணப்படும். ஒவ்வொரு நோயுடனும் போராடி வெற்றி பெற்று ஆரோக்கியமாக வாழ முயற்சி எடுப்போம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

## உடற்பருமன் சுட்டெண் (body mass index)

உடற்பருமன் சுட்டெண், ஒருவருடைய உடல் நிறையானது அவருடைய உயரத்திற்கு ஏற்ப எவ்வாறு அமைந்துள்ளது என்பதை உத்தேச அளவில் குறிக்கும் ஒரு சுட்டெண் ஆகும். இது ஒருவரின் உடல் நிறையை (Kg) அவரின் உயரத்தின் வர்க்கத்தால் ($m^2$) வகுத்து கணிக்கப்பட வேண்டும்.

$$\text{உ.ப.சு} = \frac{\text{நிறை (Kg)}}{\text{உயரம் } (m^2)}$$

உ.ப.சு இனை கணிப்பதன் ஊடாக ஒருவருடைய உடலில் எவ்வளவு நிறை தேவையான அளவை விட அதிகமாக உள்ளது / குறைவாக உள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும், என்பதோடு ஒத்த வயதுடைய ஏனையவர்களுடனும் அதனை ஒப்பிட்டு பார்க்க கூடியதாக இருக்கும்.

உ.ப.சு ஊடாக ஒருவருடைய உடலில் உள்ள கொழுப்பின் அளவினை நேரடியாக கணிக்க முடியாது. ஆனால் உடலில் தேவையற்ற அளவில் அதிகப்படியான கொழுப்பு உள்ளதை அறிந்து கொள்ள முடியும். உங்கள் உடல் எடை ஆரோக்கியமானதா என்பதை பின்வரும் அட்டவணையுடன் ஒப்பிட்டு அறிந்து கொள்ளமுடியும்.

<18 Under weight (குறைவான எடை)
18.5 - 22.9 Normal weight (ஆரோக்கியமான எடை)
23.0 - 26.9 0ver weight (அதிக எடை)
27.0 < Obese (மிக அதிக எடை)
> 30 morbid obese (ஆபத்தான எடை)

மேலும் உங்கள் உடற்பருமன் சுட்டெண் அதிகமாக இருப்பின் / மிக குறைவாக இருப்பின் உங்கள் உயரத்திற்கேற்ற ஆரோக்கியமான எடையை பின்வருமாறு கணிக்கலாம்.

இருக்க வேண்டிய எடை = BM I (23)x உயரம் $^2$

ஒருவருக்கு உ.ப.சு அதிகரிக்கும் போது அவருக்கு நீரிழிவு, கொலஸ்ரோல் , உயர் குருதி அழுக்கம் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உ.ப.சு குறைவாக உள்ளவர்களுடன் ஒப்பிடுகையில் மிக அதிகமாகும் என்பதுடன் ஏற்கனவே இந்நோய் உள்ளவர்களுக்கு மாரடைப்பு . பாரிசவாதம் என்பன ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் மிக அதிகம். எனவே உங்கள் உடல் நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருந்து ஆரோக்கியமான வாழ்வினை பெற்றிடுங்கள் .

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.